24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 10 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2014

# ஒன்ராரியோ மாகாண அரசின் தேர்தல்

ஒன்ராரியோ மாகாணத்தின் தற்போதைய லிபரல் கட்சி அரசு சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என தெரிந்தவுடன் முதல்வர் கதலின் வின் ஒன்ராரியோ மாகாண அரசை கலைத்து விடுமாறு ஒன்ராரியோவின் துணைநிலை ஆளுநரிடம்



(Lieutenant Governor) பரிந்துரைத்தார். அதை அடுத்து துணைநிலை ஆளுநர் David Only ஒன்ராரியோ மாகாண அரசை கலைத்துவிட்டு அடுத்த மாகாண அரசிற்கான தேர்தலை யூன் 12, 2014 இல் நடத்துமாறு உத்தரவிட்டார்.

தற்போதைய லிபரல் கட்சியின் மாகாண அரசு ஒக்ரோபர் 06, 2011 இல் நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு சிறு பான்மை அரசாக இதுவரைகாலமும் செயற் பட்டு வந்தது. இந்த தேர்தலின் போது 107 ஆசனங்களை கொண்ட ஒன்ராரியோ நாடாளுமன்றத்தில் லிபரல் கட்சி 53 ஆசனங்களையும், பழமைவாதக்கட்சி 37 ஆசனங்களையும், புதிய ஜனநாயகக்கட்சி 17 ஆசனங்களையும் பெற்றிருந்தன. பெரும் பான்மை அரசை அமைக்க ஒரு கட்சி, குறைந்தது 54 ஆசனங்களையாதல் பெற்றிருக்க வேண்டும்.

மே 02, 2014 இல் துணைநிலை ஆளுநர் ஒன்ராரியோவின் 40ஆவது நாடாளு மன்றத்தை கலைக்கும் போது நாடாளு மன்றத்தில் லிபரல் கட்சி 48 ஆசனங்களை



மட்டுமே கொண்டிருந்தது. பழமைவாதக் கட்சி 37 ஆசனங்களையும் புதிய ஜனநாய கக்கட்சி 21 ஆசனங்களையும் ஒரு ஆசனம் வெற்றிடமாகவும் இருந்தது.

இதனால் இம்முறை வரவு செலவுத் திட்டத்தை ஒன்ராரியோ நாடாமன்றத்தில் லிபரல் கட்சிஅரசு சமர்ப்பிக்கும் போது அது புதிய ஜனநாயக க்கட்சியின் ஆதரவை பெறுவதற்காக வரவு செலவுத்திட்டத்தில் புதிய ஜனநாயகக்கட்சி சார்பு விடயங்கள் பலவற்றை சேர்ந்திருந்தது. இந்த 2014 ஆம் ஆண்டிற்கான லிபரல்கட்சி அரசின் வரவு செலவுத்திட்டம் $12.5 பில்லியன் துண்டு விழும் தொகையை கொண்டிருந்தாலும் 2017-18 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை இல்லாமல் மேலதிக வரவு காட்டப்படும் என உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு புதிய ஜனநாயகக்கட்சியின் ஆதரவை பெறுவதற்காக லிபரல் கட்சிஅரசு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்திருந் தாலும், பல புதிய ஜனநாயகக்கட்சி ஆதரவு தொழிற்சங்கங்களின் அறிவுறுத்தல்களை




மீறி புதிய ஜனநாயகக்கட்சி அரசின் தலைவி ஆண்ரியா ஹோவத் (Andrea Horwath) வரவு செலவுத்திட்டத்திற்கு தனது கட்சி ஆதரவளிக்கமாட்டாது என தெரிவித்திருந்தார். இதனாலேயே ஒன்ராரியோ நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படாமல் தோற்கடிக்கப்பட முன்னரே முதல்வர் கதலின் வின் ஒன்ராரியோ நாடாளு மன்றத்தை கலைக்க முன்வந்தார்.

ஒன்ராரியோ மக்கள் கடந்த தேர்தலில் சிறுபான்மை அரசை தெரிவுசெய்ததன் மூலம் 18 மாதங்களில் இன்னொரு தேர்தலை சந்திக்கிறார்கள். ஒன்ராரியோ மாகாணத்தில் ஒருமுறை தேர்தல் நடத்த $80 மில்லியன் செலவாகிறது.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்




Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி



TOYOTA
MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099



Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply



•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.
Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# HOUSE FOR SALE




**MORNINGSIDE & FINCH**

*Luxury executive home 3500 Sq.ft. approx. Tastefully renovated. new gourmet kitchen with granite new hardwood and ceramics floors, skylights, 2 ensuites prof. Finished walk-out base-ment to ravine freshly painted, open layout loaded upgrades. Conv. location.*

**Asking price $699,000**



Rama Bahri

Sales Representative

Tel: 416.565.2596

HomeLife/GTA Realty Inc., Brokerage*

Tel: 416.321.6969

•Independently Owned & Operated



Allstate
You're in good hands.

# Allstate Insurance Company Of Canada

## Home & Auto Insurance

## வீடு, வாகன காப்புறுதி





Suren Navaratnarajah

(Agent)

Cell: 416.520.6916

E-mail: snavaratnarajah@allstate.ca

4525 Kingston Road
Unit H5 Scarborough, ON M1E 2P1
Office: 416.283.0544 x 5012





# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

போட்டி 1
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 2
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)

1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

போட்டி 3
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 4
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும் கட்டுரை

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.

நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# இழந்த உறவுகளை நினைவுகூர்தலும், யுத்த வெற்றிவிழாவும்!

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

## மே - 18

இந்த நாளை இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களை நினைகூரும் நாளாக தமிழ் மக்கள் அனுஷ்டிக்கின்றனர். அதேநாளை இலங்கை அரசாங்கம் போர் வெற்றிவிழாவாக கொண்டாடுகின்றது. இந்த நாளை நினைவு கூர்வதை தடுக்கும் நடவடிக்கைகள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பரவலாக, பல்வேறு கோணங்களில் நடைபெற்றுக் கொண்டி ருக்கையில், அரசாங்கத்தின் போர் வெற்றிவிழாவை இம்முறை மாத்தறையில் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மே-18 என்பது விடுதலைப்புலிகளை நினைவுகூரும் நாளல்ல. அது, இறுதிப் போரில் ஆயிரக்கணக்கில் உயிரிழந்த ஒட்டு மொத்த மக்களை நினைவுகூரும் நாளாகும். ஆனால், மாவீரர் நாளை எவ்வாறு தமிழ் மக்கள் நினைவுகூரக்கூடாது என இலங்கை அரசாங்கமும் அதன் பாதுகாப்பு படைகளும் தடுக்கின்றனவோ அதேநிலையிலேயே இந்நாளும் தடைசெய்யப்படுகின்றது. தமிழ் பிரதேசங்களில் குறிப்பாக வடக்கில் படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, யாழ். பல்கலைக் கழகமும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 16ஆம் திகதி யிலிருந்து 21ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களி லும் மற்றும், மாணவர்கள் விடுதிகளிலும் இது தொடர்பான அறிவித்தல் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. அத்துடன், பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக் கும் மாணவர்கள் விடுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் 16 ஆம் திகதி முதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டாய மாக கற்றல் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, மாணவர்களை விடுகளுக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள் ளார். உண்மை நிலையும் அதுதான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர், பீடாதிபதி கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள், மாணவர் ஒன்றியப் பிரதி நிதிகள் ஆகியோர் காங்கேசன் துறையில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் கடந்த 7ம் திகதி இது தொடர்பில் யாழ். படைத்தளபதி உதயபெரேராவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போது, மே-18 தினத்தை அனுஷ்டிப்பது இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவு



கூர்வதற்காகவே எனவும், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அந்த இறுதி யுத்தத்தில் உயிரிழந்துள்ளதாக வும், அதனால் பல்கலைக்கழகத்தில் அந்த நாளை நினைவுகூர்வதில் தவறில்லை எனவும் தெரிவித்தனர். அதற்குப் பதிலளித்த இராணுவத்தளபதி முள்ளி வாய்க்கால் நினைவு நாளை கூட்டமாகச் சேர்ந்து அனுஷ்டிப்பதற்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது எனவும், தனித்தனியாக வீடுகளில் அனுஷ்டிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டுமே தவிர அரசி யல் விடயங்களில் உள்நுழைய வேண்டாம் எனவும் இராணுவத் தளபதி மாணவர் களுக்கு ஆலோசனை வழங்கினார். எனினும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் மே-18 நாளை சகலரும் அனுஷ்டிக்க முன்வருமாறு பகிரங்கமாக அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், யார் தடுத்தாலும் இந்த நாளை அனுஷ்டித்தே தீருவோம் என்று தெரிவித்துள்ளனர். இந்த பத்தியை வாசகர்கள் வாசித்துக் கொண்டிருக்கையில் முள்ளிவாய்க்கால் நினைவுநாள் அனுஷ்டிக் கப்பட்டுக் கொண்டிருக்கலாம் அல்லது அனுஷ்டித்து முடிந்துமிருக்கலாம்.

இத்தருணத்தில், அரசாங்கமும் அதன் படைத்தரப்பும் ஏன் இவ்வாறான நாட்களை தமிழ் மக்கள் நினைவுகூரக்கூடாது என்று கடுமையாக தடைசெய்கின்றது என்பதற்கு எவ்வித நியாயமான காரணங்களையும் தேட முடியாதுள்ளது. தமிழ் ஆயுத இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்னர் இலங்கையில் ஆயுதமேந்தி போராடியவர் கள் சிங்கள இளைஞர்கள்தான். ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி) என்ற இந்த அமைப்பினருக்கு எதிராக அன்றைய நாட்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை அடுத்தும் அதன் தலை- வரான ரோகண விஜேவீர கொல்லப்பட்டதை யடுத்தும் அந்த இயக்கம் ஆயுதப் போராட்டத்திலிருந்து விலகி இன்று ஒரு அரசியல் கட்சியாக செயற்படுகிறது. ஆனாலும், தங்கள் தலைவர் கொல்லப் பட்டதை அவர்கள் வருடா வருடம் நினைவு கூர்ந்து வருகின்றனர். அதற்கு அரசாங்கத்தினாலோ அல்லது பாதுகாப்புத் தரப்பினராலோ எவ்வித தடைகளும் விதிக்கப்படுவதில்லை. அன்றைய நாட்களில் ஜே.வி.பியினரையும் அதன் தலைவரையும் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதிகள் என்றே குறிப்பிட்டு வந்தமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இந்நிலையில் மாவீரர் நாளை தமிழர்கள் அனுஷ்டிப்பதைக்கூட தவறு என்று இலங்கை அரசாங்கம் கூறுவதில் நியாய மில்லை. ஏனெனில், அவர்கள் அனைவரும் தமிழ் மக்களின் பிள்ளைகளே. புலிகள் என்ற நிலையில் இல்லாவிட்டாலும் தங்கள் பிள்ளைகளை பெற்றோர் ஓர் நாளில் நினைவு கூர்வதை தவறென்று சொல்ல முடியாது. இறுதிப் போரின் போது கட்டம் கட்டமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் எறிகணைகளால் கொல்லப்பட்டனர். அவர்களின் மரணச் சடங்குகளை மேற்கொள்ளவோ அல்லது அவர்களை மயானமொன்றில் தகனம் செய்யவோ, புதைக்கவோ கூட முடியாத நிலையில் அந்தந்த இடங்களில் உயிரிழந்த பலரின் சடலங்கள் கைவிடப் பட்டன. அவ்வாறு அவர்கள் பலியான நாட்களைக் கூட சரியாக நினைவில் பதிவுசெய்து கொள்ள முடியாத ஒரு நிலை அப்போதிருந்தது. அவ்வளவு கொடூரமான யுத்தச்சூழல் அது. அதனால், உயிரிழந்த உறவுகளை ஒட்டுமொத்தமாக நினைவுகூரும் நாளாக மே-18 தினத்தை மக்கள் அனுஷ்டிப்பதில் தவறு எதுவுமே இல்லை. தமிழர்கள் இந்த நாளை அனுஷ்டிப்பதை தடைசெய்து விட்டு, அதே மே 18 ஐ யுத்த வெற்றி நாளாக பெருமெடுப்பில் அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடுகின்றது. இறுதி யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டது குறித்தும், அன்றைய நாட்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் சர்வதேச நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரும் அரசாங்கம் யுத்த வெற்றியைக் கொண்டா டாமல் இருப்பதே நியாயமானதும், பொருத்த மானதுமாகும். இதனை மறுதலித்து விட்டு, வெற்றிவிழாவைக் கொண்டாடிக் கொண்டு, மாபெரும் இழப்புகளை உறவு களைப் பிரிந்த அந்த துன்பியல் நாட்களை நினைவு கூர்வது தவறென்று எவ்வாறு கூறமுடியும்? எவ்வாறு அதற்கு தடைவிதிக்க முடியும்?

**- விகிர்தன் -**

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# மனதின் சர்க்கஸ்



சத்குரு வாசுதேவ்

சர்க்கஸ் தெரியும். அதென்ன மனதின் சர்க்கஸ்?
முதலில் சர்க்கஸ் என்பது என்ன?

மிக நேர்த்தியாய் ஒழுங்குபடுத்தப்பட்ட, அதேநேரம் பெரும் குழப்பம் நேர்வதைப் போல் தோன்றக்கூடிய செயல்களின் ஒருங்கிணைப்பு. ஒருவிதத்தில் பார்த்தால் அது பெருங்குழப்பம், இன்னொரு விதத்தில் பார்த்தால் வெகு நேர்த்தி!

மனித மனதிலும், மூளையிலும் அதேதான் நடைபெறுகிறது. மூளையில் நியூரான்களின் நடனத்தைப் பார்த்தால், அசாத்தியமான ஒழுங்கும் திட்டமிடலும் அதில் உள்ளன. அவையே உடலசைவாகவும், செயல்களாகவும் வெளிப்படுகின்றன. மூளையில் உள்ள நியூரான்கள் ஒருங்கிணைக்கும் அற்புத நாடகத்தின் விளைவாக, மனித உடலுக்குள் இப்போது கோடிக்கணக்கான விஷயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான மனிதர்களின் அனுபவத்தில், மனம் என்பது குழப்பங்களின் குவியலாகவும் தோன்றுகிறது.

சர்க்கஸில் பாருங்கள், அங்கிருக்கும் கோமாளி கூட வித்தைகளில் தேர்ந்தவர் தான். ஆனால் ஒரு கோமாளி போல் நடந்து கொள்கிறார். வெளித் தோற்றத்தில் ஒரு கோமாளி போலவும் வித்தையில் திறமையும், சமநிலையும் கொண்டவராகவும் இருக்கிறார். மனதுக்குள் ஏற்படும் செயல்களின் அடிப்படையில் பல பேருடைய அனுபவமும் அப்படித்தான் இருக்கிறது.

மனம் நடத்தும் வித்தைகளில் என்னென்ன சாத்தியங்கள் இருக்கின்றன தெரியுமா? அவை உங்களை உயர்ந்த சிகரங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கலாம். அல்லது உங்களுக்குள்ளேயே ஆழ்ந்த நரகங்களை உருவாக்கலாம். உங்கள் ஒவ்வொருவருக்குமே இந்த இரண்டு வாய்ப்புகளும் உள்ளன. எனவே, இந்த வித்தையை எப்படி நடத்தப் போகிறீர்கள், அதற்கு எப்படி பொறுப்பேற்கப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்தே எல்லாம் இருக்கிறது. உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மிக அற்புதமான கருவியாகவும், மிக அற்புதமான வாய்ப்பாகவும் இருக்கிற மனமே, உங்களுக்கான துயரங்களை உற்பத்தி செய்யும் இயந்திரமாகவும் மாறிப்போனது எப்படி?

மனிதர்களின் அத்தனை துயரங்களும் மனதிலேயே உருவாகின்றன. ஒருவருக்கு மனம் ஓர் இனிய அனுபவமாய் இருக்கிறது. இன்னொருவருக்கோ அது தாங்கமுடியாத துயரமாய் இருக்கிறது. அந்தத் துயரத்தைத் தாளமுடியாமல் அதிலிருந்து தப்பிக்க சில மன வக்கிரங்களை மனிதர்கள் உருவாக்குகிறார்கள். அவை தற்காலிக நிம்மதி தந்துவிடும். பிறகு, துயரத்தை இரண்டு மடங்கு பெருகச் செய்யும்.

உங்கள் தர்க்க அறிவு எல்லாவற்றையும் இரண்டாகப் பகுத்துக் காட்டுகிற தன்மை கொண்டது. தர்க்க அறிவு இப்படி தனித்தனியாகப் பகுத்துத் தருவதே, உங்களுக்குள் ஒருவிதமான புரிதலை ஏற்படுத்தத்தான். ஒரு கத்தி எதையும் இரண்டாக வெட்ட வேண்டுமென்றால், வெட்டப்பட்டது கத்தியில் ஒட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். நீங்கள் வெங்காயத்தை வெட்டுகிறீர்கள். பிறகு அதே கத்தியால் ஆப்பிள்களையும், மாம்பழங்களையும் நறுக்குகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் கத்தியில் வெங்காயச் சாறு ஒட்டியிருந்தால் ஆப்பிளும், மாம்பழமும் வெங்காயத்தின் சுவையோடிருக்கும். ஏதேனும் ஒன்றின் சாறு கத்தியில் ஒட்டிக் கொண்டால், அதன்பிறகு கத்தி உங்களுக்கு உதவியாக இருக்காது, உபத்திரவமாகத் தான் இருக்கும். அதுபோல உங்கள் தர்க்க அறிவு தன்னை எதனோடாவது அடையாளப்படுத்திக் கொண்டால், பிறகு அந்த அடையாளங்களோடு பிணைக்கப்பட்டு விடும். மனதின் அனுபவம் முழுவதுமாக சிதைந்துவிடும்.

புனிதத்தைச் சென்றடையும் ஏணியாய் இருக்க வேண்டிய உங்கள் மனம், பல்வேறு விஷயங்களுடன் தன்னை அடையாளப் படுத்திக் கொண்ட காரணத்தாலேயே நரகத்துக்கான படிக்கட்டுகளாய் மாறிவிட்டது.

பலரும் என்னிடம், "சத்குரு! வாழ்வின் மகத்தான ஒரு விஷயம் நீங்கள் கேளாமலேயே உங்களுக்கு இயல்பாக நேர்ந்துவிட்டது. நீங்கள் அகற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். எங்களுக்கு அது எப்போது நேரும்?" என்று கேட்பார்கள்.

இது தேர்ந்தெடுப்பதால் நிகழ்வதில்லை. அடையாளங்களுக்கு அப்பாற்பட்டு நிற்பதால் நிகழ்கிறது. உங்கள் உடலோடு, ஆண்-பெண் என்னும் பாலின பேதத்தோடு, உங்கள் குடும்பத்தோடு, உங்கள் தகுதிகளோடு, உங்கள் சமூகத்தோடு, உங்கள் ஜாதி, இனம், மொழி, தேசம் என்ற விதம்விதமான அடையாளங்களோடு இருக்கும்போது எந்தவொரு மனிதரும் தன் இயல்பான தன்மையின் உச்சத்தைத் தொட முடியாது.

ஈஷா பள்ளியை நாம் துவங்கியபோது "இது ஆன்மீகப் பள்ளியா? மாணவர்களுக்கு ஆன்மீகம் போதிப்பீர்களா?" என்பதுதான் முதல் கேள்வியாகக் கேட்கப்பட்டது. "அதை நாங்கள் செய்யவே மாட்டோம்" என்று பதில் சொன்னேன். இந்த உலகில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. ஆனால், பெரும் சேதங்களையும், சீரழிவையும் ஏற்படுத்துவது மதம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த முறைகேடுகள்தான். ஏனெனில், அவற்றோடு மிக உறுதியாக உங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறீர்கள். அதைத் தாண்டி உங்களால் பார்க்க முடியாது. எனவே, இத்தகைய அடையாளங்களைத் தாண்டி குழந்தைகள் வளர்க்கப்படும் போது, தன்னை உணர்தலை நோக்கி அவர்கள் இயல்பாக வழி நடத்தப்படுவார்கள். எனவே, மனம் என்னும் சர்க்கஸை குழப்பமானதாய் உணராமல் ஓர் அற்புதமாக நீங்கள் உணரவேண்டுமானால், உங்கள் அறிவு தன்னை எதனோடும் அடையாளப் படுத்திக் கொள்ளக்கூடாது. அத்தகைய அடையாளங்கள் வாழ்க்கை பற்றிய உங்கள் புரிதலை உருக்குலைத்து விடும்.

அக்பர்-பீர்பால் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அக்பர் குழந்தையாக இருந்தபோது வேறொரு பெண்ணிடம் பாலருந்தி வளர்ந்தார். அந்தப் பெண்ணுக்கு ஒரு மகன் உண்டு. அக்பர் ஒரு பேரரசராக வளர்ந்த பிறகு, தனக்கு பால் கொடுத்த அன்னைக்கு ஒரு கிராமத்தையே எழுதிக்கொடுத்தார். ஆனால், அந்தப் பெண்ணின் மகன் ஊதாரியாகச் சுற்றித் திரிந்து எல்லாவற்றையும் இழந்து வறுமையில் இருந்தார். ஒருநாள் அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது... "சக்கரவர்த்திக்கு என் அன்னைதான் பால் கொடுத்தார். அவர் எனக்குக் கடமைப்பட்டவர். ஒருவகையில் அவர் எனக்கு சகோதரர் முறை. ஏதாவது கேட்டால் அவரால் மறுக்க முடியாது." இந்த எண்ணம் தோன்றியதால் அவர் அக்பரைக் காண வந்தார். அக்பரும் அவரை வரவேற்று மரியாதை செய்து, அனைவருக்கும் தன் சகோதரர் என்று அறிமுகப்படுத்தி அரண்மனையில் தங்க வைத்தார். அவரும் அரச உடைகள் அணிந்து, பல கூட்டங்களில் கலந்து கொண்டார். ஆனால், அவருக்கு எதுவுமே புரியவில்லை.

சில வாரங்கள் போயின. அவருக்கு இன்னொன்றும் தோன்றியது. "என்னைச் சுற்றி நல்லவர்கள் யாரும் இல்லாததால்தான் எனக்கு சிரமங்கள் வந்தன. அக்பரைச் சுற்றி அருமையான மனிதர்கள் இருக்கிறார்கள். அனைவருக்கும் மேலாக பீர்பால் இருக்கிறார். அக்பர் சிறந்து விளங்க இதுதான் காரணம். பீர்பால் போல ஒருவர் உடனிருந்தால் நானும் சிறந்து விளங்குவேன்" என்று நினைத்தார். அக்பரிடம் சென்று, "உங்களுடன் பீர்பால் இருப்பதால் நீங்கள் சிறந்து விளங்குகிறீர்கள். உங்களுடன் பலர் இருக்கிறார்கள். எனவே என்னுடன் பீர்பாலை அனுப்பி வையுங்கள்" என்று கேட்டார். அவரைத் தனது மூத்த சகோதரராக அக்பர் கருதியதால் எதுவும் மறுத்துச் சொல்ல இயலவில்லை. எனவே அக்பர், "நீங்கள் பீர்பாலை அழைத்துச் செல்லுங்கள்" என்று சொன்னதோடு, மாலையில் அவையிலும் அதனை அறிவித்தார். ஒரு முட்டாளோடு போக நேர்வதை உணர்ந்த பீர்பால் அக்பரிடம், "உங்கள் அண்ணனுக்கு அறிவார்ந்த துணை அவசியம்தான். எனக்கு ஒரு யோசனை. அவரோடு என் அண்ணனை அனுப்பி வைக்கிறேன்" என்றார். "பீர்பால் இவ்வளவு அற்புதமான மனிதராக இருந்தால், அவரது சகோதரன் இன்னும் அற்புதமானவராக அல்லவா இருப்பார்" என்று கருதிய அக்பரின் அண்ணன் அதற்குச் சம்மதித்தார். அக்பருக்கும் மகிழ்ச்சி.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

1
மறுநாள், ஒரு பெரிய வழியனுப்பு விழாவிற்கு ஏற்பாடானது. பீர்பால், ஒரு காளை மாட்டுடன் வந்தார். ஆச்சரியமடைந்த அக்பரிடம் சொன்னார், "இதுதான் என் அண்ணன், நாங்கள் இருவரும் ஒரே தாயிடம்தான் பாலருந்தினோம்" என்று.

பெரிதாகவும், சிறிதாகவும் சில அடையாளங்கள் மனிதமனம் பற்றிக் கொள்வதால் வருகிற குழப்பங்கள் இவை. உங்கள் அடையாளங்கள் பல அடுக்குகளில் இருப்பதால் உங்கள் குழப்பங்களும் பல அடுக்குகளில் இருக்கின்றன. அப்படியிருந்தால் உங்கள் மனம் எந்த உயரத்தையும் நோக்கி எழாது.

நீங்கள் பிறந்த நாளிலிருந்தே குடும்பத்தோடு உங்கள் அடையாளத்தைத் தீவிரப்படுத்த, உங்கள் பெற்றோர் கடும்முயற்சி மேற்கொள்கின்றனர். உங்கள் சமூகத்துக்கும், ஜாதிக்கும் மதத்துக்குமான உங்கள் விசுவாசத்தை அதிகரிக்க இன்னும் சிலர் பிரச்சாரம் செய்கிறார்கள். தேசத்திற்காக நீங்கள் உயிரையே தரவேண்டுமென்றும் பிரச்சாரங்கள் நிகழ்வதுண்டு. வெவ்வேறு நிலைகளால் வெவ்வேறு தன்மைகளுடன் உங்கள் அடையாளம் உறுதிப்படவேண்டி எத்தனையோ பிரச்சாரங்கள் நிகழ்கின்றன. நீங்கள் சுதந்திரமான மனிதராக இருப்பதை யாரும் விரும்புவதில்லை. சுதந்திரம் கிடைத்தால் நீங்கள் பொறுப்பில்லாமல்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்




# உங்கள் விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள்.

# எனது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000 மட்டுமே!!!

கூட்டெண் 7
Brimley & Ellesmere




கூட்டெண் 1
9th Line & 16th Ave




கூட்டெண் 5
Morningside & Old Finch




கூட்டெண் 5
Steeles & Staines




கூட்டெண் 6
Markham/ 16th Ave




கூட்டெண் 9
9th Line & Hwy 7






**Jey Rasathurai** MBA, BBA (Hon)

Real Estate Sales Representative

**Dir : 416.624.4843**

**Bus: 416.491.3232**

1504 Markham Road,
Toronto ON M1B 2V9

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

**#1 Brokerage in Toronto***

*Source: Toronto Real Estate Board Data (January 1 to December 31, 2013). Combined Units Sold. Residential transactions for area delimited by entire Toronto MLS.

Brokerage Address: #112 - 895 Don Mills Rd, Toronto, ON M3C 1W3

***To Every Bird, Its Own Nest is Beautiful***

# தமிழகம் இனி வரவேற்காது...!

## தாயக மடல்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்கள் அகதிகளாக தமிழகத்திற்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அண்மைய நாட்களில் சிலர் படகுகளில் தமிழகத்திற்கு சென்றுள்ளனர். சிலர் இவ்வாறு செல்ல முற்படுகையில் இலங்கை கடற்படையினரிடம் பிடிபட்டுள்ளனர். யுத்தம் முடிவிற்கு வந்து, மக்கள் மீள்குடியேற்றப்பட்ட காலத்திலிருந்து ஏதோ வகையில் இலங்கையை விட்டு வெளியேறிவிட பலர் முயன்றுள்ளனர். முதலில் கனடாவிற்கு சட்ட விரோமாக பலர் கப்பலில் சென்றனர். பின்னர், அவுஸ்திரேலியாவிற்கு ஆயிரக் கணக்கிலானோர் படகுகளில் புலம்பெயர்ந்தனர்.

இப்போது அது மிகவும் குறைவடைந்துள்ள நிலையில், மீண்டும் சில எத்தனிப்புகள் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. அண்மைய நாட்களில் இவ்வாறு அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முற்பட்ட சிலரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இதனை விடவும் நீண்டதொரு கால இடைவெளிக்குப் பிறகு இலங்கையிலிருந்து படகில் அகதிகளாக இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த பத்துப் பேர் தமிழகத்திற்கு சென்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்கள் முன்னாள் போராளிகளின் குடும்பம் என்று தெரிய வருகின்றது. தாங்கள் ஏன் இவ்வாறு வர நேர்ந்தது என்பதையும் தமிழக அதிகாரிகளிடம் அவர்கள் விளக்கியுள்ளனர். தற்போது ஏற்பட்டுள்ள கெடுபிடிகள் தாங்க முடியாமலேயே தாங்கள் இந்தியாவுக்குத் தப்பி வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர். தங்களைப் போல் மேலும் சுமார் இரண்டாயிரம் அகதிகள் மன்னார் காடுகளில் பதுங்கி இருக்கின்றனர் என்றும் அவர்களும் தமிழகத்திற்கு வரத் தயாராகவுள்ளதாகவும் அவர்கள் தகவல் தெரிவித்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் செயற்பாடு மீண்டும் உள்ளதாகவும், விடுதலைப்புலிகளை மீளுருவாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன எனவும் தெரிவித்து தமிழர்களை இலங்கை இராணுவம் அச்சுறுத்தி வருகின்றனர் என்றும் அவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர். உண்மையில் இலங்கையின் தமிழ் பிரதேசங்களில் குறிப்பாக, வட பிரதேசத்தில் வாழும் மக்கள் தற்போது இயல்பான வாழ்க்கையை படிப்படியாக இழந்து வருகின்றனர். எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்கிற அச்சத்துடன் அவர்கள் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம் அண்மைக் காலத்தில் இலங்கை அரசினாலும் அதன் பாதுகாப்புத் தரப்பினாலும் பிரசாரப்படுத்தப்பட்டு வரும் 'விடுதலைப்புலிகள் மீளுருவாக்கம்' என்ற பிரச்சினைதான். இதனால் உடல், உள ரீதியாக அதிகம் பாதிக்கப்படுபவர்கள் முன்னாள் போராளிகளேயாவர். இறுதிக் கட்டப் போரின்போது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்து, புனர்வாழ்வு முகாம் எனும் தடுப்பில் இருந்து விட்டு படிப்படியாக விடுவிக்கப்பட்ட இவர்கள் சமூக வாழ்வில் இணைந்து கொள்வதிலேயே பல சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். தொழில் வாய்ப்பு, பொருளாதாரம் போன்ற விடயங்களும் அவர்களுக்கு பிரச்சினையானதாகவே உள்ளன.



- வன்னியிலிருந்து ஆதித்தன் -

அத்துடன் அவர்கள் தொடர்ந்தும் ஒரு அவதானிப்பு நிலையிலும் வாழவேண்டியுள்ளது. கடந்த காலங்களில் அவுஸ்திரேலியாவிற்கு படகுகளில் சென்ற மக்களில் அதிகமானவர்கள் முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. தடுப்பு முகாம்களில் அவர்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட வருடங்களை கழித்து விட்டே சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். இந்நிலையில் அவர்கள் மீளவும் சந்தேகப் பார்வையுடன் சமூகத்தில் வாழ வேண்டிய நிலை என்பது சிக்கலான ஒன்றாகும். பழைய வாழ்க்கையை மறந்து விட்டு தங்கள் குடும்பம், பிள்ளைகள் என வாழ விரும்பும் இவர்கள் மீண்டும் ஒரு அச்ச நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வன்னியில் அண்மையில் முன்னாள் போராளிகளை படையினரின் வாகனங்களில் ஏற்றி ஓரிடத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு அவர்கள் படையதிகாரிகளால் சில விளக்கங்கள் அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட போது அவர்களின் குடும்பத்தினர் குறிப்பாக அவர்களின் பிள்ளைகள் மிகவும் பதற்றமடைந்தனர். இவ்வாறானதொரு வாழ்க்கையை விரும்பாத நிலையிலேயே, இந்த நாடே வேண்டாம் என்று அவர்கள் ஆபத்தான கடற் பயணங்களில் தங்கள் சிறு குழந்தைகளுடன் புலம்பெயர ஆயத்தமாகின்றனர். ஆனாலும், அவர்கள் எங்கு சென்றாலும் கூட அவர்கள் எதிர்பார்க்கும் நிம்மதியான வாழ்க்கை சுலபமாக கிட்டப் போவதில்லை என்பதை அண்மையில் தமிழகத்திற்கு சென்றவர்களின் நிலை வெளிப்படுத்தியுள்ளது.

கடல் கடந்து தமிழகம் சென்ற அவர்கள் தாங்கள் முன்னாள் போராளிகள் என்ற உண்மையை தெரிவித்துள்ள போதிலும் அங்கும் சந்தேக வட்டத்திற்குள்ளேயே வைக்கப்படும் நிலைதான் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்ல இவ்வாறு கடல் கடந்து சென்ற குடும்பங்களின் ஆண்கள் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டு ஏனையோர் மண்டபம் முகாமில் வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது அக்குடும்பங்களின் சிறுபிள்ளைகள் உட்பட ஏனையோருக்கும் உள ரீதியாக பாதிப்பையே ஏற்படுத்தும். ஈழத்தமிழ் மக்கள் கடல் வழியாக தமிழகத்திற்கு அகதிகளாக வரக்கூடாது என்று தமிழக கரையோர காவல்படையினர் அறிவித்துள்ளமையினையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. முன்னர் இலங்கையில் மோசமான அச்சுறுத்தல் நிலவிய காலங்களிலெல்லாம் தமிழ் மக்கள் தமிழகத்தை நோக்கியே புலம்பெயர்ந்தனர். அவ்வாறு சென்றவர்கள் அங்கு முகாம் களிலும் சிலர் வெளியிடங்களிலும் தற்போதும் வாழ்கின்றனர். அகதிகளாக செல்லும் ஈழத்தமிழர்களை வரவேற்கும் நிலைமையும் தமிழகத்தில் அப்போது காணப்பட்டது. ஆனால் இன்று அவ்வாறான நிலைமை இல்லை.

முன்னைய காலங்களில், இலங்கைப் படையினரின் அச்சுறுத்தல் காரணமாக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத்தமிழ் மக்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளார்கள் என தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்போது ஈழத்தில் போர் முடிவடைந்துள்ளதாகவும், இனிமேல் அங்கிருந்து தமிழர்கள் எவரும் கடல் வழியாக தமிழகத்திற்கு வரக்கூடாது என்றும் தமிழக கரையோர காவல்படை யினர் அறிவித்துள்ளனர். அத்துமீறி வருபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று தமிழக கரையோர காவல்படை அதிகாரிகள் எச்சரித்தும் உள்ளனர். தமிழகத்துக்கு அண்மையில் வந்த இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக, இந்திய அரசாங்கமும் தமிழக அரசாங்கமும் அவதானமாக இருக்க வேண்டும் என்று இந்திய புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவர் கேணல் ஹரிஹரனும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து அகதிகளாக சென்ற அவர்களில் மூன்று ஆண்கள் முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளிகள். அவர்களுக்கு முன்னதாகவே இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வளித் திருந்தது. அதன் பின்னரும் அவர்கள் தமிழ்நாட்டுக்கு தப்பி வந்துள்ளார்கள் என்றால் இது சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதேவேளை, பாகிஸ்தான் உளவாளி எனக் கருதப்படும் இலங்கையர் ஒருவர் அண்மையில் சென்னையில் கைது செய்யப்பட்டதன் பின்னர் அங்கு நிலைமைகள் மேலும் மோசமாகியுள்ளன. அத்துடன், தமிழகத்திற்குள் தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாக வந்த எச்சரிக்கையை தொடர்ந்து தமிழக கடலோர பகுதிகள் முழுவதும் கடலோர பாதுகாப்பு படையினர் தீவிர ரோந்து சென்று அதிரடி சோதனைகளை நடத்தி வருகின்றனர். இங்கு இன்னுமொரு கசப்பான விடயத்தை யும் குறிப்பிட வேண்டியுள்ளது. அண்மை யில் தமிழகம் சென்ற குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்த பெண் பல்வேறு மோசடி களில் ஈடுபட்டவர் எனவும், அவர் தொடர்பாக பல்வேறு வழக்குகள் உள்ளதாகவும், அதனால் அவரை கைது செய்ய இப்போது சர்வதேச பொலிஸின் உதவியை இலங்கை நாடியுள்ளது எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்நிலையில் இனிமேல் தமிழகத்திற்கு அகதியாக செல்பவர்கள் கடுமையான விசாரணை களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். அத்துடன் அவர்கள் பலத்த கண்காணிப்பு களுடன் வைக்கப்படுவதோடு, தேவை ஏற்பட்டால் அவர்கள் இலங்கை அரசிடமும் ஒப்படைக்கப்படலாம். எனவே, என்ன பிரச்சினை வந்தாலும் முன்னரைப்போல் இனிவரும் காலங்களில் தமிழகத்திற்கு அகதியாக செல்ல முற்படுவது ஆபத்தானதும் சிக்கல் நிறைந்ததுமாகவே இருக்கப் போகின்றது.


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.


பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



## நூல் வெளியீடு

எழுத்தாளர் குயின்ரஸ் துரைசிங்கம் அவர்களது இரு நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

1. கவிதைகளின் தொகுப்பான 'கவிச்சரம்'
2. வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய 'வரலாற்றில் இன்று'

**காலம்:** வைகாசி 24, 2014 **நேரம்:** மாலை 3 மணி
**இடம்:** ஏஜின்கோர்ட் சேர்ச், இலக்கம் 95 நக்கட் அவனியூ, ஸ்காபரோ.
Agincourt Church of God, 95 Nugget Ave., Scarborough, ON M1S 3B1
(McCowan & Sheppard) சந்திக்கருகே அமைந்துள்ளது.

மண்டபத்தின் பின்னே போதிய வாகனத் தரிப்பிடங்கள் உள்ளன. அன்பர்கள், நண்பர்கள், ஆர்வலர்கள் அனைவரும் அன்போடு அழைக்கப்படுகிறீர்கள்.

416.219.5113 / 416.281.6333

# ஆதன விலை அதிகரிப்பு

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 415

பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகள் தமது மக்களின் வாழ்க்கை தரத்தை அதிகரிக்க, புதுப்புதுத் திட்டங்களாகக் கொண்டுவருவது இயல்பே. இவ்வாறாக புதிய தொழில்களை உருவாக்கி மக்களிற்கு தொழிலைக் கொடுக்க எத்தனிக்கின்றது. புதிய உலக அமைப்பில் கனடா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேற்குலக நாடுகளில் இன்று அனேகமான பொருட்கள் குறைந்த விலையில் விற்று, மக்களை தமது வாடிக்கையாளர்களாக்கிக் கொள்கின்றன. இதற்காக இந்நாடுகள், வளர்ந்து வரும் நாடுகளில் தமது பொருட்களை உற்பத்தி செய்து இங்கே விற்கின்றன. இது ஒரு வகையில் விற்பனைப் போட்டியாகக் கொள்ளலாம். குறைந்த விலையில் விற்பதே சில நிறுவனங்களின் நோக்கமாக உள்ளது. கனடா போன்ற நாடுகளில் உற்பத்தி குறைந்து வருவதற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். இருந்தும் கனடிய பொருளாதாரம் முன்பு இருந்ததை விட ஆரோக்கியமாக உள்ளது. ஆதன வியாபாரமும் தொடர்ந்து ஆரோக்கிய மாகவே உள்ளது. மத்திய அரசும், கனடிய மத்திய வங்கியும் தொடர்ச்சியான விலை அதிகரிப்பை மட்டுப்படுத்த பல முயற்சிகள் எடுக்கும்போது, இதில் இதுவரை வெற்றி பெற்றதாக தோன்றவில்லை.

அண்மையில் ஒரு ஆதனம் (வீடு) $699,000 இற்கு சந்தைக்குக் கொண்டு வரப்பட்டது. 72 வாங்குனர்கள் போட்டி போட்டு கிட்டத்தட்ட கேட்ட விலைக்கு மேலதிகமாக (195%) விற்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான ஆதனம் பற்றி அபாய ஒலி ஊடகங்களால் எழுப்பிக் கொண்டு இருக்கும் போது நிலைமை மாறுவதாக தெரியவில்லை. இருந்தும் அடுக்குமாடி மனை வியாபாரத்தில் இது ஓரளவிற்கு உண்மையாகவே தெரிகின்றது. இதனால் அனேக நிறுவனங்கள் புதிய கட்டிடத் தொகுதியை சந்தைக்கு கொண்டு வருவதனை பிற்போட்டுள்ளது. இதற்கு அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதி

| City | 2 bedroom Apartment (standard) | 2 bedroom Apartment (luxury) |
|---|---|---|
| Tel Aviv, israel | $500,000 | $1,450,000 |
| Melbourne, Australia | $320,000 | $675,000 |
| Miami | $275,000 | $900,000 |
| Chicago | $250,000 | $700,000 |
| Dublin,Ireland | $210,000 | $560,000 |
| Panama city, Panama | $200,000 | $500,000 |
| Beirut, Lebanon | $180,000 | $500,000 |
| Istanbul, Turkey | $125,000 | $280,000 |
| Cape Town, South Africa | $110,000 | $370,000 |
| Jakarta, Indonesia | $90,000 | $260,000 |
| Lagos, Nigeria | $70,000 | $300,000 |
| Chennai, India | $40,000 | $160,000 |



வியாபாரத்தில் 70 வருடங்களாக இருக்கும் Tridel நிறுவனம் இந்த வருடத்தில் தமது முதலாவது தொகுதியை மே மாதம் சந்தைக்கு கொண்டு வந்துள்ளது. ஆனால் இந்தத் தொகுதியில் உள்ள மனைகள் முதல் இரு கிழமைகளில் 70% இற்கு மேற்பாடாக விற்கப்படலாம் என பரவலாகவும் பலத்த எதிர்பார்ப்புகளுடன் காணப்படுகின்றது. இப்பொழுது அது உண்மையாக உள்ளது.

2013 இன் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடும்போது 2014 இன் முதல் மூன்று மாதங்கள் 88% இனால் புதிய அடுக்குமாடி மனைகள் அதிகரித்த வியாபாரத்தை ஏற்படுத்தியுள்ளது. (2013 இன் முதல் மூன்று மாதங்கள் விற்பனை - 2,728. மற்றும் 2014 இன் முதல் மூன்று மாதங்கள் விற்பனை 5,740)

எனினும் உயரம் குறைந்த வீடுகளின் விலை அதிகரிப்பு எதிர்பாராதளவிற்கு அதிகரிப்பதனை காணக்கூடியதாக உள்ளது. வட்டிவீதம் குறைவாக இருப்பதும் ஒரு முக்கிய காரணம் ஆகும். உலகளாவிய ரீதியில் 2 Bedroom Condo. unit இன் சாதாரண, ஆடம்பர மனைகளின் விலையை ஒப்பிட்டுபார்க்கலாம்.


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

## CONDO FOR SALE
### NEILSON & MCLEVIN



2 Bedroom condo. for sale.
2 Washrooms, 24 Security.
Renovated, newly painted, laminated, 5 appliances,
1 parking included.
**Asking price $189,900**

## CONDO FOR SALE
### NEILSON & SHEPPARD



1Bedroom condo. for sale.
Close to Malvern mall.
**Asking price $89,900**

## CONDO FOR RENT
### HWY 427 & DUNDAS

2 Bedroom condo.
2 Washrooms.
Laminate floors.
Close to major Highways,
airport & Downtown,
Grocery stores.



**Asking price: $1,425**

# கனடா தமிழ் காங்கிரஸின் அவதூறு வழக்கு

## கனடிய தகவல் தொடர் 219

***CANADIAN TAMIL CONGRESS WINS DEFAMATION SUIT***

2009 ஆம் ஆண்டு. அது வன்னி பிரதேசம் கொலைக்களமாக அல்லோலகல்லோலப் பட, உலகில் வாழ் தமிழர்கள் யாவரும் வீதிக்கு வந்து நீதி கேட்டு போராட, சர்வதேச ரீதியில் அரசுகள், ஊடகங்களின் பார்வைகள் யாவும் இலங்கையை நோக்கி திரும்பிய காலகட்டம். அப்போது நடைபெற்ற ஆங்கில தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் அந்த துயர காலங்களிலும் நாம் பார்த்த விடயத்தினை மட்டும் இங்கு குறிப்பிட்டு விட்டு, இத்தகவல் தொடரில் எழுதும் தலைப்புக்கு வருகிறேன்.

அந்த வட்ட மேசை விவாத அரங்கில் இலங்கை அரச பக்கத்திலிருந்து படு கொலைகளையும் தமிழர்களுக்கு எதிரான இனவாத வன்முறைகளையும் நியாயப் படுத்த சிங்கள அரசின் சார்பில் இருவர். அவர்களின் வாதத்திற்கு பதில் சொல்ல தமிழர்கள் சார்பில் டேவிட் பூபாலபிள்ளை, மஞ்சுளா, செல்வராஜா, பேராசிரியர் சேரன் ஆகியோர் பங்கு பற்றினர். அங்கு காரசார-மான விவாதங்கள் முன் வைக்கப்பட்டன.

"இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மண் மீட்பு போராட்டம் என்ற போர்வையில் இயங்கிய பயங்கரவாதிகள் முஸ்லீம் மக்களை துடிக்க துடிக்க கொன்றார்கள். கைது செய்யப்பட்ட சிங்கள அரச ஊழியர்களை வரிசையில் வைத்து சுட்டு தள்ளினார்கள்...." இப்படியே இலங்கை அரசுக்கு வக்காலத்து வாங்கியவர் முழங்கிக் கொண்டு போனார்.

"அவர் சொல்கின்ற மாதிரி பல கொலைகள் வன்முறைகளை அங்கு செய்த குழுவின் தலைவரை தங்கள் அரசில் அமைச்சர் பதவி வழங்கி தங்களுக்கு பக்கத்தில் கௌரவமாக தற்போது இலங்கை அரசு உதவியாக வைத்திருக்கிறார்கள்" இப்படி பட்டென்று பதில் சொன்னார், கனடா தமிழ் காங்கிரஸ் அமைப்பின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை அவர்கள். இலங்கை அரசின் சார்பில் வக்காலத்து வாங்கியவர் பதில் சொல்ல முடியாது திணறினார்.

அன்று பதில் சொல்ல முடியாது திணறியவர் இன்று கனடாவின் நீதித்துறையில் மீண்டும் கனடா தமிழ் காங்கிரஸின் வழக்கில் மாட்டிக் கொண்டார் என்பது 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத ஊடகங்களில் வந்த இன்னொரு செய்தியாகும்.

இலங்கையில் வெளிவரும் ஊடகம் ஒன்றில் இந்த விவாதத்தில் இலங்கை அரசுக்கு சார்பாக பங்குபற்றிய பேராசிரியர் கலாநிதி ரொகான் குணரட்ண (Rohan Gunaratna) அவர்கள் மன ஆதங்கத்தினை வேறுவித மாக கொட்டித்தீர்த்தார். அவர் குறிப்பிட்ட ஒரு வசனம் இதுவேயாகும்.

"கனடாவில் விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்பாக அவர்களின் நடவடிக்கைளை கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பு என்னும் பெயரில் முன் எடுக்கப்படுகின்றது. கனடிய அரசு இதனை அறிந்து தற்போது புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளது."

கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பு இந்த ஒரு வசனம் தங்கள் அமைப்புக்கு ஒரு அவமானம் என அவதூறு வழக்கை நீதி மன்றத்தில் தொடர்ந்திருந்தனர். இப்போது பேராசிரியர் கலாநிதி ரொகான் குணரட்ண ஒன்ராரியோ நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்க்கப்பட்டு $53,000 நட்டஈடு கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பிற்கு செலுத்த வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டு, ஊடகங்களிலும் பகிரங்கப்படுத்தப்பட்டது. இனிமேல் கலாநிதி ரொகான் குணரட்ண சர்வதேசரீதியில் சரியான தரவுகளுடன் பேச வேண்டிய ஒரு நிலை. பேராசிரியர் கலாநிதி ரொகான் குணரட்ண, ஈழவிடுதலை போராட்டம் அழிக்கப்பட சர்வதேச அரங்கில் இலங்கை அரசின் செயல்பாடுகளில் அதி உச்ச பங்களிப்புகளை வழங்கியவர்களில் ஒருவர்.

1961 இல் பிறந்த இவர் அமெரிக்க பல்கலைக்கழகமான University of Notre Dame இல் எம். ஏ. பட்டம் பெற்றவர். ஸ்கொட்லாந்து பல்கலைக்கழகமான University of St. Andrews இல் பயங்கர வாதம் தொடர்பாக ஆய்வுசெய்து பி.எச். டி பட்டம் பெற்றவர்.

சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான கல்விதுறை ஆய்வுக்கும் நூல்கள் பல வெளியிட்டவர். சர்வதேச அரசியல் வன்முறை மற்றும் பயங்கரவாத மையத்தின் தலைமை அதிகாரியாக பணி புரிந்தவர். (International Center for Political Violence & Terrorism Research - I CPVTR) அவர் தனது பணியினை சிங்கப்பூர் பல்கலைக் கழகமான Nanyang Technological University மேற்கொள்பவர். அவரது புலமை கள் யாவும் ஈழதமிழர்களுக்கு எதிராக சர்வதேச அரங்கில் உபயோகப்படுத்தப்பட்டது.

### சரி! இனி விடயத்திற்கு வருவோம்

**அவதூறு வழக்கு** (Defamation Suit) **என்றால் என்ன?**

ரொறொன்ரோவில் இவ்வழக்குகளில் அதிக மாக சமூகமளிக்கும் பீற்றர் ஏ. டவுனார்ட் (Peter Downard) தனது சட்ட ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

'ஒரு பகிரங்கப்படுத்தப்பட்ட தவறான வார்த்தைகள், அறிக்கைகள் என்பது ஒரு தனி நபர் அல்லது வர்த்தகம், உற்பத்தி, குழு, அரசு, மதம், தேசியம் என ஏதாவது ஒரு அடிப்படையில் அவர்களின் கௌரவதிற்கு பங்கம் ஏற்படுமானால் அதற்கு எதிராக நட்டஈடு கோரும் வழக்கு அவதூறு வழக்காகும்.

கனடாவில் அரசியல் கட்சிகள், அரச பதவிகளில் இருப்போர், கம்பனிகள், வர்த்தகர்கள், ஊடகங்கள், தனி நபர் ஆகியவற்றுக்கு எதிராக எத்தனையோ வழக்குகள் நட்டஈடு வழங்க வேண்டும் என தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. பல இடங்களில் நிராகரிக்கப்பட்டும் உள்ளன. காலதாமதங்கள் என இழுபட்டுக்கொண்டு போக கைவிடப்பட்ட வழக்குகள் இன்னும் ஏராளம். அவதூறு வழக்கு தொடர்வேன் என நம்மவர் மத்தியில் வீராப்புகள் பேசிய தோடு மட்டும் நின்று விட்ட சம்பவங்கள் பலதினை பலரும் சந்தித்திருப்போம்.

பல அவதூறு நட்டஈடு வழக்குகளின் தீர்ப்புகள் கனடாவில் இடம்பெற்று இருந்தாலும் விமான ஓட்டி ஒருவருக்கு வழங்கிய தீர்ப்பே தனிநபர் வழக்கில் பிரசித்தி பெற்றது.

### அவதூறு வழக்கில் மூன்று மில்லியன் டொலர் நட்டஈடு பெற்ற விமான ஓட்டுனர்.

றிக் பென்னிமோர் (Rick Fennimore) என்பவர் சுமார் இருபது வருடங்களாக கனடாவின் 'ஸ்கை சேர்வீஸ் ஏயர் லைன்' கம்பனியில் (Sky Service Airline), விமான ஓட்டுனராக பணிபுரிந்து வந்தவர். அவர் 47வது வயதினை அடைந்தபோது அவருக்கு தொழில் வாழ்க்கையில் பெரும் சோதனை ஏற்பட்டது.

"ஸ்கை சேர்வீஸ் ஏயர் லைன்" கம்பனி என்பது கனடாவில் ரொறொன்ரோவினை தளமாக கொண்ட சுமார் 2000 ஊழியர்களை உள்ளடக்கிய ஒரு 'சாட்டர்' விமான சேவை கம்பனி ஆகும்.

வருடாந்தம் சுமார் ஒரு இலட்சம் டொலர் சம்பளம் மற்றும் பல சலுகைகள் என பெற்றுவந்த அவரது வேலை நவம்பர் மாதம் 2001 ஆம் ஆண்டில் ஒரு நாள் திடீரென நிறுத்தப்பட்டது. அதற்கான காரணம் என்ன என்பதனை தெரியப்படுத்தியபோது அவரால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. "அதாவது விமானம் கிளம்புவதற்கு ஏழு மணி நேரத்திற்கிடையில் மதுபான கொண்டாட்டம் ஒன்றில் மதுபான கிளாசினை கையில் வைத்திருந்தபடி நின்றிருந்தார்" என்பதே வேலையிலிருந்து நிறுத்தியதற்காக அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டாகும். விமான ஓட்டுனர் விமானம் செலுத்தும் நேரம் மட்டுமல்லாமல், அதற்கு முன்னர் சில மணித்தியாலங்களுக்கு மதுபானம் அருந்தக் கூடாது என்பது அவர்களின் தொழில் துறையில் உள்ள சட்டமாகும். ஆனால் அங்கு குற்றஞ் சாட்டிய மாதிரி அப்படி ஒன்றும் அவர் மது அருந்தியிருக்கவில்லை.

இந்நிறுவனத்தில் வேலை பறிபோன பின்பு ஏனைய விமான கம்பனிகள் எதுவுமே அவரை ஏற்கனவே ஒரு குற்றசாட்டில் வேலையை இழந்தபடியால் எடுக்கவில்லை. விமான ஓட்டுனர் தொழில் என்பது அவருக்கு சிறு வயதிலிருந்தே ஒரு கனவாக இருந்தது. இது அந்த உயர்ந்த இலட்சியத்தில் வெற்றியீட்டிய தொழில். ஆனால் அன்று அவரின் தொழில் நிரந்தரமாக, இனி ஒரு இடத்திலும் அதே தொழிலை செய்யமுடியாத அளவுக்கு செய்யாத தவறினை குற்றமாக காட்டி நிறுத்தப்பட்டது. அவரால் அதைத்தாங்கிக் கொள்ள முடியவில்லை.

விமான சேவை கம்பனிக்கு எதிராக நீதி மன்றத்தில் 'அவதூறு' வழக்கு தொடர்ந்தார். பொதுவாக சிவில் வழக்குகளின் முடிவுகள் என்பது பல வருடங்கள் காலதாமதம் ஏற்படு வதால் அவரது சேமிப்புகள் கரைந்தன. குடியிருந்த வீட்டினை விற்றுவிட்டு இன்னொரு நகரிற்கு குடி பெயர்ந்தார். அங்கு சகோதரர் ஒருவரின் வீட்டு நில அறையில் வாழ வேண்டிய நிலை. இறுதியில் உள்ள பணத்தினை உபயோகித்து கம்பியூட்டர் துறையில் கல்வி பயின்று குறைந்த சம்பளத்தில் ஒரு வேலை யை எடுத்து அதனை செய்து வந்தார்.

பெப்ரவரி 2008 இல் அவரது வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டது. அநியாயமாக குற்றம் சாட்டி அவரது இலட்சிய தொழிலை பறித்த குற்றத்திற்காக மூன்று மில்லியன் டொலர் நட்டஈடு அவருக்கு வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கனடாவின் நீதித்துறை வரலாற்றில் தனி நபர் ஒருவருக்கு அவதூறு வழக்கில் அதிகூடிய நட்ட ஈடு வழங்கிய தீர்ப்பு இதுவேயாகும் என புள்ளி விபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



# MATH WORLD
## A PRIVATE MATH INSTITUTE

Seminar for More Details on the Math program

This "Learn Math in Advance" program has been successful since 2006

Saturday: May 24
10am-11am / 2pm-3pm
Sunday: May 25
10am-11pm / 2pm-3pm

STARTS JUNE 2ND 2014

Gr.9 Learns Gr.12 MATH

A Highly Intellectual Math Program Designed for G8 Graduates.

The Students will Obtain an Excellent Understanding of Math from my Vast Experience of teaching math for over 21 years.

ONE MONTH FREE TRAINING

Also SUMMER MATH PROGRAM Gr.11&12 →

SUMMER MATH PROGRAM 2014 FOR

Gr.11 & Gr.12
Function / Advanced Function

Starts: July 2nd, 2014

Markham / McNicoll / Steeles

We focus on higher studies the most

OUR GOAL 85% and above

Our records from the last few years indicate that a high percentage of Gr. 11 students did not have a good foundation for Gr. 12 math. Therefore, this year we are offering the program a month ahead.

"PREREQUISITE FOUNDATION MATH"
Starts: June 2nd, 2014

Based on the students' needs, we are providing this special program FREE OF CHARGE (Prior to the SUMMER MATH PROGRAM's start date).

SEMINAR FOR MORE DETAILS ON THE MATH PROGRAM :

Saturday, May 24th : 12pm - 1pm / 4pm - 5pm
Sunday, May 25th : 12pm - 1pm / 5pm - 6pm

Shiva Sharma
416.666.5515



Sasi Chelvaratnam
Sales Representative

# Find *a place to* Rent

*House. Condominium. Basement. Commercial. Office. Retail*

## We Lease and Manage Your Properties For You.



Justin M. William
Real Estate Broker




Basement Apartment
1 Bedroom
Renovated
Walk To TTC
**$ 600**/*Month+Utilities*




Upper Floor
3 Bedrooms
Fully Renovated
Close To Everything
**$ 1,350**/*Month+ Utilities*




Main Floor
3 Bedrooms
New Flooring
Close To Town Centre
**$ 1,450**/*Month+Utilities*




Main & 2nd Floors
3 Bedrooms
Brand New Town House
With Family Room
**$ 1,750**/*Month+Utilities*




House with Partial Bsmt
3 Bedrooms
3 Washrooms
Great Location
**$ 1,900**/*Month+Utilities*




Almost 4 Years Old
4 Bedrooms
Fully Detached House
Close To All Amenities
**$ 2,100**/*Month+Utilities*




Luxury Condominium
1 Bedroom
One Year Old
24 Hrs Security
**$ 1,298**/*Month+Utilities*




1 Bedroom+Den
Brand New Condo
Lots Of Amenities
24/Concierge
**$ 1,400**/*Month+Utilities*




Down Town Toronto
1 Bedroom
Amazing City View
Parking Included
**$ 1,600**/*month*




2 Bedrooms
One Year Old Condo
Close To 403
24/7 Security/Concierge
**$ 1,675**/*Month+Hydro*




1 Bedroom Basement
Separate Entrance
Walk To TTC
Good Neighbourhood
**$ 650**/*Month+Utilities*




2 Storey Semi Detached
4 Bedrooms
Bright And Spacious
Good Location
**$ 1,550**/*Month+Utilities*




1 Bedroom+Den
Luxury Condo
Lots Of facilities
Walk To Town Centre
**$ 1,400**/*Month+Hydro*




3 Bedrooms Main Floor
Lots Of Parking
Renovated
Great For Home Office
**$ 1,399**/*Month+Utilities*




3 Bedrooms
Unfinished Basement
Entire House
Semi Detached
**$ 1,499**/*Month+Utilities*




2 Bedroom Basement
Large Bedrooms
Separate Entrance
Convenient Location
**$ 850**/*Month+Utilities*




1 Bedroom
Luxury Condo
Good Size 725 Sq. Ft
24 Hrs Security
**$ 1,190**/*Month+Utilities*




Detached House
4 Bedrooms
Unfinished Basement
2800 Sq Ft
**$ 2,450**/*Month+Utilities*




Luxury Condominum
1 Bedroom + Den
Yonge St & Hwy 401
Great Layout
**$ 1,575**/*Month+Hydro*




Renovated House
3 Bedroom Main Floor
Quiet Neighbourhood
Cul de sac
**$ 1,600**/*Month/All Included*




Retail & Professional
In GTA Square Mall
Ideal For Many Uses
Finch Ave Exposure
**$750**/*Month/All Included*




Prime Location
Retail Plaza
Good For Many Uses
475 Sq.Ft
**$1600**/*Month+Utilities*




Office Space
1,100 Sq.Ft
Well Maintained Unit
3 Private Offices
**$ 7.25**/*Sq.Ft+TMI*




18,500 Sq.Ft
Clean Building
Lots Of Parking
Truck Level & Drive in
**$ 4.75**/*Sq.Ft+TMI*




Ideal For Office
Many Uses Allowed
High Traffic Area
1,375 Sq.Ft
**$ 10.00**/*Sq.Ft+TMI*

## Call Direct: 416.803.7344

HOMELIFE/GTA Realty Inc., Brokerage, 5215 Finch Ave E, Toronto,ON.

# காலத்தோடு வளரும் கணினிகள் - 45

அன்பான வாசகர்களே!

கடந்த சில இதழ்களில் படங்களில் மாற்றங்களைச் (Photo Editing) செய்ய தற்குதவும் மென்பொருட்களைப் பற்றி உரையாடியிருந்தோம். ஒவ்வொரு விதமான வேலைகளைச் செய்வதற்கென நாளாந்தம் புதிய மென்பொருட்களும், ஏற்கனவே பாவனையில் உள்ள மென்பொருட்களின் புதிய வடிவங்களும் வந்த வண்ணம் உள்ளன. இவற்றைப் பற்றிய பொது அறிவு இருந்தால், தேவை ஏற்படும் பொழுது உரிய மென் பொருட்களைத் தேடிப் பயன்படுத்திக் கொள்ளலாம். Adobe photoshop என்ற மென்பொருளினைப் படங்களில் மாற்றங் களைச் செய்வதற்கு மட்டுமன்றி ஒரு முழுமையான வரைபியல் வடிவமைப்பு மென்பொருள் (Graphics Design Software) ஆகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதுவும் இந்த மென்பொருளின் விலை அதிகமாக இருப்பதற்கான காரணமாக இருக்கலாம். இதனைவிட இந்த மென் பொருள் உற்பத்தியாளர்களால் உருவாக்கப் படும் Adobe Illustrator, Adobe in Design போன்ற மென்பொருட்களையும் வரைபியல் வடிவமைப்பு மென்பொருட்கள் (Graphics Design Softwares) ஆகவும் கருதிக் கொள்ளலாம். சில மென்பொருட்களை அவற்றின் பயன்பாட்டு அடிப்படையில் வகுக்கும் பொழுது ஒன்றிற்கு மேற்பட்ட பயன்பாட்டுப் பட்டியலில் இடம்பெறுவதைக் காணலாம். உதாரணமாக Adobe In Design என்ற மென்பொருளை மேசைப்பதிப்பு மென்பொருள் (Desk Top Publishing Software) என்றும் கருதலாம். Adobe Illustrator என்ற மென்பொருளை Vector Graphics Design Software என்றும் அழைப்பதுண்டு. Corel Draw என்ற மென் பொருளும், பிரபல்யம் வாய்ந்த ஒரு வரைபி யல் வடிவமைப்பு மென்பொருளாக உள்ளது. இங்கே குறிக்கப்பட்ட மென் பொருட்கள் எல்லாம் விலை உயர்ந்த வரைபியல் வடிவமைப்பு மென்பொருட் களாகக் கருதப்படுகின்றன. இந்த மென்பொருட்கள் மூலம் அச்சுப்பதிப்பிற்கு முன்னதாகச் செய்ய வேண்டிய சகல விதமான வரைபியல் வடிவமைப்புக்களையும் செய்து கொள்ளலாம். தொழில் ரீதியாக வரைபியல் வடிவமைப் பாளர்களாக (Graphics Designers) உள்ளவர்கள் இத்தகைய மென் பொருட்களைப் பயன்படுத்துவதில் மிகவும் நிபுணத்துவம் நிறைந்தவர்களாகக் காணப்படு வார்கள். இத்தகைய மென்பொருட்களில் ஒரு சிலவற்றில் ஓரளவு அறிவைப் பெற்று தமது தேவைகளுக்கேற்ப பயன்படுத்தும் கணினிப் பாவனையாளர்களும் உள்ளார்கள். நீண்ட காலமாகப் புகழுடன் இருக்கும் வரைபியல் வடிவமைப்பு மென்பொருளாக Corel Draw மென்பொருளைத் தெரிவு செய்யலாம். காலத்திற்கு காலம் இந்த மென்பொருளின் புதிய வடிவங்கள் வந்த வண்ணம் உள்ளன. இந்த மென்பொருளின் பிந்திய வடிவம் Corel Draw Graphics Suite X 7 ஆகும். இதன் விலை $600 கனேடியன் டொலர் உள்ளது. இந்த மென்பொருளைப் பயன் படுத்துவதற்கு வேண்டிய போதிய தரவுகள் மென்பொருளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனாலும் மிகவும் அதிகமான வசதிகளும், கருவிகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதால் புதியவர்களுக்கு பழகிக்கொள்ள அதிக நேரம் எடுக்கக் கூடும். ஆனாலும் அதிகம் பயன்படுத்தப்படுவதும், அதிக வசதிகளைக் கொண்டதுமாக Adobe நிறுவனத்தின் மென் பொருட்களே இருக்கும் என நினைக்கின்றேன்.




QuarkXpress என்ற மேசைப்பதிப்பு மென் பொருள் Quark Inc நிறுவனத்தால் 1987ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் மிகவும் சிக்கலான அமைவுகளை (Layout) மேசைப்பதிப்பில் செய்து கொள்ளலாம். இந்த மென்பொருளைப் பத்திரிகைத் துறையில் அதிகமாகப் பயன்படுத்துகின்றார்கள். இதன் பிந்திய வடிவமான QuarkXpress 10 செப்ரெம்பர் 2013 இல் வெளிவந்தது. இதன் விலை 900 கனேடியன் டொலர் அளவில் உள்ளது. Xara நிறுவனத்தின் Xara Designer Pro 7 என்ற வரைபியல்




வடிவமைப்பு மென்பொருளும் முன்னிலையில் உள்ளது. இதன் விலை 350 கனேடியன் டொலராக உள்ளது. Serif நிறுவனத்தின் தயாரிப்புக்களில் வரைவியல் வடிவமைப்பு மென்பொருளாக DrawPLus X6 உம், மேசைப்பதிப்பு மென்பொருளாக PagePlus X7 மென்பொருளும் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. inkscape என்பது இணையத்தில் இலவசமாக கிடைக்கும் வரைபியல் வடிவமைப்பு மென்பொருள் ஆகும். இதனை உடன்நிகழ்வாக (online) ஆகத்தான் பயன்படுத்த முடியும். infogr.am என்ற இணையத்தளத்திலும் வரைபியல் வடிவமைப்புக்களை இலவசமாகச் செய்யலாம். easelly என்ற இணையத் தளத்தில் காணப்படும் வரைபியல் வடிவமைப்பு மென்பொருளையும் இலவச மாகப் பயன்படுத்தலாம். முப்பரிமாணத் தோற்றங்கள் (3D Views), அசைவூட்டம் (Animation) போன்றவற்றை உருவாக்கப் பயன்படும் மென்பொருட்களையும் வரைபியல் வடிவமைப்பு மென்பொருட்களில் உள்ளடக்க லாம். Blender என்பது இவ்வாறான பயன்பாடுகளைக் கொண்ட ஒரு இலவச மென்பொருளாகும். Maya என்பது AutoDesk நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் மிகவும் விலை உயர்ந்த முப்பரிமாண அசைவூட்ட மென்பொருள் (3D Animation Software) ஆகும். இவ்வாறான வரைபியல் வடிவமைப்பு வேலைகளுக்குப் புதியவர்கள் இலவசமாகக் கிடைக்கும் மென்பொருட்களைப் பயன்படுத்திப் பயிற்சி செய்யலாம். பின்பு படிப்படியாக ஏனைய மென்பொருட்களைப் பயன்படுத்த முயற்சிக்க லாம். மென்பொருட்களின் விலை ஒருபுறம் இருக்க, நாம் பயன்படுத்த வேண்டிய தேவைகளைப் பொறுத்தே சரியான மென்பொருட்களைத் தெரிவு செய்ய முடியும். மென்பொருட்களைத் தெரிவு செய்வதில் இவற்றின் இலகுத்தன்மை பற்றி ஆராய்வதும் முக்கியமானதே ஆகும். இந்த இதழில் வரைபியல் வடிவமைப்பு மற்றும் மேசைப் பதிப்பு மென்பொருட்கள் பற்றிய தகவல் களை சுருக்கமாக ஆராய்ந்து கொண்டோம். இங்கே குறிப்பிட்ட மென்பொருட்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து செயன்முறையில் பயிற்சி எடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இவற்றில் அதிக நாட்டம் இருந்தால் வரைபியல் வடிவமைப் பில் அதிக பயிற்சியைப் பெற்று வரைபியல் வடிவமைப்பாளராக வந்து விடலாம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

"வெகுளாமை" நூல் வெளியீடு
A Tamil Book with practical tips on Anger Management

விளம்பரம் பத்திரிகையில் "வெகுளாமை" என்ற தலைப்பில் என்னால் எழுதப்பட்ட தொடர்கட்டுரையினை நூல் உருவில் கொண்டு வந்துள்ளேன். இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பிப்பதோடு நூலின் பிரதியினையும் பெற்று ஆதரவு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.
நன்றி. வணக்கம்
அன்புடன்
அகணி சுரேஸ், நூலாசிரியர்

இடம் (Venue)
1160 Birchmount Road, Unit 2A
Scarborough, M1P 2B8
(Entrance at Crouse Road)
(Intersection : Lawrence Avenue & Birchmount Road)

காலம் (Time)
May 25, 2014 Sunday 4:00 p.m. - 6:00 p.m.

தொடர்புகட்கு
416 732 8021

இந்த நிகழ்வினை சரியாக 4:00 மணிக்கு ஆரம்பித்து 6:00 மணிக்கு நிறைவு செய்ய உத்தேசித்து உள்ளோம்.

வாருங்கள்!! இந்த நூலை வாசித்துப் பயனடையுங்கள்!!

TBC Toronto Business College

உடனடி வேலை வாய்ப்பைப் பெற Personal Support Worker
New batch - July 7th



SECOND CAREER

WHO IS ELEGIBLE?
- RECEIVING EI
- LAID OFF AFTER 2005
- RECEIVED MATERNITY / PARENTAL DURING LAST FIVE YEARS
- WORKING LESS THAN 20 HOURS PER WEEK

Those qualify will receive free funding upto $28000 to cover the following
- Living Expense
- Daycare
- Tuition Fees
- Books
- Transportation

DIPLOMA PROGRAMS
Accounting & Payroll
(35 weeks) July 7th
Business Administration
(26 Weeks)
Computerized Accounting
(26 weeks) July 7th
Medical Office Adminstrator
(32 weeks) July 7th
Personal Support Worker
(26 weeks) July 7th

Certificate Courses
Windows, Word, Excel, PPT, Access
Quick Books, Simply Accounting, Accpac
Food Handler Certification, First Aid & CPR
Online Stock & Forex Trading
Canadian Securities Course

Career Colleges Ontario

416 - 291 - 5155
4465 Sheppard Ave. East # 208
( Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005


# மனிதன்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

நடந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறார்கள். உண்மையில், ஒருவருக்கு மனதளவில் சுதந்திரம் இல்லாதபோதுதான், ஏதேனும் ஒன்றோடு ஆழமாக அடையாளப்படுத்திக் கொள்கிறபோதுதான், அவரால் இன்னொரு வருக்குத் தீமை செய்ய முடியும். உங்களுடனே உங்களை நீங்கள் அடையாளப்படுத்திக் கொள்ளாதபோது யாருக்கும் நீங்கள் தீமை விளைவிக்க முடியாது.

இந்தப் பிரச்சாரங்களோடு உங்களை நீங்கள் அடையாளப்படுத்திக் கொள்வதால், உங்கள் தன்மையே சிதைகிறது. உங்களை நம்பச் செய்வதற்காக எந்தப் பிரச்சாரத்தையும் செய்ய தயாராகிறீர்கள். ஒன்றை நீங்கள் வணங்கவும், மற்றொன்றை வெறுக்கவும் என உங்களைத் தக்க வைத்துக் கொள்ள எந்த அளவுக்குப் போகத் துணிகிறீர்கள். அப்படி யிருந்தால் மனம் ஒழுங்குபட்ட வித்தைக் கூடமாய் இராது. குழப்பமாகத்தான் இருக்கும்.

இப்போது ஈஷா யோகாவில், "உள்நிலை பொறியியல்" என்று நாங்கள் வழங்குவது, ஒரு போதனையோ, தத்துவமோ, கொள்கையோ, நம்பிக்கையோ, மதமோ அல்ல. அடிப்படையில் உங்களுக்கும் உங்கள் உடலுக்கும், உங்களுக்கும் உங்கள் மனதுக்கும் நடுவில் ஓர் இடைவெளியை ஏற்படுத்துவதுதான் அதன் நோக்கம். இந்த இடைவெளி ஏற்பட்டுவிட்டால் உங்கள் மனதில் குழப்பம் இருப்பதில்லை. மகத்தான ஒருங்கிணைப்பு நிகழ்கிறது.

இந்த இடைவெளியை துறவுநிலை என்று பலரும் தவறாகக் கருதுவது துரதிர்ஷ்டவசமானது. அனுபவநிலையில் உங்களுக்கும், உங்கள் உடலுக்கும் இடைவெளி ஏற்படுமே தவிர, உங்கள் குடும்பத்திலிருந்தோ, உங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் இருந்தோ நீங்கள் விலகமாட்டீர்கள். உடல் என்று நீங்கள் அழைப்பதிலிருந்தும், மனம் என்று நீங்கள் அழைப்பதிலிருந்தும் உங்கள் பிணைப்பை விடுவிக்கிறீர்கள். ஏனெனில் இவையிரண்டுமே வெளியிலிருந்து நீங்கள் சேகரித்தவை.

காலை, மதியம், இரவு என்று மூன்று வேளைகளும் திரும்பத்திரும்பச் சாப்பிட்டதால் உங்களுக்குக் கிடைத்தது இந்த உடம்பு. ஐம்புலன்கள் மூலமாக நீங்கள் சேகரித்த அவ்விஷயங்கள்தான் உங்கள் உணர்வுகள். ஆனால் 'நான்' என்று எதனை அழைக்கிறீர்களோ, அது நீங்கள் சேகரித்த விஷயங்களைக் கடந்ததாக இருக்க வேண்டும். இந்த வித்தியாசம் உங்களுக்குள் எழுந்தால்தான், உங்கள் மனதை அதன் அடையாளங்களிலிருந்து அகற்றினால்தான், மனம் ஓர் அற்புதம் என்பது விளங்கும்.

ஏனெனில், மனம் என்பது குழப்பங்களின் கூடாரம் இல்லை... அது ஒழுங்குபடுத்தப்பட்ட வித்தைக் கூடம்!

13ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்கொள்ள நேர்ந்தது.

எனினும் பரந்த மனமும், பரந்த பக்தி மணமும் கொண்ட சில முருகன் அடியார்கள் தாங்களாகவே முன்வந்து உதவியதோடு அருட்கொடையாளர்கள் பலரின் உதவிகளா லும் இவ்இறைபணி முருகன் அருள் கொண்டு ஓரளவு நிறைவு பெற்று, மூலமூர்த்தியாகிய சிவசுப்பிரமணியப் பெருமானுக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகட்கும் 05.05.2014 திங்கட்கிழமை காலையில் திருக்குடமுழுக்கு சிறப்பாக நடந்தேறியது. இதனைத் தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் நிகழும். கடைசித்தினமான 29.5.2014 அன்று சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

பின்னர் இரு ஆண்டுகளாக நடைபெறாதிருந்த ஆலயமகோற்சவம் எதிர்வரும் 03.06.2014 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஒன்பதாம்நாள் 11.06.2014 புதன் கிழமை வைகாசி விசாகத்தன்று தேர்த்திரு விழா நடைபெறும். அன்றையதினம் ஸ்ரீ வள்ளிதேவசேனாசமேத ஆறுமுகப்பெருமான் 30 ஆண்டுகட்குமுன் அமைக்கப்பட்ட அறுகோணச் சித்திரத்தேரில் அழகுற ஆரோகணித்துக் காட்சியளித்து வர, இம்முறை விநாயகப்பெருமானும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இன்னொரு சித்திரத்தேரில் ஏறி மக்களுக்கு அருள்பாலித்து வீதிவலம் வர உள்ளார்கள்.

கொக்குவில் ஸ்ரீ வள்ளிதேவசேனாசமேத கிருபாகரசிவசுப்பிரமணியப் பெருமானை தரிசனம் செய்து, வினைகளையெல்லாம் நீக்கி வெற்றிகரமான நல்வாழ்வைப் பெற்று மகிழ்வோமாக.

'நினையன்றி வேறு நினைப்பின்றிக் கொக்கூர்
முனைவாவென் வாழ்வின் முதலே –
நினதிருதாள்
தப்பாம லேயென் றலைசேரத் தாழ்ந்தென்றும்
அப்பாவுன் பால்வைத்தே னன்பு'

-செ. வேலாயுதபிள்ளை -


கவிச்சரம்



May 24 @ 4 PM
416-219-5113
வரலாற்றில் இன்று
குயின்ரஸ் துரைசிங்கம் அவர்களின்
இரு நூல்கள் வெளியீடு
மே 24ம் திகதி – 4 மணி
இடம்: 95 Nugget Avenue, Scar. ON. M1S 3B1
(McCowan & North of Sheppard)

# கொக்குவில் ஸ்ரீ கிருபாகரசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம்

(இக்கட்டுரை கொக்குவில் ஸ்ரீ கிருபாகரசிவசுப்பிரமணியசுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையொட்டி எழுதப்பட்டுள்ளது.

புதுக்கோவில் என அழைக்கப்படும் கொக்குவில் ஸ்ரீ கிருபாகரசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ஈழவளநாட்டின் யாழ்ப்பாண நகருக்கு வடக்கே இரண்டுகல் தொலைவில் அமைந்துள்ளது. இது 185 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமைவாய்ந்த புகழ்மிக்க ஆலயமாகும். இவ் ஆலயத்தின் மூலவர் ஸ்ரீவள்ளி தேவசேனாசமேத சிவசுப்பிர மணியர். இறைவன் திருநாமம் கிருபாகரன். இங்கே சித்திவிநாயகர், பாலசுப்பிரமணியர், நாகதம்பிரான், தண்டாயுதபாணி, வேணு கோபாலர், நடராஜர், மகாலட்சுமி, தட்சணா மூர்த்தி, பைரவர், சண்டேஸ்வரர், சைவநாயன்மார்களாகிய நால்வர் ஆகியோர் பரிவாரமூர்த்திகளாக விளங்குகின்றனர். முக்கியமானதும் சிறப்பானதுமான மூர்த்தம் ஆறுமுகப்பெருமான். பெரிதும் நல்ல அழகோடும் கூடிய இச் சண்முகப்பெருமான் சிற்பத்திரனோடு சாஸ்திகரமான மூர்த்திகரமும், கீர்த்தியும் அருட்பிரவாகமும் பெற்றுக் காட்சியளிக்கிறார். இப் பெருமானைத் தரிசித்துப் பேரானந்தம் அடைந்த பலருள்

"தீர்த்தனே! கொக்கூர் சிறக்க ஆறுமுகத்து மூர்த்தமாய் வந்த முதல்வனே! – கார்த்திகையார்
பாலூட்ட உண்ட அருட் பாலகா! பாவியேன் மாலோட்டி ஆண்டருள்வாய் மன்

எனப்பாடிப் பரவசப்பட்டுள்ளார் சபாரத்தின முதலியார்.

முருகன் வழிபாடு தொன்றுதொட்டே நம்மக்கள் உள்ளத்தை வசீகரித்து வந்திருக்கிறது. முருகன் சிறந்த தலங்களென்று சிலவற்றைக் குறிப்பிட்டு மக்கள் பலர் பாங்குடன் அழைத்துப் பக்தி பண்ணுவர். 'பரங்குன்று அமர்ந்த பரஞ்சோதியே' என்றும் 'செந்தில் வளரும் சேவகனே' என்றும் ஆவினன்குடி அரசே' என்றும் 'ஏரகம் வாழும் எந்தாய்' என்றும் 'குன்றுதோறாடும் குழகா' என்றும் 'பழமுதிர்ச் சோலைப் பாலா' என்றும் 'கதிர்காமத்துறை கந்தா' என்றும் 'நல்லூர் உறையும் நாதா' என்றும் இப்படியாக இன்னும் பலப்பல சொல்லி பராவுவர் அடியர். தலங்களைக் குறிப்பிட்டுப் பக்திபண்ணுவதின் உட்பொருள் யாதெனில் அகண்டமான பரம்பொருளை அன்பிற்கும், தியானத்திற்கும் அனுகூலமாகப் பக்திவலையிற் படுத்து உள்ளக் கோவிலில்



**- த. செ. நடராசா -**

கொலுவிருக்கச் செய்துகொள்வதே ஆகும். ஸ்ரீ கிருபாகரசிவசுப்பிரமணியசுவாமி கோவில் கொண்டருளிய கொக்குவிலும் அப்பெருமான் அருள்விளங்கும் ஒருதிருத்தலமெனக் கொள்ளலாம்.

கோவில்கள் நமது பண்பாட்டுச் சின்னங்கள். சமுதாய ஒற்றுமைக்கும், கல்வி, ஒழுக்க வளர்ச்சிக்கும் அவை கேந்திர நிலையங்களாக விளங்குகின்றன. ஆகமங்களும், சாஸ்திரங்களும் திருக்கோயில்களின் பூஜை முறைகளையும், வழிபாட்டு நியதிகளையும், உற்சவ விமரிசைகளையும் கூறுகின்றன. திருக்கோவில்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மருந்து சார்த்தி கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பது ஆகமநியதி. கோவில்களை புதுப்பிக்கும் சமயம் சாஸ்திர முறைப்படி குடமுழுக்குச் செய்தால்தான் இறையருள் என்ற தண்ணொளி-சாந்நித்தியம் என்ற இறைய முதம் மக்களுக்குக் கிடைக்கும். அந்தவகையில் கொக்குவில் கிருபாகரசிவசுப்பிரமணிய கோவில் குடமுழுக்குவிழா கடைசியாக 10.04.1998 இல் நடைபெற்றது.

தற்போது இக்கோவில் திருத்த வேலைகளுக்காக 25.03.2012 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கோவில்கள் எல்லாம் பெரும்பாலும் ஊரவர்கள், அன்பர்கள், அடியார்கள் உதவிகளையே நம்பியுள்ளன. கொக்குவில் கிராமத்து மக்கள் அநேகர் நாட்டின் நிலைமை காரணமாக வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்துள்ளதால் திருப்பணிகளைச் செய்து முடிப்பதில் சில சிரமங்களை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்





| TAX FREE MONEY | AGE | FEMALE Term 10 | FEMALE Term 20 | FEMALE Term 40 | MALE Term 10 | MALE Term 20 | MALE Term 40 |
|---|---|---|---|---|---|---|---|
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |

# யோகசிகிச்சையும் நோயில்லாப் பெருவாழ்வும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### ULTIMATE HEALTH THROUGH YOGA THERAPY

மனோதத்துவ அடிப்படையில் ஏற்படுகின்ற நோய்கள்தான் மிகவும் சிக்கலானவை என்று இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது. நமது உடம்பு சரிவர செயல்படுவதற்கும், அதற்கு வேண்டிய சக்தியை முழுமையாகப் பெறுவதற்கும் மனம் உடலுடன் ஒத்துழைக்க வேண்டும்.



மனத்தை அமைதிப்படுத்துவது, புத்திக்கூர்மையை அதிகரிக்கச் செய்வது, சிந்தனையைத் தெளிவாக்குவது என்பவற்றிற்கு இன்றைய மருத்துவ முறைகளில் தெளிவான வழிவகைகள் இல்லை. ஆனால் யோகா வழிமுறைகளில் எந்த மருந்தும் இல்லாமல் நம் முன்னோர்கள் எளிதாக குணப்படுத்தியுள்ளனர். மனமும் உடலும் ஒன்றோடொன்று அனுசரணையானவை என்பதை இன்றைய மருத்துவம் தெளிவாக்குகின்றது. மனநிலை சரியாகவோ, அமைதியாகவோ இல்லாதவர்களுக்கு இரத்த அழுத்தம், ஆஸ்துமா முதலிய நோய்கள் வந்து சேருகின்றன.

இன்றைய நாகரிக வாழ்க்கையில் நாள் முழுவதுமே பதட்டம் (Tension) அதிகமாகிய நிலையில்தான் காலத்தைக் கழிக்கிறோம். அப்போது நமது நரம்புகள் முறுக்கேறுகின்றன. இரத்த ஓட்டமும் அழுத்தமும் எல்லையை மீறும் அளவுக்கு அதிகரிக்கின்றன. இருதயத்துடிப்பும் நாடித்துடிப்பும் அளவு கடந்து போகின்றன. இன்றைய சூழலில் நூற்றுக்கு எண்பது பேர் இவ்வாறான நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் எல்லாவிதமான பிரச்சினைகளையும் யாரிடமும் மனம்விட்டுச் சொல்வதில்லை. அப்போது மனதிற்குள்ளே அந்த சூழ்நிலையும் அதனால் நமக்கு வரக்கூடிய கஷ்டங்களையும் எண்ணிப் பார்த்து கற்பனையில் விபரீதமான எண்ணங்களை உருவாக்குகிறோம். இவ்வாறு நாம் பெறும் அனுபவம் உடல்நிலையில் சிக்கலான கோளாறுகளை ஏற்படுத்திவிடுகிறது. வயிற்றில் அமிலம் அதிகரித்து குடல்புண் (Ulcer) ஏற்படுதல், தலைவலி, மூட்டுகளில் இரத்தக் கட்டிகள், நீரிழிவு போன்ற பலவகையான நோய்கள் நாளடைவில் நமது உடலில் வந்து சேர்கின்றன.

இவ்வாறு அவதிப்படுகின்றவர்களை இன்றைய மருத்துவ நிபுணர்கள் தமது விதியின் முறையில் குணப்படுத்தி விடுவார்களா? இதன் அடிப்படையை அவர்கள் ஆராய்வதில்லை. வெளிப்படையான அடையாளங்களை மட்டுமே கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர். அவர்கள் செய்யும் வைத்தியமும் அந்த வெளிப்படையாகத் தெரியும் அடையாளங்களைக் குணப்படுத்தும் முயற்சியுடன் நின்றுவிடுகிறது. அவர்கள் தரும் மருந்துகள் நோய்களை முற்றாகக் குணப்படுத்துவதில்லை.

உதாரணமாக இரத்த அழுத்தம் கூடுவதை எடுத்துக் கொள்வோம். இது தொடர்ந்து ஒருவருக்கு இருந்து வரும் மனக்கவலையை, மனக்கலக்கம் என்பனவற்றின் அடிப்படையில் தான் ஏற்படுகிறது. அதனால் அவருடைய உடல்நிலையும் நரம்பு மண்டலங்களும் பாதிப்படைகின்றன. இதற்கு வைத்தியர்கள் மருந்துகளைக் கொடுத்து இரத்த அழுத்தம் கூடாமல் பார்த்துக் கொள்கின்றனர். அதாவது உடலின் இயக்கம் மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால் அடிப்படையான சிக்கலைத் தவிர்க்கவோ, உடல் நிலையைப் பலப்படுத்தவோ அவை உதவுவதில்லை. இந்த நேரத்தில் தான் நமது முன்னோர்கள் நமக்களித்துச் சென்றுள்ள யோகாசன பயிற்சி முறைகள் நமக்குப் பெருந்துணையாகவுள்ளது. இன்று உலகின் பல நாடுகளிலும் மாற்று மருத்துவமான யோகாப்பயிற்சிமுறைகள் புகழ்பெற்று வைத்தியர்களாலேயே பரிந்துரைக்கப்படுகின்றது. பல மருத்துவமனைகளில் கூட யோகா சிகிச்சை (Yoga Therapy) முறைகள் மேற்கொள்வதைக் காணமுடிகிறது.

ஒரு தனிமனிதனை உயர்த்துவதோடு மட்டும் நின்றுவிடாது ஒரு சமுதாயத்தையே கட்டுப்படுத்தி அதன் பண்பையே உயர்த்துவதற்கும் இந்த யோகாப்பயிற்சி பேருதவியாகி விடுகிறது. இப்பயிற்சி முறைகளை ஒரு நோயாளி ஒன்றிரண்டு மாத காலத்தின் பின் தானே பயிற்சி செய்து வாழ்நாள் முழுவதும் பலன் பெறமுடியும். அத்துடன் யோகாசன பயிற்சியின் மூலம் குணமடையும் ஒரு நோயானது திரும்பவும் அந்த மனிதனைத் தாக்குவது மிகவும் அரிது.

இந்த யோகா சிகிச்சைத் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நோயைத் தீர்ப்பதற்கு சில பொருத்தமான பயிற்சித் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதனை ஒரு யோகாசன சிகிச்சை நிபுணரின் உதவியுடன் தெரிந்து முறைப்படி பயிற்சியை மேற்கொள்வதுதான் ஆரம்பத்தில் சிறந்த வழியாகும். அத்துடன் நோய் முற்றாக குணமடையும் வரை தகுந்த உணவுத் திட்டத்தையும் கைக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். வாழ்நாள் நீடிக்கச் செய்வதற்கு இந்த பயிற்சி முறைகளைத்தவிர உலகில் வேறொன்றுமில்லை. உடலை சிறந்த முறையில் பராமரித்தால்தான் உயிர் அதனுள் இருக்க வாய்ப்புண்டு.

**“உடலால் அழியின் உயிரால் அழிவர்”** - திருமந்திரம்.




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033 after 7:00pm**
**416.617.5721**



## YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham -** செல்வ சோதி - **416.289.2033**



## MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

# மூலநோயும் (Piles) உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

மூலவியாதியை 'piles' என ஆங்கிலத்தில் குறிப்பிடுவதுடன் மருத்துவத்தில் Hemorrhoids எனவும் கூறப்படுகின்றது. இது உள்மூலம் வெளிமூலம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மலக் குதத்துடன் தொடர்புபட்டதாகும்.

மலம் வெளியேறும் போது அல்லது வெளியேறி முடியும் நேரத்தில் இரத்தம் வெளியேறுவதுதான் மூலநோயின் முக்கிய அறிகுறியாகும். இம்மூலநோயில் மூன்று நிலைமைகள் இருக்கின்றன. இரண்டாவது மூன்றாவது நிலைமையில் தான் மல வாசலில் வீக்கம் வெளிப்படையாகத் தெரியும். மலக்குதத்துடன் சுற்றியுள்ள இரத்தநாளங்கள், சிரைகள் மீள்தன்மை இழந்து விரிந்து போகும் நிலைதான் மூலவியாதி எனக் குறிப்பிடலாம். மேலும் மலக்குதத்தின் அருகில் உள்ள சிரைகள் பாதிக்கப்பட்டு வெளித்தள்ளப்பட்டிருக்கும் தன்மைதான் வெளிமூலமாகும்.

உள் மூலமாயின் வெளியில் மாற்றம் இன்றி மலம் கழிக்கும்போது முடிவில் இரத்தம் சொட்டுச் சொட்டாக வந்தவண்ணம் இருக்கும். இவ்விரத்தத்தைப் பார்வையிடும் போது கரும் சிவப்பு நிறம் கொண்டதாகக் காணப்படும். மலமானது வரட்சித் தன்மையாகவும் சிரமத்துடன் வெளியேறும் இயல்பைக் கொண்டதாகவும் இருக்கும். உள்மூலத்தில், மேல்மூலசிரை மலக் குதத்தின் சவ்வுப்பகுதியால் மூடப்பட்டிருக் கும். வெளிமூலம் கீழ் மூலச்சிரைத் தோலினால் மூடப்பட்டிருக்கும்.



மேலும் நமது வயிற்றுப்பகுதியில் உள்ள குடலில் இருந்து ஆசனவாய் வரை அசுத்த இரத்தத்தை எடுத்துச் செல்லும் நாளங்களில் ஒன்றோ, பலவோ சுழற்சி ஏற்பட்டு வீங்கிக் காணப்படுவதுடன், மலவாசலில் ஒருவித நமச்சல், அரிப்புத் தன்மை, எரிச்சல் நிலை அத்துடன் கசிவுத் தன்மையும் தென்படும். அத்துடன் மலம் கழிக்கும் போது மலத்தை வெளியேற்ற முக்கும்போது வரட்சியின் நிமிர்த்தம் இரத்த நாளங்கள் நசிவு பட்டு இரத்தம் கசியத் தொடங்கும். இப்படி முக்கி, முக்கி மலத்தை வெளியகற்ற முயற்சிப்பதினால் அது வெளி மூலமாக வர ஏதுவாகும். பெரும்பாலும் இந்நிலை ஏற்படும்போது சிகிச்சைக்கு மாறாத பட்சத்தில் அறுவைச் சிகிச்சை செய்து சுகதேகியாக இருக்க முடியும்.

மேலும் மலவாசலில் அரிப்புத் தன்மை இருக்கும் பட்சத்தில் தானப்புழு அல்லது காரைப்பூச்சி (Threadwrom) முக்கிய காரணமாக இருக்கலாம். எனவே அதற்குரிய பரிசோதனை செய்து, தங்கள் வைத்தியரிடம் மருந்தைப்பெற்றுக் கொள்ள முடியும். மூலவியாதிக்கு காரணங்கள் பல கூறியபோதும் இது பரம்பரையாகவும் வரலாம் என அறிய முடிகின்றது. எனவே எதற்கும் மலச்சிக்கலை தவிர்ப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். நாளாந்தம் தவறாது தூய்மையான தண்ணீர் பருகி வருதல் வேண்டும். உணவு உண்பதற்கு தாமதமானாலும் தண்ணீர் அருந்துவது மிக நன்று. இதனால் உடல் வெப்புத்தணிந்து மலச்சிக்கலை ஏற்படாது காக்கும்.

மூலநோய் வியாதியை பார்க்கும் போது வயிற்றில் ஏற்படும் அசாதாரண நிலையும் மலச்சிக்கலும் காரணமாக அமையாமல் இருக்க வயதிற்கு ஏற்ப மலம் தடையின்றி உரிய வேளை வெளியேறுவது மிக முக்கிய மாகும். சுவைகளில் காரப் பொருட்களை அதிகம் பாவிக்கக்கூடாது. எக்காரணம் கொண்டும் நீண்டநேரம் ஒரே இடத்தில் உட்காரக் கூடாது. உஸ்ணம் அதிகரிக்கும். உடற்பயிற்சிகளைக் கையாளும் போது உடல்நிலைக்கு ஏற்ப நேரம் அமைய வேண்டும்.

கர்பம் தரித்த பெண்ணின் கருப்பையின் அழுத்தம் இரத்த நாளங்களை தாக்குவதி னால் ஆசனப்பகுதி நன்கு அமர்த்தப்பட்டு மூலவியாதி ஏற்படலாம். மேலும் கருப்பை யில் கழலை போன்ற கட்டி ஏற்பட்டிருந்தா லும் ஆசனப்பகுதி நசுக்கப்பட்டு திரட்சி நிலை ஏற்படலாம்.

ஆண்களைப் பொறுத்தமட்டில் பொறஸ்ரேட் (Prostate Gland) சுரப்பி வீக்கத்தினால் நீர்த்துவாரையில் தடை ஏற்பட்டு சிறுநீர் கழிக்கும் வேளை சிரமத்துடன் கழிப்பதற்கு முயற்சிப்பதினாலும் மூலநோய் நிலை ஏற்பட ஏதுவாக அமையலாம். தொடரும்...


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
**Tel.: 647.456.9796**





# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

Also
Free Moving

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

**(This Deal Start From March 01st to November 30th)**



## Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

*Independently Owned & Operated

# சார்பியல் - 46

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

### ஈர்ப்பலைகள் தொடர்ச்சி

பொதுவாக சுப்பநோவா ஒன்று ஏற்படுகையில் விண்மீனின் திணிவு குறைகின்றது. அப்போது அங்கே பெருமளவு சக்தி விடுவிக்கப்படுகின்றது. விண்மீன் ஒன்று அழிந்து கருந்துளை ஒன்று தோன்றுகையிலும் திணிவு இல்லாமற் போவதால் பெருமளவு சக்தியானது வெளிவிடப்படுகிறது. இது போன்ற, திணிவு குறைந்து சக்தி வெளி விடப்படும் நிகழ்வுகள் அடிக்கடி வான்பரப்பில் பல இடங்களில் நிகழ்வது சர்வ சாதாரணம். இப்படியான நிகழ்வுகளின் போதெல்லாம் வெளிவீசப்படுகிற சக்தியானது அங்கேயே தங்கிவிடுவதில்லை. அவ்விடத்தில் நின்று விண்வெளியின் எல்லாப் பகுதிகளுக்கும் விரைகின்றன. இப்படியாகச் சக்தி பரவிச் செல்கையில் அவை அலையின் வடிவிற் செல்ல வேண்டும் என்பது விஞ்ஞானிகளின் கருத்து. அப்படியாக விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டு இருக்கும் அலைகளைத்தான் ஈர்ப்பலைகள் (gravitational waves) என்கிறார்கள். பொருள் ஒன்று அழிந்து போகையில் உண்டாகும் சக்தியானது, அவ்விடத்தில் இருந்தும் ஈர்பலைகளினால் விண்வெளியினுள் எடுத்துச் செல்லப் படுகின்றது. ஈர்ப்பலைகளை ஏற்படுத்திய பொருள் அல்லது நிகழ்வு இல்லாது முற்றாகவே மறைந்து போனாலும் ஈர்ப்பலைகள் தொடர்ந்தும் பேரண்ட வெளியினுள்ளே சென்று கொண்டே இருக்கும்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொருட்கள் அழிவுறுகையில் மட்டும்தான் ஈர்ப்பலைகள் பிறப்பதில்லை. எங்களது புவி போன்ற கோள்கள் கதிரவன் போன்ற விண்மீன்களைச் சுற்றி வருகின்றன அல்லவா. அப்போது அக்கோள்கள் பெருமளவு இயக்கசக்தியைக் கொண்டுள்ளன. அவ்வியக்க சக்தியின் ஒருபகுதியானது, சுற்றகையின் போது இழக்கப்பட வேண்டும் என்பது நியூட்டனின் பொறிமுறையின் விளைவாகும். எமது புவியும் கணமும் தனது சக்தியில் 20 முதல் 30 வீதமான சக்தியை இழந்து கொண்டே இருக்கின்றதாம். இப்படியாக சக்தியை இழப்பதனால் கோள்கள் எல்லாம் மெதுமெதுவாக உள்நோக்கி ஒரு சுருளிபோல இயங்கி தமது விண்மீனை வந்து சேருமாம், சேரும். பொறிமுறை விளைவின்படி, எங்களது புவியும் ஏதோ ஒருநாள் கதிரவனுடன் வந்து இணைந்து விட வெண்டும். என்ன கதிரவனுடன் எங்களது புவி சேர்ந்து விடுமா? என நீங்கள் அதிசயிப்பது தெரிகிறது. எங்களது நிலை என்ன என்று கேட்பதுவும் புரிகிறது. ஆனால் பயப்படும்படியாக ஒன்றுமில்லை. அப்படி நடப்பதற்கு இன்னமும் கோடானு கோடியின் கோடிக் கணக்கான வருடங்கள் எடுக்கும் என அதே பொறிமுறையைக் கொண்டு கணித்துள்ளார்கள். எங்களது கதை அதுவல்ல. கோள்கள் இழக்கின்ற சக்தியும் விண்வெளியனுள் தள்ளிவிடப்பட, அவை ஈர்ப்பலைகளாகவே பேரண்டத்துள் பயணப் படுகின்றன. இப்படியான ஈர்ப்பலைகளின் பயணத்தினால்தான் பேரண்டத்தின் வெளி நேரப் பரிமாணத்தில் பொருட்கள் இல்லாத இடங்களும் வளைந்து நெளிந்து காணப்படுகின்றன என்கிறார்கள்.



ஈர்ப்பலைகள் என்பது விஞ்ஞானிகளின் எடுகோள் அமைப்பில் இருக்கும் ஒரு அலையியக்கமாகும். இன்னமும் அதனை எவருமே இனம் காணவில்லை. அதனை இனம் காண்பதற்கான தீவிர முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. விரைவில் ஈர்ப்பலைகளை வசப்படுத்தி இனம் கண்டுகொள்வோம் என்ற நம்பிக்கையுடன் ஆய்வுகள் மும்மரமாக நடந்து கொண்டு இருக்கின்றன. ஈர்ப்பலைகளை இன்னமும் கண்டு பிடிக்காவிட்டாலும், அவை எப்படியான இயல்புகளைக் கொண்டிருக்கலாம் என்பதனைக் குத்து மதிப்பாகத் தருகிறார்கள். ஈர்ப்பலைகள் வெளிநேர நாற்பரிமாணத்தில் ஒளியின் கதியிலேயே பயணப்படுகின்றனவாம். சக்தியைக் காவிச் செல்லும் ஈர்ப்பலைகள் பயணப்படுகையில், வெளிநேரப் பின்னலில் அசைவுகளை தாம்போகும் பாதைக்குக் குறுக்காக ஏற்படுத்துகின்றன. இந்த அசைவுகள், சிற்றலைகளாக (ripples) வெளிநேரப் பரிமாணத்தின் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன.

ஈர்ப்பலைகளின் வீச்சானது மிகவும் சிறியது. அதனால் இலகுவில் அதனை அவதானிக்க முடியாது. கொள்கையளவில் உண்மையெனக் காட்டப்பட்ட ஈர்ப்பலைகளை இன்னமும் விஞ்ஞானிகளால் இனம் காண முடியவில்லை. இனம் காணுவதற்கான முயற்சிகள் வான்வெளியில் தீவிரமாக நடந்து கொண்டு இருக்கின்றது. பேரண்ட வெளியில் மிகவும் செல்வாக்குக் காட்டிக் கொண்டிருக்கும் ஈர்ப்பலைகள் இனம் காணப்பட்டால் எங்களது தொழில் நுட்பப் பகுதியானது இன்னமும் சிறப்புறும் என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. அத்துடன் பேரண்ட இரகசியங்களை தெரிவிப்பதில் ஒளியை விட முக்கிய இடத்தையும் இடம் பிடிக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஈர்ப்பலைகள் வெகு விரைவிலேயே அடையாளம் காணப்படும் என்பது விஞ்ஞானிகளது நம்பிக்கையாகும்.


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca







# சந்தேகம்: ஓர் ஆளுமை ஒழுங்கீனம்

***Paranoid Personality Disorder***

இன்று சமூகத்தில் நிலவுகின்ற பிரச்சினைகளுள் தலையாயது (PPD) சந்தேகப்படுதல் ஆகும். நீண்டகாலமாக கணவன் மனைவிக்கிடையே பெரிய விரிசலை தோற்றுவித்து, அவர்கள் பிரிந்து விடக் காரணமாவதும் இந்த சந்தேகம் தான். நம்பிக்கை என்பது இழந்த நிலையில் இச் சந்தேகப்பேர் வழிகள் காணப்படுவர். 'சந்தேகம்' என்பது தீராத வியாதி எனவும் 'சந்தேகம்' என்பது ஒரு பேய் என்றும் பலர் குறிப்பிட்டு காட்டுவர். உலகில் உள்ள எல்லா இனங்களுக்கும் இடையே நிலவும் இச் சந்தேக உணர்வு உளவியல் ஆய்விலும் முக்கியம் பெற்று வருகிறது. ஆங்கிலத்தில் Paranoid Personality Disorder என குறிப்பிடுவர். சாதாரணவழக்கில் Suspiciousness என்பர்.

இந்த வகையான ஒழுங்கீனம் உள்ளவர்கள் தங்களை ஏனையோர் ஏமாற்றுகிறார்கள், துன்புறுத்துகிறார்கள் என எண்ணுவர். எந்த ஒரு ஆதாரமும் இல்லாமலேயே அவர்களுக்கு இந்த உணர்வு ஏற்பட்டு விடுகின்றது. தொழிலகங்களிலும், அயலிலும், நட்பிலும் கூட இது நிகழ்வதுண்டு. எல்லா தனிப்பட்ட உறவுகளுக்கிடையிலும் இது தோன்றிவிடுகின்றது. இவ்வாறு ஏற்படுகின்ற சந்தேக உணர்வு படிப்படியாக மேலும் தீவிரமடைகின்றது. மிகவும் மோசமான சந்தேகம் இறுதியில் வாய்த்தர்க்கம், சண்டை என்பதில் முடிவடைகின்றது. தமது சந்தேகத்தினை தீர்ப்பதில் ஈடுபடுவோர் நித்திரையின்றி தவிப்பர், பதட்டத்துடன் காணப்படுவர். தங்களுக்கு எதிரான விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.



இத்தகைய ஆளுமை ஒழுங்கீனம் உள்ளவர்கள் நேரடியாக ஒன்றையும் அவதானிக்காமல் மற்றையோர் சொல்வதையே நம்பிவிடுவர். சிலவகையான சந்தேகங்கள் சரியாக இருந்தாலும் பெரும்பாலானவை உண்மைக்கு புறம்பானவையாகவே இருக்கும். தனது சந்தேகத்தை தீர்ப்பதற்கு பெரிய முயற்சியை இவர்கள் எடுத்துக் கொள்வார்கள். அழகான மனைவியை யுடைய உள்ள ஆண்களும், அழகான கணவனையுடைய பெண்களும் கூடுதலாக மாறி மாறி சந்தேகப்படுவர். தனது மனைவியுடன் யாராவது தெரிந்த ஒரு ஆண் சிரித்து கதைத்தாலோ அல்லது தனது கணவனுடன் யாராவது பெண் நெருக்கமாக நின்று கதைத்தாலோ அவர்களால் பொறுக்க முடியாது. இது ஒரு ஆரம்பம் தான். தொடர்ந்து இப்பயான சம்பவங்கள் ஏற்படும் போது தர்க்கம் செய்வதில் முனைவர்.

**சந்தேக பேர்வழிகளின் குணங்குறிகளை ஆதாரமாக கொண்டு உளவியலாளர்கள் பல பிரிவாக பிரித்துள்ளனர்.**

1. எந்தவிதமான அடிப்படைகளின்றி மற்றையோர் தனக்கு ஊறு செய்கிறார்கள், ஏமாற்றுகிறார்கள் என்று சந்தேகிப்பவர்கள்.

2. மற்றவர்கள் தனக்கு விசுவாசமற்றவர்கள், நேர்மையற்றவர்கள், உண்மைநட்பு அற்றவர்கள் என சந்தேகிப்பவர்கள்.

3. தன்னைப்பற்றிய தகவல்களை தமக்கு எதிராக பயன்படுத்தி விடுவார்களோ என சந்தேகிப்பவர்கள்.

4. பயமுறுத்தல்கள், கேலிகள், சம்பவங்கள் தனக்கு எதிரானவை தானோ என சந்தேகிப்பவர்கள்.

5. பழிவாங்குவதற்காக தனக்கு எதிராக இயங்குகிறார்களோ எனச் சந்தேகம் கொள்ளல்.

6. தமது ஒழுங்காற்றல் மீது அல்லது மதிப்பின் மீது கேடு செய்வார்களோ என சந்தேகித்தல்.

7. கணவன் அல்லது மனைவி வேறு யாருடனாவது கள்ளத்தொடர்பு கொண்டுள்ளாரோ என அடிப்படை ஆதாரமற்ற சந்தேகங்கள்

பொதுவாக இவ்வகையான ஒழுங்கீனம் உள்ளவர்கள் முரண்மூளை (schizophrenia), உளச்சோர்வு ஒழுங்கீனம் (depressive disorder) மூளைப்பிசகுள்ளவர்கள் (psychotic features) போன்றவர்களிடமும் காணப்படலாம். எனவே சரியாக இவர்களை இனங்காண வேண்டும். பொதுவாக ஆளுமை என்பது நீண்டகால பண்பாகும். எனவே ஆரம்பத்திலேயே இப்பிரச்சினை கண்டறியப்படவேண்டும். குழந்தைகளிடம் அல்லது பதின்ம வயதினரிடையே இது தோன்ற வாய்ப்பில்லை. திருமணமான தம்பதிகளிடையே அதிகமாக இது ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வுகளின் படி பெண்களை விட ஆண்களே கூடிய சந்தேகம் கொள்கின்றனர். 40 அல்லது 50 வயதில் முதிர்ச்சி பெறுவர்களிடையே இவ் ஒழுங்கீனம் படிப்படியாக குறைவடைகிறது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) இதுபற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளது. சந்தேகம் கொள்ளும் ஆளுமை உடையவர்கள்: அதீத உணர்ச்சியுள்ள (Excessive Sensitivity) வர்கள், மன்னிக்க மறுப்பு (Refusal to Forgive) செய்வர்கள், தமது அனுபங்கள் மூலம் சந்தேகம் கொள்பவர்கள், கணவன் மனைவிக்கிடையே எழும் பாலியல் தூய்மை (Sexual Fidelity) பற்றி சந்தேகம் கொள்பவர்கள், தனக்கு எதிராக எவராவது சதிசெய்கிறார்களோ என்ற சந்தேகம் உள்ளவர்கள் என வகுத்துள்ளது. அமெரிக்க உள சிகிச்சை நிறுவனம் (APA) கூட இதனையே வலியுறுத்துகின்றது.

அதேவேளையில் Theodore Millon என்ற உளவியல் அறிஞரும் இந்நோயை 5 உபகுழுக்களை வகைப்படுத்தியுள்ளார். முதலாவது இளகாத மனம் படைத்தோர் (Obdurate) என்ற வகையினர். இவர்கள் பிடிவாதம், ஏற்றுக் கொள்ளாமை, தான் தான் சரி என்பதுடன், சண்டைக்குணம் உள்ளவர்களாவர். இரண்டாவது வகையினர் வைராக்கியம் (Frantic) உள்ளவர்களாவர். இவர்கள் ஏனையோர் மீது தமது எதிர்ப்பினைக் காட்டுபவர்கள், மூன்றாவது பிரிவினர் சண்டைபிடிப்பவர் (querulous) ஆவர். வாதாட்டம் செய்பவர்கள், பிழை பிடிப்பவர்கள், பொறாமையுள்ளவர்கள் ஆவர். நான்காவது பிரிவினர் ஒடுங்கிய மனம் உள்ளவர்கள் (Insular) ஆவர். தற்காப்பு உள்ளவர்கள். கடும் விழிப்புணர்ச்சியுள்ளவர்கள் ஆவர். ஐந்தாவது பிரிவினர் ஊறு செய்பவர்கள் (Malignant) ஆவர். தற்காப்பு விரும்பிகள், கொடுமையுள்ளவர்கள் ஆவர். இன்றுள்ள சாதாரண சமூக அமைப்பில் 0-5 வீதம் தொடக்கம் 2.5 வீதமுள்ளவர்கள். இவ் ஒழுங்கீனம் உள்ளவர்களாக உளர். ஆனால் வேறு உளவியல் பாதிப்பாளரிடையே 2-10 வீதத்தினர் இப்பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர். நோர்வேயில் செய்த ஆய்வு மரபுரீதியாகவும் (Genetic) இது ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறுகிறது.

சந்தேக ஒழுங்கீனத்தை சரியாக கண்டுபிடிப்பதற்கு மன ஆரோக்கிய பயிற்சியாளர், உளவியலாளர், உளச் சிகிச்சையாளர்களால் மட்டுமே முடியும். சாதாரண வைத்தியர்களால் இதனை அறிய முடியாது. பலர் இவ்வகையான நோய்க்கு வைத்தியர்களை நாடுவதில்லை. உண்மையில் இதற்கு பல உளவியல், உடலியல் பரிசோதனைகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதனை கவனிக்காது விட்டால் முழு வாழ்க்கையும் சீரழிந்து விடலாம்.

இன்றுள்ள ஆராய்ச்சியாளர்கள் இந்த ஒழுங்கீனத்திற்கான சரியான காரணங்களை முழுமையாக கண்டறியவில்லை. பல கோட்பாடுகள் வெளிவந்தாலும் முழுமையான கோட்பாடு முற்றாக அறியப்படவில்லை. உயிரியல், மரபியல், சமூக காரணிகள் என்பனவே முக்கியமாக ஆய்வு செய்யப்படுகின்றன. குடும்பவரலாறு, சகோதரங்கள் பற்றியும் தெரிய வேண்டியுள்ளது. 'சந்தேகம் தீராத நோய்' என்று பலரும் சொல்வதில் உண்மையுள்ளது போல் தெரிகிறது.



**சிந்தனைப் பூக்கள்**

**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

**AUM WELLNESS CLINIC IN**

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



**Cell: 416.890.9217 Office: 647.304.6046**

**5215 Finch Ave. E. #220, Toronto, ON**

# திரை விமர்சனம் - தெகிடி

குறும்பட இயக்குநர்களின் வெற்றி ஆரவார வரிசையில் புதிய வரவு 'தெகிடி'. குறும்படங்களுக்காக பல முக்கிய விருதுகளைப் பெற்றுள்ள ரமேஷ் திரை இயக்குநராக அவதாரம் எடுத்துள்ள படம். தமிழ் சினிமாவில் நல்ல மாற்றங்கள் தொடரும் என நம்பிக்கையளிக்கிறது இப்படம்.

கதாநாயகன் அசோக்செல்வன், எம்.ஏ. கிரிமினலாஜி படிப்பவர். படிப்பு முடித்ததும் உளவு வேலை பார்ப்பதில் பேரார்வம் கொண்டிருக்கிறார். ஆசைப்படி, படிப்பை முடித்துவிட்டு சென்னையில் ஒரு தனியார் துப்பறியும் நிறுவனத்தில் வேலைக்கு சேர்கிறார். குறிப்பிட்ட சில மனிதர்களை பின்தொடர்ந்து, அவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் வேலை அவருக்குத் தரப்படுகிறது. கொடுத்த வேலைகளைக் கச்சிதமாகச் செய்கிறார். தனியார் துப்பறியும் நிறுவனத்தின் பாலிசிகளில் ஒன்று, யாரைப் பின்தொடரச் சொல்லி அவருக்கு வேலை கொடுக்கப்பட்டதோ, அவர்களை நேரடியாகத் தொடர்புகொள்ளக் கூடாது என்பது. அதன்படியே நடக்கிறார். ஆனால், கதாநாயகி விஷயத்தில் மட்டும் காதலால் அந்த பாலிசியை மீறுகிறார். நிறுவனம் ஜனனியை உளவு பார்க்கச் சொல்கிறது. ஆனால், ஜனனியைப் பின் தொடரும் அசோக், அவரைக் காதலிக்கத் தொடங்கிவிடுகிறார், ஜனனியும் அசோக்கைக் காதலிக்கிறார். இன்னொரு பக்கம், அசோக் உளவு பார்த்த நபர்கள் ஒவ்வொருவராக விபத்தில் இறக்கிறார்கள். இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என சந்தேகப்படும் அசோக், அந்த மர்மத்தை தனியாகத் துப்பறிகிறார். இன்சூரன்ஸ் பாலிசி பணத்தை சுற்றியிருக்கும் பெரிய சதி வலையைக் கண்டுபிடிக்கிறார்.



ஒரு துப்பறியும் படத்திற்கே உரிய நேர்த்தியான திரைக்கதை. அமைதியாக ஆரம்பித்து நகரும் படம் முதல் கொலை விழுந்ததும் பரபரப்பாகிறது. அடுத்தடுத்தக் கொலைகள் படத்தை மேலும் பரபரப்பாக்குகிறது. இரண்டாவது பாகம் வரும் என்பது போல முடிப்பதுதான் இதுபோன்ற துப்பறியும் கதைப் படங்களின் வழக்கம். 'தெகிடி'யும் அப்படியே முடிகிறது! ஆனால், ஒவ்வொரு கட்டத்திலும் சஸ்பென்ஸ் விலகும் போது, அட இதை நாம் கவனிக்கத் தவறிவிட்டோமே என ஆச்சரியமூட்டியது போல், அரங்கத்திலிருந்து பார்வையாளர்கள் வெளியேறிக்கொண்டிருக்கும் போதும், அவர்கள் கவனிக்கத் தவறிய ஒன்றை வெளிச்சமிட்டுக் காட்டி ஆச்சரியப் படுத்துகிறார்கள். இதனால், திரையில் இருந்து கண்களை நகர்த்தும் மனமின்றி நாம் நகர்கிறோம். அதிகம் நடிகர்கள் இல்லை. முக்கிய பாத்திரத்தில் ஏழு பேர், துணைப்பாத்திரங்களாக இன்னும் சிலர் அவ்வளவுதான். இது தமிழ் திரைக்குப் புதிது.

கதாநாயகனாக வரும் அசோகசெல்வனின் அலட்டலில்லாத நடிப்பு படத்திற்கு மிகப் பெரிய பலம். ஜனனி ஐயருக்கு பலமே அவரது வசீகரமான கண்கள்தான். அதில் பலவித உணர்ச்சிகளைக் காட்டி, நம்மைக் கவர்கிறார். சிறிய அளவிலான வேடம்தான். முதல் பாதியில் ஒருசில காட்சிகள், கொஞ்சம் காதல், இரண்டாம் பாதியில் அவ்வப்போது தலை காட்டுகிறார், அப்புறம் இறுதிக் காட்சி. 'கரெக்ட்டா அப்ஸர்வேகன் பண்ற…?' என்று ஆரம்பித்து, தனியார் துப்பறியும் நிறுவனத்தைப் பரிந்துரை செய்யும் பேராசிரியர், பந்தா இல்லாமல் செய்யப் போகும் வேலையை அழகாகப் பிரித்துக் கொடுக்கும் துப்பறியும் நிறுவன அதிகாரிகள், ஜனனியின் தோழியாக வரும் கறுப்பழகி… என அனைவரும் கவனிக்க வைக்கிறார்கள். இப்படியெல்லாம் ஒரு காவல் ஆய்வாளர் சென்னையில் கிடைப்பாரா என்று எதிர்பார்க்க வைக்கிறார் ஜெயபிரகாஷ். அசோக்கின் நண்பராக வரும் காளி பாத்திரம் மேலோட்டமாக பார்க்கும்போது சாதாரண

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

தொடர்ச்சி 28ஆம் பக்கம்



# தனிநபர் சினிமா

## நேர்காணல் இயக்குனர் சங்ககிரி ராஜ்குமார்

தயாரிப்பு, இயக்கம், நடிப்பு, ஒளிப்பதிவு, எடிட்டிங் தொடங்கி அலுவலக உதவியாளர் பணி வரைக்கும் யாரும் துணைக்கு இல்லாத நிலையில், ஒரு மனிதரால் தனியாக ஒரு சினிமாவை உருவாக்கிவிட முடியுமா? நாம் கேட்பது குறும்படம், ஆவணப்படம் அல்ல. திரையரங்கில் வெளியாகி ஓடும் சாத்திய முள்ள வெகுஜனப் படம்! சாத்தியம்தான் என்கிறார் சங்ககிரி ராஜ்குமார். அவரைப் பொறுத்தவரைக்கும் ஆர்வமும் உழைப்பும் தான் தேவை. திரைத்துறை முன்னோடிகள், ஊடகங்கள் உட்பட அனைவராலும் சிறந்த படம் எனப் பாராட்டப்பட்ட 'வெங்காயம்' திரைப்படம், ராஜ்குமாரின் தனிப்பட்ட உழைப்பிலும் சிந்தனையிலும் உருவாகியது தான். 'நெடும்பாறைகள்' என்னும் தன் இரண்டாம் படத்தின் தயாரிப்பு வேலைகளில் இருந்த ராஜ்குமாரைச் சந்தித்தோம்.

முதலில் உங்களைப் பற்றி சொல்லுங்கள், எப்படி திரைத்துறைக்கு வந்தீர்கள்?

என்னுடைய தாத்தா தெருக்கூத்து கலைஞராக இருந்தார். பிறகு, மேடை நாடகங்களிலும் நடித்து வந்தார். தெருக் கூத்தில் எனது தாத்தாவுடன் நான் வேஷம் போட்டு ஆடியதுண்டு. மேடை நாடகங்களில் அப்பாவுடன் நிறைய நடித்துள்ளேன். ஆனால், நான் வளரும்போது தெருகூத்தும் மேடை நாடகங்களும் மதிப்பிப்பிழக்கத் தொடங்கியிருந்தன. எனவே, இவைகளைக் கடந்து வேறு ஏதேனும் ஒன்றை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்தது. நான் சினிமாவை தேர்வு செய்தேன். கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு சென்னைக்கு வந்து வேலை தேடிக் கொண்டிருந்தேன். நான் தங்கியிருந்த இடத்தில் மினோவியா என்ற மல்ரிமீடியா சென்டர் இருந்தது. ஜன்னல் வழியாக அந்த சென்டரை பார்த்துக்கொண்டிருப்பேன். அப்போது 2ஜி அனிமேஷன் சாப்ட்வேர்களை மட்டுமே நான் அறிந்திருந்தேன். அவர்கள் 3ஜி அனி மேஷனை செய்து கொண்டிருந்தார்கள். மூன்று டைமென்சன்களிலும் திருப்புகிறார்கள் எனும்போது, எனக்கு அதன் மீது ஆர்வம் ஏற்பட்டது. இதனால், அந்த சென்டருக்கு சென்று அதனைக் கற்றுக்கொண்டேன். அவர்களே என்னை லீகோ லேண்ட் கம்பெனியில் வேலைக்கு சேர்த்துவிட்டனர். அங்கே மல்ரிமீடியா படிக்கும்போதே இயக்குநர் வேலு பிரபாகர் அவர்களிடம் உதவியாளராக சேர்ந்தேன். அப்போது வேலுபிரபாகரன் 'காதல் அரங்கம்' எனும் தலைப்பில் ஒரு படம் எடுத்தார். பிறகு, அது 'காதல் கதை' எனத் தலைப்பு மாற்றப்பட்டது. அப்படத்தில், நான் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை பணியாற்றினேன். எனவே, அந்தப் படத்தில் எல்லாத் துறையிலும் என்னுடைய பங்களிப்பு இருந்தது. அதில் ஒரு கதாபாத்திரத்தில் நடிக்கவும் செய்தேன். சினிமாவை சமூக நலனுக்காக பயன்படுத்தும் எண்ணம் வேலு பிரபாகருக்கு இருந்தது. இந்தவகையில், எனக்கும் அவருக்கும் ஒத்த கருத்து இருந்தது.



உங்கள் 'வெங்காயம்' ஜோதிடம், செய்வினை போன்ற நம்பிக்கைகளை சாடும் விதமாக இருந்தது. முதல் படத்திலேயே இப்படியொரு களனைத் தேர்வு செய்ய என்ன காரணம்?

நாமக்கல், சங்ககிரி பகுதிகளில் லாரி கட்டுமான தொழில்கள் அதிக அளவில் இருக்கும். என்னுடைய சித்தப்பா அத்தகைய பட்டறை ஒன்றில் கூலிக்கு வேலை செய்து கொண்டிருந்தார். அவர் தொழிலை நன்கு கற்றுக்கொண்ட பிறகு தனியாக பட்டறை வைக்கலாம் என்று முடிவு எடுத்தார். இதற்காக ஒரு ஜோசியரை அணுகினார். அந்த ஜோசியர், அவருக்கு ஏழரை சனி இருப்பதாகவும் அது ஜென்ம சனி என்றும் கூறியுள்ளார். "இது சாதாரணமானதன்று புராணங்களில் நளமகாராஜாவிற்கு வந்த சனி போன்றது. தொழில் தொடங்குவதற்கு எந்த ஒரு வாய்ப்பும் உனக்கு இல்லை. இன்னும் ஒரு வருடத்தில், நீ பிச்சை எடுக்கும் சூழ்நிலை வரப்போகிறது" என்றும் கூறி விட்டார். மனமுடைந்து போன என் சித்தப்பா குடிக்கு அடிமையாகிவிட்டார். பிறகு மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலையும் செய்துகொண்டார். எனக்கு அந்த சித்தாப்பா மீது நெருக்கமும் பாசமும் அதிகம். அவருடைய இழப்பை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரைக் கொன்ற மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வேகம் ஏற்பட்டது. பத்திரிகைகளில், பிற ஊடகங்களில் ஜோசியம் தொடர்பான செய்திகளை சேகரிக்கத் துவங்கினேன். சில செய்திகள் அதிர்ச்சி யளித்தன. பாண்டிச்சேரியில் ஒரு வீட்டின் கட்டுமான பணிகள் ரொம்ப நாட்களாக நடை-பெறாமல் தள்ளிப்போய் கொண்டே இருக்கிறது. அதை எப்படி சரி செய்வது என்று ஒரு ஜோசியரைக் கேட்கிறார்கள். அவர், பூர்வ ஜென்ம தோஷம், நரபலி கொடுக்க வேண்டும் என்கிறார். விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவன் ஒருவனை கடத்திச்

தொடர்ச்சி 32ஆம் பக்கம்



# ஒன்று பட்டுக்குரல் தருவோம்!

அள்ளி வீசிய குண்டுகளால்
ஆயிர மாயிர மாய்மடிந்த
முள்ளி வாய்க்கால் அவலத்தை
முட்டி மோதும் கருப்பொருளாய்க்
கொள்ள வேண்டாம் உறவுகளே!
கொச்சைப் படுத்தி எம்மினத்தை
எள்ளி நகைக்க வைக்காதீர்!
இருகை கூப்பிக் கேட்கின்றோம்!!

நச்சுக் குண்டைப் போட்டவனும்,
நரபலி யெடுத்த அயலவனும்,
அச்ச மின்றி எம்மினத்தை
அழித்த கோடரிக் காம்புகளும்,
உச்சிச் செய்மதி ஊடாக
உண்மை அறிந்து இருந்தவனும்,
மெச்சி மகிழ வேண்டுமென்றா
மீண்டும் பிரிந்து நலிகின்றோம்?

விட்டுக் கொடுக்க மனமில்லை!
வீம்புப் பேச்சிற் குறைவில்லை!!
கொட்ட மடித்து உடன்பிறப்பைக்
கொச்சைப் படுத்தி வசைபாடும்
கெட்ட மதியேன் மாறுதில்லை?
கேவல புத்தியேன் போகுதில்லை?
பட்டும் அறிவு பெறாவிட்டால்
பாதகம் யார்க்கு நமக்கன்றோ!

'ஏத்தனை சோதனை வந்தாலும்
இவர்கள் திருந்தார்' எனக்கூறி
மொத்த உலகும் எமைப்பார்த்து
முணுமுணுக் கிறது தெரிகிறதா?
செத்து மடிந்த உறவுகளின்
தியாகம் தன்னை மதிப்பதெனில்
ஒத்த கருத்தை உருவாக்கி
ஒற்றுமைப் பட்டுச் செயற்படுவோம்!



- அருள்மணி -

நாக்கில் மட்டும் ஒற்றுமையா?
நடையில் மட்டும் வேற்றுமையா?
தீக்குள் இருந்து துடிப்பவர்போல்
சேர்ந்த உறவுகள் ஈழத்தில்
போக்கில் லாமல் தவிக்கின்றார்
புலம்பெயர் மண்ணில் வாழும்நாம்
யார்க்குத் தலையில் முடிசூட்ட
நமக்குள் நாமே மோதுகிறோம்?

'புலத்தில் இருக்கும் தமிழர்கள்
புதுவாழ் வளிப்பர்' எனநம்பி
நிலத்தில் அசையா நம்பிக்கை
நெஞ்சிற் சுமந்து வாழ்வோரின்
நலத்தில் அக்கறை மெய்யாக
நமக்கு இருக்கு மென்றால்நாம்
'பலத்தைக்' காட்ட முயற்சிக்கும்
பைத்தியச் செயலை நிறுத்திடுவோம்!
எமக்குள் பேசி ஒருமுடிவை
எடுக்கத் தெரியா நாங்கள்போய்
'எமக்குச் சுதந்திரம் தா'வென்றால்
எவர்தான் ஏற்பர்' நகையாரோ'?
'உமக்குள் ஒற்றுமைப் படத்தெரியா
உங்களுக் கெதற்குச் சுதந்திரம், போய்
சுமப்பீர் பட்டம் பதவிகளைத்
தூக்கிப் பிடிப்பீர் புதுக்கொடியை!'

உரிமை யோடு உங்களிடம்
ஒன்றை மட்டும் கேட்கின்றோம்!
பெரிய இழப்பைச் சந்தித்தோம்!
பெரிய விலையை நாம்தந்தோம்!!
உரிமைக் காக உயிர்தந்த
உறவுகள் சாந்தி பெறச்செய்வோம்!
அரிய அவர்கள் தியாகத்தை
அவமரி யாதை செய்யாதீர்!!

கத்திக் கத்தி வீதிகளில்
கதறி அழுத போதெல்லாம்
கொத்துக் கொத்தாய் எங்களினம்
கொல்லப் பட்டு ஈழத்திற்
செத்து மடிந்த வேளையிலும்
சேர்ந்து மௌனம் காத்தவரே
சித்தம் தெளிந்து விசாரித்துத்
தீர்ப்பு வழங்க வந்துள்ளார்.

ஒன்று பட்டுக் குரல்தருவோம்!
ஒருதீர் வினையே முன்வைப்போம்!!
என்றும் தமிழன் விடிவெண்ணி
இதய சுத்தி யொடுநாங்கள்
நின்று போரிட முன்வருவோம்
நீண்ட தூரப் பார்வையுடன்,
வென்றெ டுப்போம் தமிழீழம்!
வெற்றிக் கொடியை நாட்டிடுவோம்!!



# New Executive Townhomes In Ajax




- Fast Growing Ajax Area..
- Unique designs & outstanding quality...
- One of the most well respected builders in Canada.
- Only 7% Deposit In Total..
- From 1743 Sq.ft.
- $5000 Free Upgrades

**For More details... Call or Visit**

**Direct: 647.955.9544**

## HomeLife GTA Realty Inc., Brokerage

5215 Finch Ave, East, Suite 203, Toronto, ON. Office: 416-321-6969



# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

"முனியப்பர், இந்த அலுவல் மிச்சம் கரைச்சலானதுதான்.... கனக்க வில்லங்கங்கள் இருக்குப் போலை." முத்துப் பூசாரியர் கூறினார்.

பனங்கூடல் முத்துப் பூசாரியாருக்கு 60 அல்லது 65 வயதிருக்கும். அகன்று கறுத்திருந்த முகத்தில் பெரிய மீசையும் தாடியும் வைத்திருந்தார். தாடி நன்றாக வளர்ந்திருந்தது. தலையிலும் முடி நன்றாக வளர்ந்திருந்தது. பெண்களின் கூந்தல் போல் பின்னால் வாரிவிடக் கூடிய அளவில் இருந்த முடியை சிலும்ப விட்டிருந்தார். நரைமுடிகளும் ஆங்காங்கு கறுத்த முடிகளுடன் கலந்து இருந்தன. அடர்தியான புரவ மயிர்களிலும் ஒன்றிரண்டு வெள்ளை மயிர்கள் எட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தன. அகன்ற நெற்றியில் திருநீற்றைத் தாராளமாகப் பூசி, நெற்றியின் மத்தியில் பெரிய குங்குமப் பொட்டிட்டிருந்தார். சந்தனம் ஏனோ தவறியிருந்தது.

முத்துப் பூசாரியை முதன்முதலில் யார் பார்த்தாலும் பயந்துவிடுவார்கள். எறிமாடனோ அல்லது வேறு எந்தப் பேயோ முத்துப் பூசாரியை பார்த்தால் நிச்சயம் பயந்துதான் போகும். அந்த அளவிற்கு மனிசன் தன்னை பக்குவப்படுத்தி வைத்திருந்தார்.

கந்தசாமி வீட்டில் இருந்து சற்று முன்னர்தான் வந்திருந்தார்கள். அங்கிருந்து விடயங்களைக் கதைப்பது நல்லதல்ல என்று காசியம்மானின் வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

"அப்ப பூசாரியார் இதுக்கு என்ன பண்ணலாம்?" காசியம்மான் கேட்க,

முத்துப் பூசாரியார் நிமிர்ந்தார். எங்கே எனது திறமையில் இவர்கள் சந்தேகப்பட்டு விடுவார்களோ என்ற நினைப்பின் அவசரம் அதிற் தெரிந்தது.

"சாய்...ச்...சாய். ஒண்டுக்கும் பயப்படாதையுங்கோ. நான் முடிச்சுத் தாறேன்." என்றவர், முனியப்பரைப் பார்த்தார். "முனியப்பர், உமக்குத் தெரியும்தானே, இதிலை இருக்கிற கரைச்சலுகள். சாமறுத்தான் பூசை வைச்சு, சுடலையிலை கழிச்சால்தான் இதாலை வெளி யாலை வரலாம். ஆனால் என்னெண்டால்,...."

முத்துப் பூசாரியார் இழுக்க,

"காசு கீசு எண்டு பயப்படாதையுங்கோ, பூசாரியார். அதுக்கெல்லாம் நாங்கள் ஒழுங்கு பண்ணுறோம். நீங்கள் சுறுக்கா ஒரு வழி பண்ணிப் பொடியனைத் தெளிவாக்கினால் போதும்." காசியம்மான் கூற, முத்தர், முனியப்பரைப் பார்த்தார்.

'காசு இப்ப பெரிசில்லை அம்மான். அந்தச் சாமறுத்தான் பூசைதான் கொஞ்சம் வில்லண்டமானது." என்ற முனியப்பர் சாமறுத்தான் பூசையைப் பற்றிக் காசியம்மானுக்கு விளங்கப்படுத்தினார்.

தனக்கும் இதுகளிலை நல்ல விபரம் தெரிந்தவர் எனக் காட்டுவதற்காகவோ அல்லது வேறு என்னத்திற்காகவோ, முனியப்பர் அப்படிக் கூறினார்.

முத்துப் பூசாரியார் தலைவாசலில் இருந்த மரக் கட்டிலில் சம்மணம் போட்டு அமர்ந்திருந்தார். அவரது சம்மதத்துடன் முனியப்பர் சாமறுத்தான் பூசை பற்றிக் கூறத் தொடங்கினார்.

"சாமறுத்தான் பூசை கொஞ்சம் வில்லண்டமானது. அமவாசை நாளிலை, பொழுபட்டதும் பேய் பிடிச்சாளின்ரை வீட்டிலை இந்தப் பூசையை வைக்க வேணும். சாமம் வரைக்கும் பூசை போகும். வீட்டிலை பெண் புரசுகள் தீட்டாய் இருந்தால் பூசை சரிவராது. அப்ப தீட்டில்லாத அமாவாசையாய்ப் பாக்க வேணும். பேந்தென்னண்டால், ஒரு மணித்தியாலப் பூசைக்குப் பிறகு, பொடியன் கிணத்திலை மூண்டு வாளி தண்ணியள்ளி தலையிலை வாத்துப் போட்டு, அடுத்தாச்சல் பூசைக்கு ஆயத்தமாக வேணும். கோயில் கிணத்துத் தண்ணியெண்டால் நல்லது.

ஈரம் சொட்டச் சொட்ட பொடியன் வந்திருக்க, மற்றப் பூசையைத் தொடங்க வேணும். இதுதான் சரிப்படாத விசயம்." என்றவர், முத்தரைப் பார்த்தார்.

"உமக்கு உங்கடை ஆக்களுக்குச் சொல்லப் பயம் போலை, நான் சொல்லுறேன்." என்று முத்துப் பூசாரியார் தொடர்ந்தார்.

"விடலைக் கோழியை உரிச்சு அப்பிடியே பொரிச்சு வைக்க வேண்டும். ஆட்டிறைச்சியும் நல்லாச் சமைச்சு வைச்சிருக்க வேணும். அதிலையும், ஆட்டு இரத்த வறுவல் இருக்க வேண்டும். இதுகளை ஈரம் சொட்டச் சொட்ட இருக்கிற எறிமாடன் பிடிச்ச ஆளுக்கு முன்னாலை வைக்க வேண்டும். இதெல்லாம் ஏனெனண்டால், எறிமாடன்ரை கவனத்தைத் திருப்புறதுக்கு. இல்லாட்டி, பூசையிலை பிழை வந்திடும். இதெல்லாம் வழமையாய் செய்யிறது தானே. இதைப் பறைய ஏன் பஞ்சிப்பட்டனீர் காணும்?"

முனியப்பர் இடையிலை நுழைந்து,

◊ கனி ◊

'இதுகளெல்லாம் செய்திடலாம் மற்றதுதான் பிச்சனையானது. பொடியன் தண்ணி கிண்ணி ஒண்டும் வாயிலை வைக்கிறேலை. பூசையிலை ஒரு போத்தல் சாரயமெண்டாலும் குடிக்க வேணுமெல்லே. எறிமாடனுக்கெண்டால் காச்சான் இன்னும் நல்லாய் இருக்கும். அதாலை தான் நான்..."

"தம்பி உதுகளொண்டையுமெல்லோ வாயிலை வைக்கிறேல்லை" காசியம்மான்

தொடர்ச்சி 24ஆம் பக்கம்




# சந்தேகம்...

## 18ஆம் பக்கத்தொடர்ச்சி

எல்லா வகையான சந்தேகங்களிலும் கணவன் மனைவிக்கிடையே எழும் சந்தேகமே பெரும் பிரிவினைகளுக்கு ஆளாகி விடுகின்றது. திருமணமாகி சொற்ப நாட்களுக்குள் குடும்பத்திற்குள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இப்பிரச்சினை எழுந்து விடுகின்றது. ஆரம்ப நாட்களில் கடந்த கால வாழ்க்கையினைப் பற்றி பரஸ்பரம் கூறுவோம் என ஆரம்பிப்பவர்கள் படிப்படி யாக சில சந்தேகங்களை ஏற்படுத்திக் கொண்டு வேவு பார்க்க தொடங்கி விடுவர். சிலர் வேலைக்கு செல்லும்போது மனைவியை பூட்டி வைத்து சென்றவர்கள் கூட உளர். அதேபோல கணவனின் வேலைக்கு சென்று அவரைப் பற்றி நண்பர்களிடம் விசாரிப்பவர்களும் உண்டு. கணவனோ அல்லது மனைவியோ இரவு வேலை காரணமாக பிரிய நேர்ந்தாலும் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. அடிக்கடி தொலைபேசியில் அழைத்து சரி பார்த்துக் கொள்பவர் உளர்.

சில மருந்துகளும் உதவுகின்றன. சில வேளைகளில் மருந்துப்பாவனை சில முரண்பாடுகளையும் உண்டாக்கி விடலாம். இந்நோய் உள்ளவர்களுக்கு நடத்தைசார் சிகிச்சை (Behavioral Therapy) செய்ய வேண்டும். இதற்காக கணவன் மனைவியை தனித்தனியாக சிகிச்சையாளர் முதலில் சந்தித்து பேசுவார். சிகிச்சையாளர் மீது முதலில் நம்பிக்கை வேண்டும். இருவருக்கு மிடையில் பொறாமை இருந்தாலும் அதனை நீக்க முயல்வர். வாத பிரதிவாதங்களை எவ்வாறு நிறுத்துவதென பயிற்சியாளர் விளக்குவார்.

அடுத்துள்ள சிகிச்சை முறை உளவள துணை (Courseung) ஆகும். சிகிச்சை யாளர் தம்பதியர்களது பயம், நம்பிக்கை பற்றி விசாரிப்பார். எப்படி கோபம் ஏற்படுகிறதென விசாரிப்பார். வேலையில் உள்ள மனஅழுத்தத்தை குறைக்க முயல்வார். துணையார், நண்பர்கள், ஏனையவர்களிடம் எப்படி பழகுவதென விளக்குவார். உளப்பகுப்பாய்வு முறை (psychoanalysis) மூலம் சிகிச்சையாளர் எப்படி இத்தகைய ஆளுமை பிரச்சினை எவ்வாறு



சந்தேகம் ஆளுமை ஒழுங்கீனம் உள்ளோருக்கு உளச்சிகிச்சை (Psychotherapy) முதலில் தேவையாகும். ஆரம்பத்தில் இந்த சிகிச்சைக்கு செல்ல மறுப்பவர்கள் எப்படியும் சென்றே ஆக வேண்டும். நோயாளருக்கு ஆதரவு கொடுத்தே சிகிச்சை ஆரம்பிக்க வேண்டும். அப்படி யென்றால் தான் சிகிச்சையாளரால் முழுமையாக கவனிக்க முடியும். சந்தேகப்படுவதற்கு ஒரு காரணமும் இல்லையென்றால் அவருக்கு அதனை புரியவைக்க வேண்டும். சில வினாக்கள் மூலமே இதற்கு உதவ வேண்டும். சில சந்தேகங்களில் உண்மையில்லை என்பதனை புரிய வைக்க வேண்டும். நோயாளி மீது மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியது சிகிச்சையாளரின் பொறுப் பாகும். இவ் ஒழுங்கீனம் உள்ளவர்களுக்கு

நிகழ்வுகளையும் விசாரிப்பார். இளமைக் காலத்தைப்பற்றியும் அண்மைய நிகழ்வு களையும் பற்றி விசாரிப்பார். கடந்தகால வாழ்வு மூலம் நோயாளியின் பிரச்சினை களை அறிந்து கொள்வார். உளச்சிகிச்சை முறை (Psychotherapy) மூலம் எவ்வாறு நோயாளியின் அறிகுறிகளுடன் ஒத்துப் போகலாம் என எண்ணி அவர் நடத்தை களை மாற்ற வேண்டிக்கொள்வார் இதனால் ஏனையவர்களை புரிந்து நடக்க முடியும்.

இவ்ஒழுங்கீனத்திற்கு பதட்ட எதிர்ப்பு மருந்து (anti anxiety medicine) எடுப்பதால் பதட்டம் குறைந்து அமைதி பெறமுடியும். அதனால் Diazepam போன்ற மருந்துகள் உதவலாம். உளச்சோர்வு எதிர்ப்பு மருந்துகள் (antidepressant) பாவிக்கலாம்.

மிகக்கடுமையான கவலை இதன் மூலம் தீரும். மனோநிலை சமப்பாடு (Mood stabilizer) மருந்து மனோநிலையை சமப்படுத்த உதவும். அதேபோல உளநோய் எதிர்ப்பு மருந்துகள் (Antipsychotic medicine) பாவிக்கலாம். Thioridazine அல்லது halo peridot ஆகிய மருந்துகள் இதற்கு உதவலாம்.

நாட்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக உருண்டோடி ஷோபாவும் வளர்ந்து 12ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது மாவட்ட ரீதியாக பேச்சுப்போட்டி நடைபெற உள்ளதாகவும், இதில் வெற்றி பெறும் மூன்று பேருக்கு கணிசமான தொகை பணம் பரிசாக கொடுக்க இருப்பதாகவும் விளம்பரம் வந்த செய்தியை அறிந்த மாவிலாறு பாடசாலை அதிபர் ஷோபாவை பங்குகொள்ள உற்சாகப்படுத்தினார். இதில் அதிஷ்டம் என்னவென்றால் தலைப்பு பேசுபவர்களின் விருப்பமாக அமைந்தது தான். பாடசாலை அதிபரின் விருப்பத்திற்கு இணங்க ஷோபா விண்ணப்ப படிவத்தை நிரப்பி கையொப்பம் இட்டு அதிபரிடமே கொடுத்திருந்தபோது அதிபரிடம் சார் தலைப்பு என்னுடையது, நான் மேடையில் பேசும் வரை யாருக்கும் சொல்ல மாட்டேன் என்பதனை உறுதியாக சொன்னாள். அதிபரும் அவள் மேல் நம்பிக்கை கொண்டு சம்மதித்தார்.



அந்த பேச்சுப்போட்டி நாளும் வந்தது. மாவட்ட ரீதியாக பலர் கலந்து கொண்டனர். எல்லாப் பேச்சாளர்களும் பிரபலங்களின் வாழ்வியலைப் பற்றி பேசினார்கள். ஆனால் ஷோபா அவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தலைப்பை தெரிவு செய்து பேசினாள். அதுதான் இன்று நடுத்தர வர்க்க மக்களை வாட்டும் "வறுமை". தலைப்பே பலரின் கவனத்தை ஈர்த்ததை அதிபர் கவனிக்கத் தவறவில்லை.

உலக சனத்தொகையில் அதிகமான மக்கள் வறியவர்களாக இருக்கின்றனர். அதிலும் நம்மைப்போன்று பின்தங்கிய நாடுகளில் வாழும் மக்களில் அதிகமானவர்கள் தங்களின் நாளாந்த வாழ்வியலையே நிறைவு செய்துகொள்ள முடியாதவர்களாக வறுமையில் சிக்குண்டு தவிக்கின்றனர். இப்படி வறுமையில் சிக்குண்டு தவிப்பவர்களை ஒரு நிலையான வாழ்க்கை தரத்திற்கு கொண்டுவருவதற்கு யாருமே மனிதம் சார்ந்து முயற்சித்தது கிடையாது. அரசியல் தலைவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை வளம்பெற செய்பவர்களாகவும், வாக்கு சேகரிக்க மட்டும் மக்களை தேடுபவர்களாகவுமே இருக்கின்றார்கள்.

சமூக அந்தஸ்து என்பது வாழ்வியல் சார்ந்த உயர்வு, தாழ்வினை வைத்தே நிர்ணயிக்கப் படுகிறது. அப்படியானால் வறுமையில் வாழும் மக்களின் நிலைக்கு யார் தான் காரணம். கடவுளா? அதிஸ்டமா? விதியா? என்பதான கேள்விகள் எழுகின்றன. கடவுள் என்போமானால் மனிதர்களை பிரிவினையென்னும் கோட்பாட்டிற்கு அமைவாக ஏன் படைக்க வேண்டும் என்ற கேள்வியும் எழுகின்றது.

அதிஸ்டம் என்றால், அது ஒரு சோம்பேறின் வெற்றியாக மனித வாழ்வு அமைந்து விடுகின்றது அல்லவா? அப்படியானால் விதியாக இருக்கலாமா? விதியென்றால் என்ன என்ற கேள்வி எழுமல்லவா? விதி என்பதனை எப்படி தீர்மானிப்பது என்ற கேள்வியும் கூடவே எழுகின்றது. உண்மையிலேயே வறியவர்களாக மனிதர்கள் படைக்கப்பட்டர்களா? அல்லது வறியவர்களாக ஆக்கப்பட்டர்களா? என்ற கேள்வியே வறுமையினை தீர்மானிக்கின்றது. எனது பார்வையில் மனிதர்கள் வறியவர்களாக ஆக்கப்படுகின்றார்கள் என்பதுவேயாகும். காரணம் ஒரு மனிதனின் நாளாந்த வருமானத்தையே நிர்ணயிக்கும் சக்தியாக முதலாளித்துவம் விளங்குவதேயாகும். அந்த முதலாளித்துவ, தொழிலாளித்துவ வர்க்க முரண்பாட்டினை இல்லாது ஒழித்தால் ஒழிய வறுமை இந்த உலகை விட்டு ஒழியாது, என்பதே என் கருத்தென்று இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

சான்றோர்களே இந்த வறுமையினை ஒழிப்பதற்கான சமூக சூழலை உருவாக்கி, தீர்வினை காணவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு போட்டியின் கால வரைக்குள் என்னால் முடிந்தளவு வறுமையின் கொடுமையினை விபரித்துள்ளேன் என எண்ணி என் உரையினை நிறைவு செய்கின்றேன். ஷோபாவின் பேச்சில் அங்கிருந்த எல்லோருமே கதிகலங்கி போனார்கள். இந்த சிறு குழந்தையின் மன உணர்வுகளின் பதிவின் நியாயத்தினை உணர்ந்தனர்.

கருத்தாயின் கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் துளிகள். சந்தோசத்தின் அடையாளமா? அல்லது வறுமையின் இயலாமையின் அடையாளமா? என தன்னையே தான் கேள்வி எழுப்பிக்கொண்டு புடவைத் தலைப்பால் கண்களை துடைத்துக் கொண்டாள். சிறிய இடைவேளைக்கு பின் பேச்சுப்போட்டியின் தீர்ப்பு அறிவிக்க நடுவர்கள் மேடைக்கு வந்தார்கள். மண்டபம் மயான அமைதியாகி பேச்சாளர்கள், பெற்றோர்கள் மனங்களில் எல்லாம் ஒரு வகை பதட்ட நிலை நிலவியது. நடுவர் எழுந்து இப்பேச்சுப்போட்டியில் 3ம் இடம் பிடித்தவர் என்று கூறி அவரின் பெயரினை சொன்னார். அது ஒரு ஆண் மாணவாக இருந்தார். எல்லோரும் கரகோசம் எழுப்பி உற்சாகமூட்டினார்கள்.

அடுத்து 2ம் இடத்துக்கான பெயர் அறிவிக்கப்பட்டது, இதிலும் ஷோபாவின் பெயர் இடம்பெறவில்லை. இருந்தும் பெற்ரோர்கள் கரவொலி எழுப்பி மகிழ்ச்சியை தெரிவித்தனர். இப்போது மண்டபத்தில் எல்லோர் மனங்களிலும் ஒரு வகையான பதட்டத்தினை காணக்கூடியதாக இருந்தது.

பிரதம விருந்தினராக வந்திருந்த மாவட்ட கலெக்டர் எழுந்து ஒலிபெருக்கி முன் வந்தார். ஆவலோடு எல்லோரும், அவரையே வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு மணித்துளிகளும் பெற்றோரின் பொறுமையை சோதிக்கும் கனமாக அமைந்ததை அனைவரும் இருக்கையின் நுனிக்கு நகர்ந்தமை உறுதி செய்தது. சினிமாக்கார்களின் விழா போன்று 10 வரை நம்பர் எண்ணப்பட்டது. என்னடா இது என ஏக்கத்தோடு எல்லோரும் இருந்தபோது 10 வரை எண்ணி முடிந்த சில நொடிகளில் கலக்டர் வாயிலிருந்து செல்வி ஷோபா என்று உச்சரித்ததும் அதிபரின் மனம் துள்ளிக் குதித்தது. இப்போது நிஜமாகவே கருத்தாயியின் கண்களில் கண்ணீர்த்துளிகள். தன்னைப்பார்த்த அதிபருக்கு இரண்டு கைகளையும் கூப்பி நன்றி செலுத்தினாள்.

அரங்கமே அதிரும் வண்ணம் கரகோசம் கேட்டது. தன் மகள் மேடைக்கு போகும் கண்கொள்ளா காட்சியை பார்த்து தன்னிலை மறந்தவளாக, சொல்ல முடியாத ஒரு வகை உணர்ச்சிகளால் பின்னப்பட்டு செய்வதறியாது தடுமாறினாள். என் குழந்தையும் வென்றுவிட்டாள் என்று மனதுக்குள் புலம்பினாள். வெற்றிக் கேடயத்துடனும், பரிசுப்பணத்துடனும் மேடையை விட்டு கீழே வந்த ஷோபா நேரடியாக அதிபரிடம் சென்று காலில் விழுந்து ஆசீர்வாதம் வேண்டினாள். பின் தாயிடம் சென்று ஆசீர்வாதம் பெற குனிந்தவளை அப்படியே அள்ளி அணைத்து முத்தமழை பொழிந்தாள். என் புள்ள சாதித்து விட்டாள் என்று மனதுக்குள் சொன்னாள். தன் மகளின் வெற்றியின் தொடக்கம் இது என எண்ணி மகிழ்ந்தாள்.

மாவிலாறு கிராமமே ஷோபாவை வழியனுப்புவதற்காக திரண்டிருந்தது. சும்மாவா தமது ஊர் பிள்ளை பெரிய படிப்பு அதுவும் டாக்டருக்கு படிக்க போகிறது என்ற மகிழ்ச்சி பலரின் முகங்களில் காணமுடிந்தது. இருந்தும் சிலரின் வாய்களில் ஊம் மாமனையும் இப்படித்தானே வழியனுப்பி



- ஆசீர் அன்ரனி -
ஸ்காபரோ, கனடா

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# தனிநபர்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

சென்று, அந்த வீட்டின் முன்பு கழுத்தை அறுத்து பூஜை போடுகிறார்கள்.

மேட்டூர் அருகே நிகழ்ந்த இன்னொரு செய்தி... ஒரு பெண்ணிற்கு தோஷம் இருக்கிறது. தொடையில் சூடு போட வேண்டும் என்று கூறி அந்தப் பெண்ணை ஒரு ஜோசியர் வன்புணர்ச்சி செய்ய முயற்சிக்கிறார். அந்தப் பெண் தப்பிக்க போராடி இறந்து போய்விட்டார்.

இதுபோன்று ஏராளமான நிகழ்வுகள். அதுவும் நடைபெறும் நிகழ்வுகளில் 100க்கு 10 சதவீதம்தான் செய்திகளாகின்றன. தொண்ணூறு சதவீத நிகழ்வுகள் வீட்டுக்குள்ளும் ஊருக்குள்ளும் வட்டத்திற்குள்ளுமாகவே அடங்கிவிடுகின்றன என வைத்துக் கொண்டால், எவ்வளவு நடக்கும்? இதனை தடுக்க நம்மால் என்ன செய்ய முடியும் என்று வழிகளை தேடினேன். மூடநம்பிக்கைகளுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த இயக்கங்கள் இருந்தன. முற்போக்கு பத்திரிகைகளில் எழுத வாய்ப்பு இருந்தது. ஆனால், இந்தப் பத்திரிகைகள் குறைவான மக்களையே சென்றடைந்தன. மேடைகளில் பேசமுடியும். எத்தனை பேர் கேட்பார்கள்? பெருவாரியான மக்களை சென்றடைய வேண்டுமானால் அதற்கு ஒரே வழி சினிமாதான் என்று முடிவு செய்தேன். ஆனால், ஒரு விவசாய குடும்ப பின்னணியில் இருந்து வந்த என்னால், எந்தவொரு பின்புலமும் இல்லாத நிலையில், திரைத்துறைக்குள் சென்று சினிமா செய்துவிட முடியாது என்பதையும் அறிந்திருந்தேன். அதனால், முதலில் தொலைக்காட்சிகளில் வாய்ப்பு தேடினேன். 'தமிழன்' தொலைக்காட்சியில் ஒரு வாய்ப்பு கிடைத்தது. அங்கே குறும்படம் இயக்கினேன். பிறகு, மக்கள் தொலைக்காட்சி, 2005, 2006இல் லீகோ லேண்ட் கம்பெனியில் ஃப்ரிலேண்ஸ்சராக பணியாற்றினேன். 28,000 ரூபாய் சம்பளம். ஏழு, எட்டு வருடங்களுக்கு முன்பு அது ஒரு பெரிய தொகை. அடுத்த புராஜெக்ட்டில் அது 35,000 ரூபாயாக உயர்ந்தது. இதையெல்லாம் தவிர்த்து விட்டுத்தான் தொலைக்காட்சிக்கு சென்றேன்.

'தமிழன்' தொலைக்காட்சியில் வாய்ப்பு கேட்கும் போது, படப்பிடிப்பிற்கு பணம் தர முடியாது என்று கூறிவிட்டார்கள். ஒரு காரியத்தை திறம்பட செய்து முடித்து விடுவார் என்ற நம்பிக்கையை மற்றவர்களுக்கு அளிப்பதான உருவத்தையோ நடத்தைகளையோ நான் கைவரப் பெற்றவனல்ல. இதனால் ஆரம்பத்தில் அவர்களுக்கு நம்பிக்கையின்மையே நிலவியது. எனவே, "சரி, எடுங்கள், பார்க்கலாம். ஆனால், அதற்கான செலவுகளை நீங்கள்தான் போட்டுக்கொள்ள வேண்டும்" என்றார்கள். அங்கே, செய்தித்தாள்களில் வந்த நிகழ்வுகளை வாரம் ஒரு தொடராக எடுத்தேன். தோஷம் கழிப்பதாக பெண்களை வன்புணர்ச்சி செய்த நிகழ்வுகள், நரபலி, புதையல் எடுக்கிறேன் என்று ஏமாற்றியது, பேய் விரட்டுகிறேன் என்று பெண்களை அடித்து துன்புறுத்துவது போன்ற உண்மைச் சம்பவங்களை குறும்படமாக்கினேன். ஒவ்வொரு குறும்படமும் ஒரு வாரத்திற்குள் முடிந்துவிடும் அளவிலானவை.

வேலையை விட்டுவிட்டதால் முழுவதும் வீட்டையே சார்ந்து இருக்க வேண்டிய திருந்தது. உணவு, பயண செலவீனங்களை குடும்பத்தினர் பார்த்துக்கொண்டனர். ஆனால், குறும்படத்துக்கான பணத்தைத் தரும் அளவிற்கு குடும்பத்துக்கு வசதியில்லை. கொளத்தூர் மணி அய்யாவிடம் சென்று கேட்டேன். அவர், "நீங்கள் சரியாக செய்தீர்கள் என்றால் போதும். மக்களிடம் இந்த கருத்துகள் சென்றடைந்தால் போதும்" என்று கூறி பத்தாயிரம் ரூபாய் கொடுத்தார். அவர் கொடுத்த தொகையும் உற்சாகமும் அதனால் உண்டான தன்னம்பிக்கையும் இல்லை என்றால் அதைத் தாண்டி பயணித்திருக்க முடியாது. அந்தத் தொடர் பத்து வாரங்கள் வந்தது. அடுத்து, மக்கள் தொலைக்காட்சியில் இதே நிகழ்ச்சியை ஒரு வருடம் படமாக்கினேன். மக்கள் தொலைக் காட்சியில் நிதி உதவியும் கிடைத்தது. இந்த இரண்டு தொலைக்காட்சிகளிலும் வெங்காயம் என்ற பெயரிலேயே எனது தொடர் ஒளிப்பரப்பானது.

மக்கள் சந்திக்கிற உண்மை கதைகள் என்பதால் எனது ஊர்க்காரர்கள், அப்பா, தாத்தா, பாட்டி, தம்பி, தங்கச்சி, மாமா என அனைவரையும் நடிக்க வைத்தேன். கூடுதல் நடிகர்கள் தேவைப்பட்ட போது சுற்று வட்டாரத்தில் உள்ள மக்களையே நடிக்க வைத்தேன். அதை இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறேன். இந்த வாரம் படப்பிடிப்பு நடத்தினால் அடுத்த ஞாயிற்றுகிழமை தொலைக்காட்சியில் வந்துவிடும். அதை பார்த்தவர்கள் அதைப்பற்றி பேசவும் விமர்சிக்கவும் வரவேற்கவும் செய்தனர். இதனால் குடும்பத்தார் மகிழ்ச்சியடைந்தனர். இந்த வரவேற்பு இதையே திரைப்படமாக எடுத்துவிடலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. மக்கள் தொலைக்காட்சியில் பணியாற்றிய போது கிடைத்த வருமானத்தில் சிறிய தொகை ஒன்றை சேமித்து வைத்திருந்தேன். அதைக்கொண்டு மிக சாதாரணமாகவே படத்தை எடுக்க துவங்கினேன். படப்பிடிப்பு நடப்பதற்கு குடும்பத்தினர் ஒத்துழைத்தனர். இக்கட்டான பல நெருக்கடியில் அவர்கள் உதவியும் செய்தனர். ஆனாலும், கடைசியில் பண நெருக்கடிக்கு உள்ளானேன். எனவே, நிலத்தை அடமானம் வைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம். ஏனெனில், படத்தைத் துவங்கிவிட்டோம். பாதிக்கு மேல் தாண்டியாகிவிட்டது. இனி நிறுத்த முடியாது.



இது ஒரு சீட்டாடம் போலத்தான். விட்டதை பிடிக்க வேண்டுமானல் மீண்டும் பணத்தை முதலீடு செய்துதான் ஆகவேண்டும். அரக்கோணத்தில் தீலிபன் என்று ஒருவர் இருந்தார். அவருடைய சொத்துக்களை எல்லாம் அடமானம் வைத்து உதவி செய்தார். படத்தில் நடித்தவர்கள் எல்லோரும் ஆங்காங்கே அவர்களது வேலையை செய்து கொண்டிருப்பார்கள். காட்டில் வேலை செய்து கொண்டிருப்பார்கள். ஆடு மேய்த்து கொண்டிருப்பார்கள். படப்பிடிப்பு நாட்களில் அழைத்ததும் வருவார்கள். அவர்கள் வேலையை பாதிக்காமலும் படப்பிடிப்பை திட்டமிட வேண்டியிருந்தது. உதாரணமாக, சில நடிகர்களுக்கு ஐந்து மணிக்கு பால் கறக்க செல்லவேண்டும். எனவே, அதற்கு தகுந்தமாதிரி படப்பிடிப்பை நடத்தினோம்.

டிஜிட்டல் வந்த பிறகுதான் இது சாத்திய மாகியுள்ளது. படச்சுருளாக (பிக்சராக) இருக்கும்பட்சத்தில் இது சாத்தியமில்லை. அதில் ஒவ்வொரு கட்டத்திலும் பெரிய பெரிய நடைமுறைகள் இருந்தன. லேப் தேவைப்பட்டது. கேன் வாங்குவதற்கு ஒரு லேப்பிற்கு போக வேண்டும். போஸ்ட் புரோடகஷன் செய்வதற்கு பெரிய லேப், ஸ்டியோ, எடிட்டர் வேண்டும். டிஜிட்டல் வந்த பிறகு போஸ்ட் புரோடக்ஷன் வேலைகள் மிக எளிமையாகிவிட்டன. எனவே, பத்து, இருபது டேக் போனால்கூட கவலைப்படாமல் எடுக்கலாம். எனவே, புதுமுகங்களை நடிக்க வைக்கலாம். இதனால், சுலபமாக படைப்பை உருவாக்கி விட முடிகிறது.

ஆனால், படத்தை ரிலீஸ் செய்யும்பொழுது மற்றவர்கள் உதவியில்லாமல் எதுவும் செய்ய முடியாதே?

உண்மைதான். சென்சாரில், "ரொம்ப நல்ல படம், மறுக்க முடியாத கருத்துக்கள் கொண்ட படம், இந்த படம் கண்டிப்பாக மக்களுக்கு சென்று சேர வேண்டும்" என்று கூறி பாராட்டினர். அந்த உற்சாகம் படத்தை ரிலீஸுக்கு சென்றபோது முதல்நாளே காணாமல் போய்விட்டது. நமது கோபத்தை படைப்பாக உருமாற்றிவிடுகிறோம். டிஜிட்டல் தொழில்நுட்பம் எல்லாவற்றையும் சுலபமாக்கி விட்டது. ஆனால், அதை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்கும் போது, பழைய வியாபார நடைமுறைகளுக்குள்தான் செல்ல வேண்டியிருக்கிறது. எனக்கு திரைத்துறைக் குள் பெரிய அறிமுகம் இல்லாததால் இக்கட்டத்தை கடப்பதில் பெரும் சிக்கல் எழுந்தது. திரைத்துறையில் எனக்கு வேலு பிரபாகர் சார் ஒருவரை மட்டும்தான் தெரிந்திருந்தது. அவருக்கும் ஒரு பெரிய வியாபாரத்தை நடத்தக்கூடிய பலம் இல்லை. யார் யாரையோ பார்த்து முயற்சி செய்தோம். ஆனால், அவர்கள் படம் பார்க்க வரக்கூட தயாராக இல்லை. படத்தை வெளியிடும் பெரிய நிறுவனங்களையும் தொடர்புகொள்ள முடியவில்லை.

சின்ன படங்களை மட்டும் சார்ந்திருக்கும் விநியோகஸ்தர்கள் நிறைய பேர் உள்ளனர். அத்தகைய திரையிடலின் போது, யார் படம் போட்டாலும் பார்க்க ஆயிரம் பேர் வருவார்கள். ஆனால் அவர்கள், "முன் கூட்டியே பணம் தரமாட்டோம், படம் ஓடினால் தருகிறோம். விளம்பரம் செய்வதெல்லாம் உங்கள் வேலை" என்ற அளவில்தான் பேசினார்கள். தொலைக்காட்சி உரிமத்திற் காக முயற்சித்தபோதும், அடிமட்ட விலைக்குத்தான் பேசினார்கள். எப்.எம்.எஸ். உள்ளிட்ட அனைத்திற்கும் அதே நிலைதான். படமாக்கிவிட்டேன், அதை வியாபாரமாக்க முடியவில்லை. நஷ்டமடைந்தால் குடியிருக் கக்கூட இடம் இருக்காது என்ற நிலைமை.

ஒரு கட்டத்தில் நாமே வெளியிடலாம் என்று முடிவுசெய்து அதற்கான முயற்சிகளில் இறங்கினேன். 'தினமணி', 'ஆனந்த விகடன்'' போன்ற பத்திரிகைகளில் பாராட்டி எழுதினார் கள். நடிகை ரோகிணி, ராஜ் தொலைக்காட்சி யில் நல்ல மாதிரியான விமர்சனம் செய்தார். படம் வெளியாகியது. 100 திரையரங்குகளா வது கிடைக்கும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், தமிழ்நாடு முழுக்க 35 திரை யரங்குகள்தான் கிடைத்தது. அத்துடன் சில இடங்களில் பணம் கொடுத்துதான் திரையிட வேண்டியிருந்தது.

இதற்கிடையில் ரோகிணி அவர்கள், இயக்குனர் சேரனிடம், "இதுபோல் ஒரு படம் பார்த்தேன். ரொம்ப நன்றாக இருந்தது. தயவுசெய்து நீங்கள் அதனை பார்க்க வேண்டும்" என்று கூறியுள்ளார். சேரன் படம்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# மன்னனின் மாறுவேடம்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை ஒரு அரசன் ஆண்டு வந்தார். அவருக்கு பல மந்திரிகள் இருந்தார்கள். அரசன் மந்திரிகள் மூலம்தான் எல்லா விடயங்களையும் செய்தார். அரசன் மக்களோடு கதைப்பது எல்லாம் நகர்வலம் வரும்போது மட்டும்தான் செய்வார். மக்கள் ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்றால் மந்திரிகளிடம் தான் சொல்லுவார்கள்.

இப்படி நடந்ததால், அரசருக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பு இல்லாமல் போய்விட்டது. ஏதாவது புதுச்சட்டம் அரசன் செய்தால் அதை முதல் மந்திரி மூலம் செய்வார். மக்களின் பதில் அறிய வேண்டும் என்றால் அரசன் முதல் மந்திரியை கேட்பார். இதனால் அரசன் தன் முதல் மந்திரி கூறியபடி தன்னுடைய ஆட்சி நன்றாக போய்க்கொண்டு இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு இருந்தார். ஒருமுறை அவர் தேரில் ஊர்வலம் வரும்போது ஒருசில மக்கள் மட்டுமே அவரைப் பார்க்க வந்தனர். அந்த மக்களும் சோகமாக இருப்பது போல் அரசருக்கு தெரிந்தது.



பிறகு அரசன் முதல் மந்திரியை கேட்டுப்பார்த்தார். மந்திரியோ சனங்கள் நன்றாய் இருப்பதால் அவர்கள் அரசனை பார்க்க வரவில்லை என கூறினார். இங்கு தப்பு ஒன்று நடக்கிறது என நினைத்த அரசன் அன்றிரவு முழுக்க வேறொருவரிடமும் ஆலோசிக்காமல் யோசித்து ஒரு முடிவிற்கு வந்தார்.

மறுநாள் மாலை ஒருவருக்கும் தெரியாமல் அரசன் வெளியூரிலிருந்து வந்த பயணிபோல வேடமிட்டு வெளியே சென்றார். அவர் மக்கள் கதைப்பதை ஒட்டுக் கேட்டார். அரசன் கேட்டதெல்லாம் அவரை திகைக்கச் செய்தது. மக்கள் கஷ்டத்தில் இருக்கின்றனர். குற்றங்கள் நகரில் கூடிக் கொண்டிருக்கிறது. மக்கள் அரசனையும், தாம் விரும்பியபடி சட்டங்களை செய்யும் மந்திரிகளையும் திட்டினர்.

அரசன் சந்தேகத்துடன் அரண்மனைக்கு போய், தான் போட்ட சட்டங்களை பார்வையிட்டார். முதல் மந்திரி வேண்டும் என்று அவற்றை மாற்றி எழுதியதை அவர் தெரிந்து கொண்டார். தான் முதல் மந்திரிக்கு அதிகளவு உரிமை கொடுத்ததால் இது நடந்தது என்று அரசனுக்கு புரிந்தது. உடனடியாக அவர் முதல் மந்திரியை வேலையில் இருந்து நீக்கிவிட்டு தனது நம்பிக்கைக்குரிய புதியவர் ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்தார்.

அன்றிலிருந்து அரசன் மக்களுடன் நேரடியாக பேசியதால் நகரத்தில் குற்றம் குறைந்து மக்கள் சந்தோசத்துடன் வாழ்ந்தனர். அதன்பின்னர் மன்னர்கள் மாறுவேடமிட்டு நகரைச் சுற்றி வருவது ஒரு வழக்கமாகி விட்டது. இதையே வள்ளுவரும் அரசனை மந்திரிமார் நல்வழி கூறி திருத்தாவிட்டால், நாடு அழியும் என்றார்.

**'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானுங் கெடும்'**
- திருக்குறள்



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# அம்மா

**31ஆம் பக்கத்தொடர்ச்சி**

வைத்தோம். படிப்பு முடிய இந்த ஊர் பக்கமே வராத பயல், அது போலத்தான் இவவும் செய்வாவோ தெரியாதென புறுபுறுத்தனர். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் என்று எல்லோருமே ஒன்று கூடி வழியனுப்பினர். கருத்தாயி என்ன நடக்கிறதென்றே உணராத பேதையைப் போல் நின்றவவிடம் ஓடிவந்த மகள் ஷோபா, தாயைக் கட்டிப்பிடித்து கொஞ்சியபோது தான் சுய நினைவுக்கு வந்தாள்.

மகளை வழியனுப்பி வைத்ததோடு எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குள் சென்று கொண்டிருந்தனர். அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் கருத்தாயிக்கு வாழ்த்துக்கள் கூறி விடைபெற்றுக்கொண்டிருந்தனர். அப்போது கருத்தாயிக்கு அருகில் வந்த சரோஜா ரீச்சர் கருத்தாயியை கட்டி அணைத்து உன் துன்பங்களுக்கொல்லாம் விடிவு கிட்டிவிட்டதென்று மன நிறைவோடு சொன்னபோது, ரீச்சர் உங்கட ஆசீர்வாதமும், அதிபரின் முயற்சியும் தான் காரணம் எல்லாம் நல்ல படியாக முடியவேண்டும் ரீச்சர் என்று சொன்னாள். அதுக்கு சரோஜா ரீச்சர் ஒன்றுக்கும் பயப்படாத கருத்தாயி எல்லாம் மகிழ்சியாக நடக்கும் என்றார்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. கருத்தாயிக்கும், ராதா, சிநேகாவுக்கும் ஷோபாவின் பிரிவித்துயர் வாட்டிக் கொண்டிருந்தது. கஞ்சியோ, கூழோ குடித்துக்கொண்டு ஒன்றாக இருந்த நாங்கள் இப்படி ஒருத்தியை பிரிந்து விடடோமே என்ற வாட்டம் இருக்கத்தானே செய்யும். வழமைபோல் இரவு எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு சாமி கும்பிட்டு விட்டு படுக்கப்போன கருத்தாயின் மனதில் ஏதோ ஓர் உணர்வு. என்ன இது மனதை ஏதோ செய்கின்றது என்று நினைத்து மீண்டும் சாமி கும்பிட்டு படுத்துக்கொண்டாள்.

காலை 5 மணிக்கு எழுந்து வெளியில் வந்தவளுக்கு காகம் கரையும் சத்தம் கேட்டு,. என்ன இது விடிய வெள்ளன காகம் கரைகிறதே என்ன நடக்கப் போகிறதோ என்று கடவுளை வேண்டிக்கொண்டு காகத்தை கலைத்தாள். ஆனால் அது அந்த இடத்தை விட்டு நகர்வதாகவும் இல்லை, கரைவதை நிறுத்துவதாகவும் இல்லை.



காலைச்சாப்பாடெல்லாம் முடித்து பிள்ளைகள் ராதாவையும், சிநேகாவையும் வேலைக்கனுப்பிவிட்டு திண்ணையில் சாய்ந்தாள் கருத்தாயி. தூங்கப் போனவளின் காதுகளில் காகத்தின் இரைச்சல் இடஞ்சலைத் தந்தது. கோபம் கொண்டு எழும்பி தடி எடுத்துக்கொண்டு கலைக்க போனவுக்கு வாசலில் மணி அடிக்கும் ஓசைகேட்டு வாசலைத்தேடி போனாள். தடியுடன் கருத்தாயியைக் கண்ட தபால்காரன் பயந்து போய், அம்மா உங்களுக்கு கடிதம் வந்திருக்கு என்று பெலமாக சொன்னான். தன் கையிலிருந்த தடியை தூர எறிந்துவிட்டு, தம்பி யாரெட்ட ராசா இருந்து வந்திருக்கு என்று கேட்டாள். யாரோ ஷோபாவாம் என்றான். அது யாரோ இல்லையப்பு என்ர கடக்குட்டி பெட்ட என்று சொல்லி ராசா இதை ஒருக்கா படிச்சு சொல்லப்பு உனக்கு புண்ணியம் கிடைக்குமென்றாள். தபால்காரன் படிக்க தொடங்கினார்.

அன்புள்ள அம்மா, ராதா அக்கா, சிநேகா அக்கா எல்லோருக்கும்
நான் நலமுடன் வந்துள்ளேன். நீங்கள் எல்லோரும் சுகமாக இருக்கின்றீர்களா?

அம்மா நான் எப்படியும் படித்து வருவேன். என்னை நினைத்து கவலைப்படாதீங்கள். அக்காக்களை சந்தோசமக வைத்திருங்கள். எனக்கு உங்களை நினைத்தால் தான் கவலை அம்மா. எங்களையே உங்கள் உலகமாக்கிக்கொண்டு, எந்தவித சந்தோசத்தையும் அனுபவிக்காமல் வாழுகின்றீர்களே. அதை நினைத்தால் தான் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. அம்மா நமக்கான விடியல் தொலைவில் இல்லையம்மா. மகிழ்ச்சியாக இருங்கள்.

ராதா அக்கா எப்படி இருக்கின்றீர்கள். வேலையெல்லாம் எப்படி போகின்றது. அக்கா அம்மாவை கவனமாகப் பார்க்கவும். உங்களையெல்லாம் பிரிந்து வந்தது எனக்கு சரியான கவலை, இருந்தும் நம் வாழ்வின் எதிர்காலத்துக்காக எல்லாவற்றையும் தாங்க தயாராக இருக்கின்றேன்.

ஹலோ சிநேகா அக்கா எப்படி இருக்கின்றாய். உங்களையெல்லாம் சகோதரங்களாக நான் பெற்றது பெரிய பாக்கியம். என்னவாம் அம்மா. உனக்குத்தான் அம்மாவின் உணர்வுகள் நன்றாகப் புரியும், அம்மா கவனம். கவனமாக பார்த்துக்கொள்ளவும்.

பட்டணம் எப்படி இருக்கென்று என்னால் எழுத்துக்களில் எழுத முடியாமல் உள்ளது. பார்க்கும் இடமெல்லாம் கட்டிடங்கள். வண்ணமயமான காட்சிகள். கார்கள் ஆயிரக்கணக்கில். இந்த மனிதர்களின் வாழ்க்கையை நாம் கூடிய விரைவில் அனுபவிப்போம். எனக்கு வகுப்புகள் தொடங்கிவிட்டன. சுஜாதா என்ற பெண் என்னுடன் அன்பாக பழகுகின்றா. அவதான் என் அறையிலும் என்னோடு இருக்கின்றா.

நமது ஊரில் எல்லோருக்கும் என் அன்பை தெரிவிக்கவும். நான் அடிக்கடி கடிதம் போடுகின்றேன். அம்மா உங்கள் மகிழ்ச்சி தான் என் படிப்பினை தொடர உதவி செய்யும்.

நீங்களும் எனக்கு கடிதம் போடவும்.

அன்புடன்
ஷோபா

தொடரும்...


Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# Education

## Answer Key : 14-8

$N_2(g) + 3\,H_2(g) \rightleftharpoons 2\,NH_3(g)$

$$K = \frac{[NH_3]^a}{[N_2]^b[H_2]^c}$$

$R_f = k_f[N_2]^b[H_2]^c \qquad R_b = k_b[NH_3]^a$

Determine the order of reactions a, b and c and $k_f$ and $k_b$ values.

$$K = \frac{K_f}{K_b}$$

**ICE table**

| | $N_2(g)$ | + $3\,H_2(g)$ | $\rightleftharpoons$ $2\,NH_3(g)$ |
|---|---|---|---|
| I | - | - | 0.4 mol/L ( $\frac{3.4}{17 \times 0.5}$ mol/L) |
| C | $x$ | $3x$ | $-2x$ |
| E | $x$ | $3x$ | $(0.4-2x)$ |

Use the K value and calculate the equilibrium concentrations.

## PHYSICS 11




(i) $\Sigma F_y = F_T + F_T - F_g = ma$

$2F_T - F_g = 0$

$$F_T = \frac{F_g}{2} = \frac{72 X 9.0}{2} N$$

$F_T = 350N$

(ii) $2F_T - F_g = ma$

$$F_T = \frac{ma + F_g}{2}$$

$$F_T = \frac{72X\,1 + 72X9.8}{2}$$

## PHYSICS 12

(A)

$$a = \frac{V_f - V_i}{\Delta t} \qquad a = \frac{40m/s - 0m/s}{\Delta 0.08}$$

$a = 500m/s^2$ ; $F_{ave} = ma$; $F_{ave} = (0.160 X 500)\,N$

(B)(i) $I = P_f - P_i = mV_f - mV_i$ (0.16x 52) – (0.16x9 –(40)

= 8.32 + 6.4

= 14.72 kg.m/s (Ans= 15kg.m/s)

(ii) $F_{(ave)} = J/\Delta t$ =15/0.0013 = 11323N Ans=1.1x $10^4$ N)

## CALCULUS

Differentiate the following,

(i) $\sqrt{\dfrac{1+x^3}{1-x^3}}$ ans: $\dfrac{3x^2}{(1+x^3)^{\frac{1}{2}}(1-x^3)^{\frac{1}{2}}}$

(ii) $\sqrt{1+x^2}.\,sin^3\sqrt{x}$ ans:

$$\sqrt{1+x^2}\;3\sin^2\sqrt{x}.\cos\sqrt{x}\,\frac{1}{2\sqrt{x}} + \sin^3\sqrt{x}.\frac{1}{\sqrt{1+x^2}}.2x$$

## Review Tutorials 14 -9

➢ **FUNCTIONS 11**

(A)For what value (s) of K , the following function has no real roots. $f_{(x)} = k\,x^2 - 6x + k$

(B) Determine the inverse of each linear function

(i) $f(x) = \frac{x-7}{5}$ (ii) $g(x) = -\frac{2x}{3} + 2$

(C) Simplify the following and state any restrictions on the variables

(i) $\dfrac{x+3}{x^2-4x-21}$ (ii) $\dfrac{x^2-3x--10}{x^2-2x+15}$

➢ **ADV. FUNCTIONS 12**

(i)

Prove , $\dfrac{2\tan x}{1+\tan^2 x} = \sin 2x$

(ii)

$\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a(\frac{x^2}{y^3})$

➢ **CHEMISTRY 12 & IB**

(i) Organic synthesis

A. benzene → toluene →benzoic acid

B. 1-propanol →propanone

C. ethanal →ethyl-ethanoate

(ii) What are the major products in each of the following if $CH_3CHBrCH_3$ reacts with

(a) EtOH (b) EtONa/ EtOH

(iii) Give IUPAC name of the major product/s

(i) (ii)




➢ **BIOLOGY 12**

Describe the cyclic and and non-cyclic photophosporilation and its importance in carbon fixation

➢ **PHYSICS 11**

A piano note, $A_2$ has to be tuned to its proper frequency 110Hz. If you have a tuning fork whose frequency is 220Hz, how should you do the adjustment

Answer key 14-9 - next issue
Contact: 647 341 3975
Dr. K.A.Srikrishnaraj
ask@ keentutoringcentre.com

TUTORING CENTRE

# தனிநபர்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

பார்த்தார். என்னை அப்படியே கட்டிப்பிடித்து கொண்டார். “இந்தப் படத்தை எப்படியாவது மக்களிடம் கொண்டு சேர்த்துவிடுகிறேன். நீ போய் நிம்மதியாக தூங்கு. இந்தப் படம் எனது தூக்கத்தை கெடுத்துவிட்டது. இந்தப் படத்தை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும்வரை நான் தூங்கமாட்டேன். உன்னுடைய வலிகளை என் மேல் இறக்கி வைத்துவிட்டு நீ போய் தூங்கு” என்றார். அதற்கு பிறகு எல்லா இயக்குனர்களிடம் பேசி, இதுபோல் ஒரு படம் வந்திருக்கிறது. முன்அனுபவம் இல்லாததால் படத்தை வெளியிடுவதில் சிக்கல் என்று கூறி ஒரு திரையிடலை ஏற்பாடு செய்தார். அந்த திரையிடலில் 150 இயக்குனர்கள் ஒன்றாக அமர்ந்து படத்தை பார்த்தார்கள். முடிவாக எல்லோரும் பேசினோம். சரியான விளம்பரம் இல்லாமல் படம் வெளியாகியுள்ளது. சரியான திரையரங்குகளும் கிடைக்க வில்லை. பல ஊர்களில் ஏதோ ஒரு மூலையில் இருந்த திரையரங்குகளில் மட்டும் ஓடிக் கொண்டிருக்கிறது. அதனால் படத்தை நிறுத்திவிட்டு முறையாக விளம்பரம் செய்து படத்தை மீண்டும் வெளியிடுவோம் என்று முடிவு செய்தோம். வெள்ளிக்கிழமை வெளியான படத்தை ஞாயிற்றுகிழமை நிறுத்திவிட்டோம்.



மீண்டும் தொலைக்காட்சிக்கு சென்று சேட்டிலைட் உரிமம் பேசினோம். இந்தமுறை படத்தை பற்றிய பேச்சு அதிகரித்திருந்தது. அதனால், படத்தின் மதிப்பும் அதிகரித்திருந்தது. எனவே, ஒரு திருப்தியான தொகைக்கு வாங்கிகொண்டார்கள். அந்தத் தொகையை வைத்து நன்றாக விளம்பரப்படுத்தி படத்தை இரண்டாம் முறை வெளியிட்டோம். இரண்டாவது வெளியீட்டில் ஒரு அங்கீகாரம் கிடைத்தது. விஜய் டிவியில் நல்லதொரு நிகழ்ச்சி செய்து தந்தார்கள். திரையரங்கில் போட்ட முழு பணத்தையும் திரும்ப எடுக்க முடியவில்லை என்றாலும்கூட கழுத்தை நெரித்த பிரச்சனைகளில் இருந்து ஓரளவு தப்பிக்க முடிந்தது.

ஏன் இப்படி தனி நபராக கஷ்டப்பட்டீர்கள், முறையாக தயாரிப்பாளர் பிடித்து பலமான பின்னணியுடன் செய்திருக்கலாமே?

‘வெங்காயம்’ மாதிரியான படத்தில் முதலீடு செய்ய எந்த தயாரிபாளர் முன்வருவார். அல்லது தயாரிப்பாளருக்காக கதைக் களனை மாற்ற வேண்டும். வேறு வழியில்லை, மூடநம்பிக்கைக்கு எதிராக நாமே ஏதாவது செய்வோம் என்றுதான் இறங்கினேன். படமெடுப்பதால் பிரச்சனைகள் தீர்ந்து விடுமா என்று கேட்கலாம். தெரியவில்லைளு. ஏதாவது ஒரு புள்ளியில் நாம் இயங்க வேண்டியிருக்கிறது. நமது கடமையை நாம் செய்வோம் என நினைத்தேன். வெங்காயத்தை எடுத்திருக்காவிட்டால் நம்மால் செய்ய முடிந்த கடமையை செய்யாமல் இருக்கிறோம் என்ற குற்றவுணர்வு இருக்கும். அது என்னைத் தூங்கவிடாமல் செய்திருக்கும்.

உங்கள் இரண்டாவது படம் எப்போது வரும்?

‘வெங்காயம்’ படத்துக்குப் பிறகு ‘ஒன்’ என்ற பெயரில் ஒரு படத்தை தொடங்கினேன். ஒரே யொருவர் மட்டும் நடிக்கும் கதை. அந்த ஒருவராக நானே நடித்தேன். ஆனால், அந்த படத்தை முடிக்கமுடியவில்லை. தற்போது, ‘நெடும்பாறைகள’ என்றொரு படத்தை இயக்குகிறேன். இப்படத்தில் காட்டுவாசிகளின் வாழ்க்கை முறையை பதிவு செய்துள்ளேன். காடே கதியென்று வாழும் மனிதர்கள் நகரத்துக்கு வந்தபோது படும் அவஸ்தை களை சொல்லியிருக்கிறேன். பெரும்பாலான காட்சிகள் காட்டுப்பகுதியிலேயே நடத்தப்பட்டது.

விரைவில் வெளிவரும்.

உயிர் ஓசைகள்

குமுதினி இனப் படுகொலையின் நீங்கா நிகழ்வு 2014
எங்கள் உறவுகளை நாமே தாங்குவோம்
**இடம்:** ஐயப்பன் இந்து ஆலயம்,
635 Middlefield Road, Scar,ON, M1V 5B8
**நேரம்:** மாலை 4:30 **காலம்:** மே 24, 2014

நடனம் நாடகம் கவிதை தாயகப்பாடல்கள் மற்றும் பற்பல நிகழ்ச்சிகளுடன்…!
யாழ். தீவகக் கடலில் குமுதினிப்படகில் மே-15.1985 அன்று பயணித்த எம் உறவுகள் மீது நிகழ்த்தப்பட்ட கோரப் படுகொலையின் 29வது ஆண்டு நினைவு நிகழ்வு. இந்நிகழ்வில் தீவக மக்கள் புலம்பெயர் உறவுகள் கனடியத் தமிழர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

*S. Nimal: 416.816.7994 /K.Thurai: 416.890.5273*
*N.Ruban: 416.567.0950*
நன்றியுடன்: நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா

# பெண் புத்தி.......யா?

உள்ளங் கை சொறிந்தது. அங்கே சொறிந் தால் எதிர்பாராத விதமாக காசு வரும் என்பது ஐதீகம். சென்ரினறி வைத்திய சாலைக்குத் திங்கட்கிழமைகளில் உடலப்பி யாசத்திற்கு செல்கையில் அங்கே உள்ள Shoppers Drug Mart இல் ஒரு 649 வாங்குவது வழக்கம். அடுத்த முறை போகும் பொழுது அங்கே உள்ள பொறியில் வைத்துப் பார்த்தால் ஏதேனும் பிச்சை போட்டிருப்பார்களோ எனத் தெரியவரும். இம்முறை சற்றுத் தைரியத்துடன் வைத்துப் பார்த்தேன். $2.00 கிடைத்தது. உள்ளங் கை சொறிந்தது இதற்குத் தானாக இருக்கலாம் என எண்ணினேன். ஆனால் வீடு வந்ததும் இதற்காக அல்ல வேறொன்றிற் காகத் தான் அது என்பது புலனாகியது.

வார்பாரின் (warfarin) எனும் குருதியுறைதல் எதிரியை (Anticoagulants) எடுப்பவர்கள் மாதாந்தம் குருதியை சோதித்தால் தான் எடுக்கின்ற வார்பாரின் அளவினை நிர்ணயிக்க முடியும். ஆகவே வழமை போன்று மார்ச் 3ந்தேதி Dr. இராஜேஷ் மருத்துவ கூடம் சென்று குருதி கொடுத்து விட்டு வந்தேன். மறு நாளே Dr. இராஜேஷ் இடமிருந்து அழைப்பு வந்தது. உங்கள் ஈமோகுளோபின் மட்டம் மிகக் குறைவாக உள்ளது. எனவே இங்கு வாருங்கள் என்றார். வெள்ளிக்கிழமை சென்றேன். நடப்பதே கஷ்டமாக இருந்தது. மயக்கம் வரலாம் போல இருந்தது. எனது ஈமோகுளோபின் மட்டம் 70 ஆகக் குறைந்தமை தான் இதற்கான காரணமென்றவர் என்னை வீட்டிற்குச் செல்ல விட மறுத்தார். தனது உதவியாளர் ஒருவரை அழைத்து குறிப்பு ஒன்றினைக் கொடுத்து, சேரை சென்ரினறி வைத்தியசாலையில் கொண்டு போய் சேர்த்துவிட்டு வா. நான் அவர் பிள்ளை களுக்கு அது பற்றி அறிவிக்கிறேன் என்றார். விசுவாசமிக்க உதவியாளர் அவர் சொற்படி இயங்கியமையால் என்னை அவசரசிகிச்சைப் பிரிவில் எடுத்தனர். மிக நல்ல கூட்டம் இருந்தது. ஆனால் ஊழியர்கள் மிக நல்லவர்களாக இருந்தமையால் என்னை உடனடியாகவே உள்ளெடுத்து அவதான கூடத்திற்கு அனுப்பி வைத்தனர். அங்கே ஏதேதோ நடந்தது, அதெல்லம் இங்கே தேவையில்லை. ஆனால் ஐந்து நாள் அவர்கள் விருந்தினராக இருந்தேன் என்பதும் நான்கு அலகுகள் குருதி ஏற்றினார்கள் என்பதும், 70தில் இருந்த ஈமோகுளோபின் 96 ஆகியது என்பதும் விசேட தகவல். வீட்டிற்குப் போய் உனது உதரக்குடலியல் நிபுணரைக் கொண்டு மேற்கொண்டு பரிசோதனைகள் செய் எனக் கூறி அனுப்பி விட்டார்கள். ஆகவே வீடு வந்தேன்.

மகள் அந்த ஐந்து நாட்களும் வந்திருந்த கடிதங்களைக் கொண்டு வந்து தந்தார். ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்தேன். ஒன்றில் மாநகர சேவையிலிருந்து வந்த பயன்பாட்டிற்கான சிட்டை (Utility bill) இருந்தது. பிரித்துப் பார்த்தேன். வைத்திய சாலையில் இருக்கும் வரை குறைவு அழுத்தத்தில் இருந்த எனது குருதி அமுக்கம் எகிறிப் பாய்ந்தது. காரணம்? வந்த சிட்டையில் ஒக்ரோபர் 2013 முதல் பெப்ரவரி 2014 வரைக்கான காலாண்டுக் கட்டணம் $745-09 எனக் குறிக்கப்பட்டிருந்தது. மார்ச் 24ந்தேதி இத்தொகை எனது வங்கிக் கணக்கில் இருந்து அறவிடப்படும் என குறிக்கப்பட்டிருந்தது. நகரசபையின் பற்றுவாடாக்கள் யாவற்றையும் அந்தந்த மாதம் எனது வங்கிக் கணக்கில் இருந்து அறவிடுவதற்கான உத்தரவை நான் முன்கூட்டியே கொடுத்திருந்தேன். ஆகவே உடனடியாகவே போராட்டத்தில் இறங்க வேண்டியது அவசியமாகியது. பயன்பாடு சேவைகளுக்கான பிரதிநிதியின் தொலை பேசி எண்ணினை அமுக்கினேன். "பலர் வரிசையில் உள்ளார்கள். உனக்கும் காலம் வரும் பொறுமை பேணு, தொடர்ந்து அப்படியே நில்" என்று குரல் வந்தது. அர்ச்சுனன் பசுபதாஸ்திரம் பெறுவதற்கு ஒற்றைக் காலில் நின்று தவம் செய்தானாம் நான் ஒற்றைக்கையால் தொலைபேசியைக் காதிலே வைத்தபடி கண்களைத் தொலைக் காட்சியில் விட்டபடி தவமிருந்தேன். இடையிடையே 'தொடர்ந்து நின்று கொள்' என அசரீரி கேட்டமை நம்பிக்கையை கொடுத்தது. தொலைக்காட்சியில் ஒரு தொடர் முடிந்து இரண்டாவதும் ஆரம்பமானது. ஒரு பெண்மணியின் இன்குரல் தொலைபேசியில் ஒலித்தது. என்ன பிரச்சினை என வினவியது. தாயே! நான் இன்றுதான் வைத்தியசாலையிலிருந்து வீடு வந்தேன். உடனடியாகவே திரும்பிப் போக வைக்கிறது உங்களிடமிருந்து வந்த பயன் பாட்டுக்கான சிட்டை. 'அது என்ன அப்படி யான பிரச்சினை. உனது பற்றுக் கணக்கு எண்ணினைச் சொல்வாயா பார்க்கிறேன்' என்றார். கொடுத்தேன். பார்த்தார். பகர்ந்தார். இங்கே மிகத் துலாபாரமாகத் தெரிகிறதே. நான்காவது காற்பகுதியாய 2013 ஒக்ரோபர் முதல் 2014 பெப்ரவரியில் நீ மிக அதிகம் நீர் உபயோகித்துள்ளாய். அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டியது தானே. அம்மணி! நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையுடன் கேட்கிறாயா என்றேன். சொல் என்றார். இது கோடை காலத்துக்குரிய கட்டணம் என்றால் நான் மறு பேச்சில்லாமல் ஏற்றிருப்பேன். நான் ஒரு பூக்கண்டுப் பைத்தியம். நிறையவே நீர் பாய்ச்சியிருப்பேன். இது குளிர் காலம். குளிப்பது கூடக் குறைவு. எனவே இங்கே பிழை உள்ளது என்பது உண்மை என்றேன். இப்போ நான் சொல்வதை நீ கேள் என்றார். நியாயமானதாக இருந்தால் கேட்கிறேன் என்றேன். கேள் என்றவர் முதலாவதாக எமது அளவீட்டு கருவி பிழை விடமாட்டாது. இரண்டாவது, நீரோடு குழாய்களில் எங்காவது ஒழுக்கு இருக்க வேண்டும், மூன்றாவது இந்த காலப் பகுதியில் நீ அளவுக்கு அதிகமாக நீரை உபயோகித் துள்ளாய். இதென்னடா சங்கடம் இப்போ நான் வாயைத் திறக்கட்டுமா என்றேன். சொல் என்றார் வேண்டா வெறுப்பாக. அம்மணீ நான் ஒரு போதும் அந்த அளவீட்டுக் கருவிமேல் குற்றம் சாட்ட வில்லை. நீரோடு குழாயில் எங்கும் ஒழுக்கு இருப்பதாயும் இல்லை. நான் அதிகமாக நீர் உபயோகித்ததும் இல்லை. எனவே என நான் கூறுமுன்னரே ஒன்று செய் இன்று இரவு படுக்கப் போகு முன்னர் அளவீட்டுக் கருவியில் உள்ள எண்ணைக் குறி, நாளை காலையில் எழுந்ததும் நீரினை உபயோகிக்கு முன்னர் அளவீடினை எடு. இந்த இரண்டினையும் நாளை எமக்கு எடுத்துக் கூறு என்றார். உங்கள் பெயர் என்றேன். பெயரைச் சொன்னார். பிள்ளைகள் சிரத்தையாக இரவும் காலையும் அளவீட்டுக் கருவியில் உள்ள எண்ணிக்கையை எடுத்துத் தந்தனர். நான் அழைத்தேன் ஒரு பெண்மணியின் குரல் ஒலித்தது. முதல் நாள் பேசிய பெண்மணியின் பெயரைக் கூறி அவருடன் கதைக்கலாமா என வினவினேன். அவர் இன்னொரு வாடிக்கையாளருடன் பேசுகிறார் நான் உதவி செய்கிறேன். உனது கணக்கு எண்ணினைக் கூறு. கூறினேன். உனது கோவையில் குறிக்கப் பட்டுள்ளது. இரண்டு எண்ணிக்கையும் கூறு என்றார். கூறினேன். அப்போ ஒழுக்கு இல்லை என்பது உறுதியாகிவிட்டது. எனவே நீ இந்தத் தொகையினைக் கட்டவே வேண்டும். வேண்டுமாயின் எமது ஊழியர் ஒருவரை அனுப்பி அளவீடு கருவியைப் பார்த்து வருமாறு பணிக்கிறேன். இரண்டு நாட்களின் பின்னர் எடு. அந்தக் கருவியை வேணுமென் றால் கழற்றி ஏதேனும் பிழை உள்ளதா எனப் பார்க்கலாம். பிழை உண்டெனக் கண்டால் நாம் புதிது ஒன்றினைத் தருவோம். பிழை இல்லை என்றால் முழுச் செலவினை யும் நீயே ஏற்க வேண்டும் எனக் கூறி அன்றைய உரையாடலை நிறுத்தி விட்டார். ஒரு ஊழியர் மறுநாள் வந்தார், கீழே போய்க் கருவியைப் பார்த்தார். அது கச்சிதமாக வேலை செய்கிறது என நற்சாட்சிப் பத்திரம் தந்து விட்டுப் போய்விட்டார்.

இத்தகைய சந்தரப்பங்களிலே எனக்குக் கை கொடுக்கும் ஆபத்பாந்தவராக ராஜா மகேந்திரன் உள்ளார். முன்னொரு சமயம் Direct Energy உடன் ஒரு பிரச்சினை ஏற்பட்ட பொழுது கை கொடுத்துக் காப்பாற்றியவர். எனவே அவரைத் தஞ்ச மடைந்தேன். கதை முழுவதையும் கேட்டவர் இதென்ன அநியாயமாக உள்ளது. எங்கள் வீட்டிலும் மூன்று பேரே வாழுகிறோம். இப்படியான தொகை வரவில்லையே என்றார். இரண்டு உபாயங்கள் சொல்லி அதன்படி செயற்படுமாறு கூறியவர். அவர்கள் அளவீடு கருவியை பார்த்துக் கணக்கு எடுப்பதிலும் வெறும் மதிப்பீட்டிலேயே கிரயம் செய்துள்ளார்கள் என்றார். தான் தேவை யெனில் தனது நண்பர் ஒருவரை அழைத்து வந்து பார்வையிடுவதாகவும் கூறினார். அவர் சொன்ன முதலாவது உபாயத்தின் படி கடந்த நான்கு காலாண்டுகளுக்கும் வந்த சிட்டைகளைப் பார்த்துக் குறித்த பொழுது ஒரு உண்மை புலப்பட்டது. முதல் காலாண்டுக்கான அளவீடு நியாயமானதாக இருந்தது. இரண்டாவது காலாண்டுக்கான அளவீடு கருவிகாட்டியதல்ல வெறும் மதிப்பீடு என்பதைக் காணமுடிந்தது. அடிமாட்டுவிலை என்பார்களே அந்த அளவினுக்கு மிகக் குறைவாக இருந்தது. மூன்றாவது காலாண்டும் மதிப்பீட்டின் படிதான் இருந்திருக்க வேண்டும். ஆனாலும் அது முதலாவதினை ஒத்திருந்தது. நான்காவது உண்மையான வாசகத்தினைக் குறித்தது. எனவே இரண்டாவதில் குறைக்கப்பட்டது இதனுடன் சேர பெரிய தொகை வந்தது. இதை நான் மகேந்திரனி டம் கூறியபொழுது அவர், சேர் இது மதிப்பீடு காரணமாக ஏற்பட்ட குளறுபடி. ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கு 9% கட்டணத்தை அதிகரித்துள்ளார்கள். அதனால் நீங்கள் அதிகம் கட்ட வேண்டி வந்துள்ளது. எனவே இதனை அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள் என்றதுடன் நில்லாமல் மற்றைய உபாயத்தையும் கூறினார். உங்களுடைய வட்டார மாநகரசபை உறுப்பினருடன் பேசுங்கள். அவர் சொன்னால் இவர்கள் கொஞ்சம் சிரத்தை எடுப்பார்கள் என்றார். செய்தால் போச்சு என்றேன். அரைக்கிணறு தாண்டிய மன அமைதி கிட்டியது.

மறுநாட் காலை பயன்பாட்டு பிரிவினைத் தொலைபேசியில் அழைத்தேன். காத்திருத்தலின் பின்னர் ஒரு குரல் கேட்டது. அந்த இன்னொரு குரலும் பெண்குரல். ஆதியோடந்தமாக என் சோகக் கதையைக் கேட்டார். சற்றும் கருணையற்றவராக, நாங்கள் அளவீட்டுக் கருவி காட்டுவதன் படிக்கே கட்டணம் அறவிடுகிறோம். அது பிழை செய்யமாட்டாது. அது பிழை செய்து விட்டதாக நான் என்றுமே குற்றம் சாட்டிய தில்லையே என்றேன். அப்படி என்றால் பிரச்சினை பண்ணாமல் கட்டணத்தைச் செலுத்துவது தானே என்றார். அம்மா தாயே! இங்கே தவறிழைத்தது மனித ஜென்மங்களே அன்றி மெசின் அல்ல. மதிப்பீட்டு அளவை செய்தது மனிதர். அவர்கள் இரண்டடவது காலாண்டில் பெரும் தொகையைக் குறைத்து விட்டதால் அத்தொகையை நாலாவது காலாண்டில் மெசின் ஈடு செய்து விட்டதை உணர்வீர்களா என்றேன். எனது விளக்கத்தை அவரால் விளங்கிக் கொள்ள முடியாமையோ அல்லது விளங்க முனையாமையோ தெரியவில்லை. அவர் மீண்டும் பழைய பல்லவியையே வாசித்தார். நீ நான்காவது காலாண்டில் அதிக நீர் பாவித்ததாக எமது கருவி காண்பிக்கிறது. எனவே அதனைக் கட்டியே தீர வேண்டும் என்றார். எனக்கும் சற்றுக் கோபம் வந்துவிட்டது. இப்படித் தான் நீங்கள் ஏமாற்றி ஏழை மக்களிடம் பணத்தைப் பறிக்கிறீர்களா என்றேன். அவருக்கு இந்தக் கூற்று கோபத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்றார். நான் மேலதிகாரி யிடம் போவேன் என்றேன். போ! அவரும்



**பொன். கனகசபாபதி**
**அதிபர்**

தொடர்ச்சி 37ஆம் பக்கம்




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
Niru BRAND ®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru Niru
நிரு பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# அன்னையர் தினம்



அன்னை செய்த அருந்தவத்தால் தான்
அவனியில் நான் பிறந்தது
ஆற்றிடவும் தேற்றிடவும் அன்பை
தோற்றிடவும் அவளே செய்தது
பெற்றெடுத்து பேர் கொடுத்த அவள்
பேசுகின்ற தெய்வம் அல்லவோ
பூவிழி ஓரம் ஓர்துளி நீரும் நான் வடித்தால்
அவள் தாங்கவேமாட்டாள்
ஓடியே வந்து ஏனடா கண்ணா உனக்கு
யார் அது அடித்து நீ அழுகிறாய், இங்கே
பாரடா கண்ணா நான் இருக்கிறேன்
நீ அழாதே என வாரியே அணைத்து
கண்ணீரினைத் துடைத்து மார்புடன் அணைப்பாய்
பசிக்குது என்று ஒரு குரல் கேட்டால் உடன்
ஓடியே வந்து அன்போடு அரவணைத்து
அள்ளி சோற்றினை அமுதென அளிப்பாய்
பள்ளிக்கு சென்று பாடங்கள் படிக்க
என்னை பக்குவம் பார்த்து அனுப்பி வைப்பாய்
பின் பள்ளியால் வர படலையில் வந்து வீட்டுக்கு
பக்குவமாய் கூட்டிச் செல்வாய்
அன்பு என்ற சொல்லே அன்னை வடிவில் வந்தது
அவள் சொன்ன வார்த்தையிலே தான்
நான் தந்தையைக் கண்டது
அன்பு என்னும் கூட்டிலே ஆடிப்பாடிய அன்னையே
அவனியில் நீ இல்லை என்றாலும் நான்
அன்புத் தீபம் ஏற்றியே அன்னை உன்னை போற்றுவேன்
மறுபிறப்பு என்று ஒன்றிருந்தால் அவனியில்
மறுபடியும் நீ பிறந்து எனக்கு அன்னை ஆக வேண்டும்.

**கவிநாதம் - ச. பரந்தாமன்**

# பெண்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

இதனையே சொல்வார் என்றார். எண்ணினைத் தர முடியமா என்றேன். தந்தார்.

தம்பி கதிர்காமநாதன் தலைவர் அமிரின் தீவிர விசுவாசி. கனடாவில் அவர் என்றுமே அமிர் நாமத்தை எம் போன்றவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருப்பார். இதனால் அவர் எனக்கும் விசுவாசி. எமது வட்டார நகரசபை உறுப்பினர் றேமண்ட் சோவின் தொண்டர்களில் ஒருவர். எனவே விசயத்தை அவரிடம் சொன்னேன். அவர் துரிதகதியில் இயங்கியமையால் மறுநாளே றேமண்ட் சோவின் செயலாளர் கிறேஸ் என்னுடன் தொடர்பு கொண்டு சகல விபரங்களையும் கேட்டார். அவரும் அதே வேகத்தில் செயற்பட்டமையால் பயன்பாட்டுத்துறையின் மேலாளர் மறுநாள் என்னை அழைத்தார். நான் வீட்டில் இல்லாமையால் தொலைபேசியில் செய்தி விடுத்தார். மறுநாள் நான் அழைத்தபோது கிடைத்தார். நான் அழைத்ததன் நோக்கத்தை ஆதியோடந்தமாக விபரித்தேன். பழைய கிழவி கதவைத் திறவடி என்ற பாணியில் தான் அவரும் பேசினார். உனது நீர்த் தொகுதியில் எங்காயினும் ஒழுக்கு இருக்க வேண்டும் என்றார். அப்படி ஒன்றும் இல்லையென நான் கூறுகையில் அவரும், உப்படித் தான் எல்லோரும் சொல்லுவது என்றார். அது இல்லையென்றால் நான்காவது காலாண்டில் அதிக நீர் நீ பாவித்திருக்க வேண்டும் என்றார். ஆண்டவனே இந்தக் கொடிய குளிர் காலத்தில் நான் அதிகம் நீர் பாவிப்பதற்கு பைத்தியக்காரனா என்றேன். அதோடு மொத்தமாக நீர் உபயோகித்த தொகையினை நான் மறுக்கவில்லை. உங்கள் வீட்டில் எத்தனை பேர்கள் உள்ளீர்கள் என்றார். மூன்றே மூன்று பேர் மாத்திரமே உள்ளோம் என்றேன். யாராவது விருந்தினர்கள் வந்தார்களா என்றார். ஒருவரும் என்னை எட்டிப் பார்த்ததும் இல்லை என்றேன். தயவு செய்து கொஞ்சம் உன்னிப்பாகப் பாருங்கள். இரண்டாவது காலாண்டில் மதிப்பீடு செய்த தொகை மிகக் குறைவு. எனவே நான்காவதில் அத்தொகை சேர்ந்துள்ளது என்றேன். சற்று யோசித்தவர், ஒரு தவறுதல் இருப்பதாகத் தெரிகிறது. எனவே நான் இதனை மீள்பார்வைக்கு எடுக்கிறேன். அப்போ தவறு நிவர்த்திக்கப்படும். மேலதிகமாக உன்னிடம் அறவிடப்பட்ட பணம் உனது அடுத்த காாலாண்டுக்கான கட்டணத்திற்கும் அதற்குப் பின்னர் வரும் கட்டணத்திற்கும் சேர்க்கப்படும் எனத் திருவாய் மலர்ந்தார். நன்றி ஐயா என ஒரு நெடிய பெருமூச்சு விட்டேன். அவர் ஏதேனும் மூஞ்சூறு என எண்ணினாரோ தெரியவில்லை, தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நான் மூன்று பெண் ஊழியர்களிடம் பேசி உள்ளேன். எத்தனை முறை எடுத்துக் கூறியும் அவர்கள் என் பக்கத்து நியாயத்தைப் புரிந்து கொள்ளவில்லையா அல்லது புரிந்து கொள்ள விரும்பவில்லையா, பெண்புத்தி பின்……..யா?



## நகைச்சுவைத் தொடர் 288
# ராசம்மா ராச்சியம்
கலகலப்பு நீசன்



எங்கே தேடுவேன்….



மார்ச் 8 வானில் மாயமான விமானம் எங்கே….?

கொரியாவில் கடலில் மூழ்கிய பயணிகளின் எஞ்சிய உடல்கள் எங்கே…?



நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவர்கள் எங்கே…?



ஒளவையார் வேலைப்பிடித்ததென்ன என என்ன.. என்ன என கேள்வி கேட்பது போல செக்கண்ட் புளோர் செல்லம்மா கேட்டுக் கொண்டிருக்க எங்கடை மேயர் இப்ப எங்கை உலகண்ணை என்றவாறு வந்தா ஆட்டிலறி அன்னம்மா…

எதைத்தேடுவது, எதை விடுவது எனத்தெரியாது அரசுகள் திணறுகின்றன. எந்தச்செய்தியைக்கேட்பது எதை புறக்கணிப்பதெனத் தெரியாது மக்கள் திணறுகின்றனர்….

மறைந்த மலேசிய விமானத் தேடுதலில் அவுஸ்திரேலிய அரசு கிட்டத்தட்ட 83 மில்லியன் டொலர்களை செலவு செய்துள்ளதாம்.

என்ன எப்படி நடந்தாலும் எனக்கென்ன எனும் பாணியில் ஐ.பொட்டை நன்றாக சார்ச் செய்து இந்திய தேர்தல் முடிவுகள் எப்போ வரும் என்ற ஆர்வத்துடன் காத்திருக்கிறா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.



மன்மோகன் சிங் 10 வருடங்கள் பதவி வகித்து இப்போ பிரியாவிடை பெற்று கண்கலங்கியபடி போனாராம். இனி..என்ன செய்யப்போகிறார் என சிரித்தபடி செக்கண்ட் புளோர் செல்லம்மா கேட்க…கொஞ்சம் பொறு லெக்சன் றிசல்ற் வர கனபேற்றை கதிரை வெளியாகப்போகுது.. அப்ப யோசிப்பம் எனச்சொல்லி சிரிச்சா ஆட்டிலறி அன்னம்மா…



உக்கிரேன் சண்டை ஓயவில்லை…

அமெரிக்க துப்பறியும் குழு நைஜீரிய மாணவர் கடத்தலை முறியடிக்க தொழில் நுட்பம் கூடிய வேவு விமானங்கள் ஆங்காங்கே பறக்கின்றன.



அலைகள் ஓய்வதில்லை என்பது போல

கலவரங்கள் ஓய்வதில்லை ஆங்கிலேய ஆட்சியிலிருந்து அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறினாலும் கலாட்டா... கலவரம்... உயிரழிப்பு போகவில்லை…. அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்து நடந்துகொண்டதான் இருக்கின்றன.



1958…..1977…1983…..அப்படியே தொடர்ந்து...மே 18, 2009 அழிவின் உச்சம் பலர் மடிந்தனர் பலர் மறைக்கப்பட்டனர்.
இன்றுவரை விசாரணை நடக்கிறது. விளக்கங்கள் இல்லை…



முறைந்தவர்களுக்கு அஞ்சலிசெலுத்த இராணுவம் காவல் கண்ணீர் விடவும் கட்டுப்பாடு

## மே..15..31



18 போர்க் குற்றநாள் (2009)

19. விக்ரோறியா டே - விடுமுறை நாள்

20. டைரக்ரர் பாலு மகேந்திரா பிறந்தநாள் (1934 … 2014)



22. 1958 இலங்கையில் இனக்கலவரம் சிங்களக் காடையர்களால் (அரச உதவியுடன்) பல தமிழர்கள் கொல்லப்பட்டு சொத்துக்கள் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

22. 1972 சிலோன் ஸ்ரீ லங்கா எனப்பெயர் மாற்றப்பட்டு குடியரசென பிரகடனப்படுத்தியது



25. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்தநாள் ..1878….1953 (ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே)

25. ஆத்மஜோதி நா.முத்தையா நினைவுதினம் ……1918….1995

25..பிரபல பின்னனிப்பாடகர் ரி.எம். சவுந்தரராஜன் ஓராண்டு நினைவுதினம்…(1923..2013). (எல்லோரும் நலம் வாழ நான்பாடுவேன்)

25. சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம் (எல்லோரும் நலம் வாழ நான்பாடுவேன்)

26. 1958 கொழும்பில் இனக்கலவரம் வீடுகள் தீக்கிரை சொத்து சூறையாடப்பட்டதுடன் பலர் கொல்லப்பட்டனர்



29. றிச்மண்ட் ஹில் பிள்ளையார் கொடி

31. 1981 மே யாழ்ப்பாணம் பொது நூலகம் பொலீசாரால் அரச உதவியுடன்…. எரியூட்டப்பட்ட நாள்

31. புகையிலை எதிர்ப்பு நாள்





**நாளை ஒதுக்கி வைத்து நல்வரவு தாருங்கள்........**

**நாள்:** Friday, June 13th 2014 Evening 5.00 pm
**இடம்:** Scarborough Civic Centre

வீட்டிலிருந்தே தமிழ் படிக்கத் தொடங்கலாம்!

**வெளியீட்டு விழா! வெளியீட்டுவிழா!**

**"தமிழ் படிப்போம்"**

தமிழ் கற்கவிரும்பும் தொடக்கநிலை மாணவருக்கான பயிற்சி நூல் (தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச் மொழி அறிவுறுத்தல்களுடன் கூடிய நூல்.)

**"வாசிப்போம் எழுதுவோம்"**

(கட்டுரை எழுதும் பயிற்சி: ஆண்டு 2, 3) (தொடக்க நிலை வகுப்பிற் தமிழ் கற்கும் மாணவர் சொல்லியங்களை அமைக்கப் பழக்கும் முயற்சி.)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். நன்றி.
இவ்வண்ணம், அன்புடன்,
சபா. அருள்சுப்பிரமணியம் M.A.
Thamil Poonka. 328, Passmore Ave.# 25, Scarborough
905. 479.5375 / 647.378.3006

# GAS STATION FOR SALE




**HWY 403 / King George Rd - Brantford**

BUSY ESSO ON THE RUN FOR SALE
IN TOWN, RENOVATED EXTENSIVELY.
NOI OVER $200,000. ASKING ONLY $1.99M
POTENTIAL FOR EXPANSION TDL/ SUBWAY/
COIN CAR WASH/ OIL CHANGER.
FINANCING HELP AVAILABLE FOR A
QUALIFIED BUYER.






## Nel Ketha

Smart Real Estate Solutions

Sales Representative

416.677.4707

HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

CCIM Individual Member

A Member of Commercial Division



## வாகன விபத்து MOTOR VEHICLE ACCIDENT

SKT PARALEGAL SERVICE

CRIMINAL MATTERS
SUMMARY

416.803.5296

Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்





SK THEESAN

TRAFFIC TICKETS



LICENSED PARALEGAL sktheesan@gmail.com

### MOTOR VEHICLE ACCIDENT

SERIOUSLY INJURED ?

ACCIDENT BENEFITS
PERSONAL INJURY

### TRAFFIC TICKETS

DON'T MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS

### CRIMINAL CONVICTION

PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP

CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE

